உ

சிவமயம்.

பதினெண்சித்தர்களில் மகா மகுத்துவம்பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# ஜெனனசாகரம் - ருருஎ.

இஃது,

மதுரை-புதுமண்டபத்தில்

புஸ்தகயாபாரஞ்செய்யம் - ம - ள - ஸ - ஸ்ரீ,

சோ. சுந்தரராஜபிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி,

ஷை-யூர் வயித்தியஞ்செய்யும்

கருப்பையாநம்பியவர்களால்

பற்பல - ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு

பிழையறப்பரிசோதித்து

திருநெல்வேலிப்பேட்டை

வ. மகுதுராவுத்தரவர்களால்

வேலப்பாக்கம்

பொன்னுசாமிமுதலியாரது

பூமாதுவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1884

*Registered Copy right.*

இதன்விலை-அணா—அ.

உ

சிவமயம்

# போகர்-ஜெனனசாகர-வகராதி.


| செய்யுண்முறை | பக்கம். |
|---|---|
| பாயிரங்காப்பு | க |
| சிருஷ்டியின்கலைகள்கூறல் | உ |
| சிருஷ்டியின் அக்ஷரங்கூறல் | ங |
| சிருஷ்டிக்குரியலோகங்களுங்கலைகளுங்கூறல் | எ |
| உருத்திரர்சம்மாரங்கூறல் | உக |
| கணேசன்சக்கரத்தைவிழுங்கியதுகூறல் | உங |
| திருப்பதியுற்பவங்கூறல் | உரு |
| சுப்பிரமணியர்உற்பவங்கூறல் | உசு |
| தசரதனுற்பவங்கூறல் | உஎ |
| இராவணனுற்பவங்கூறல் | உஅ |
| இராமனுற்பவங்கூறல் | ,, |
| இராவணசம்மாரங்கூறல் | ,, |
| இராமேஸ்வரமுற்பவங்கூறல் | உகூ |
| திருவரங்கமுற்பவங்கூறல் | ,, |
| பாண்டவர்களுற்பவங்கூறல் | ங௰ |
| ஜெகன்னாதமுற்பவங்கூறல் | ஙஉ |
| கல்-பெண்ணுருவானவைகூறல் | ஙங |
| தன்னையறியும்விபரங்கூறல் | சங |
| மலைவளங்கூறல் | ருக |
| மறைப்புமைகூறல் | ருங |
| கெந்தகபருவதத்தின்பெருமைகூறல் | ருரு |
| தன்னுக்குட்டலங்கள்கூறல் | சுங |
| சதுரகிரியின்பெருமைகூறல் | சுகூ |
| அழகர்மலைவளங்கூறல் | எக |
| அண்டபிண்டமறியச்சாட்சிகூறல் | அச |
| மிலேச்சருண்டானவைகூறல் | அரு |
| ஆதிநந்தி | ,, |
| பத்தியங்கூறல் | அசு |
| கற்பங்கூறல் | அஎ |
| பாஷாண வேதைகூறல் | கூங |

| செய்யுண்மூறை | பக்கம். |
|---|---|
| இரசச்செந்தூரம் | ௯௫ |
| உருக்குப்பொடிச்செந்தூரம் | ,, |
| தாம்பரச்செந்தூரம் | ௱ |
| குடவன்செந்தூரம் | ௱௧ |
| துருசுசுன்னம் | ௱௪ |
| வெள்வங்கச்சுன்னம் | ,, |
| தாம்பாபற்பம் | ௱௫ |
| வெள்வங்கக்கட்டு | ௱௧௮ |
| கெந்தகத்தயிலம் | ௱௨௧ |
| இதுவும்-வேறு | ௱௨௨ |
| கெந்தகபற்பம் | ,, |
| இதுவும்-வேறு | ௱௨௩ |
| விஷங்கள்தீரபற்பம் | ௱௨௪ |
| விஷமிரங்கமோகிரம் | ௱௨௫ |
| விஷமிரங்கநசியம் | ,, |
| விஷமிரங்கப்புகை | ,, |
| விஷமிரங்கவேறுவகைகள் | ௱௨௬ |
| எலிகடிவிஷந்தீர | ,, |
| மழைஇடிவிலகமணி | ,, |
| மிருகங்கள்விலகமூலிகை | ,, |
| பேய்களைவிரட்டமூலிகை | ௱௨௭ |
| தலைமுழுகத்தயிலம் | ,, |
| எருக்கன்தயிலம் | ௱௨௯ |
| தேவதைகள்சித்திகூறல் | ௱௩௰ |
| வேதாந்தங்கூறல் | ௱௩௧ |
| கிரகதிசைகூறல் | ௱௩௫ |
| பீஜவாரங்கூறல் | ,, |
| சவரித்தயிலம் | ௱௩௭ |
| ஆவின்கொம்பின்மை | ,, |
| வெட்டிவேர்தயிலம் | ௱௪௩ |


அகராதி-முற்றிற்று.

உ

சிவமயம்.

இஃது - கோகுலாபுரம்

# அருணாசலமுதலியாரால்

இயற்றிய

## சிறப்புப்பாயிரம்.

ஆசிரியப்பா.

சீர்மலிகிலநீர் தீக்கால்வானமாய்
ஏர்மலிந்திலகு மிணையிலானருளால்
அணிமாவாதி யஷ்டசித்துகளுந்
திணிகொளுமியம நியானவஷ்டாங்க
யோகமும்வாய்ந்த வொருபதினெண்மருண்
போகமாமுனிவர் புகன்றவிந்நூலை
இடம்பெறவோங்கு மிருநிலமதனுண்
கடம்பவனமெனக் கழுமாலவாயலின்
வேதவாயினர்முதன் விளங்குநால்வருணரும்
ஓதுதற்கரிய வுயர்மண்டபத்திற்
பொற்புளோர்மகிழ புத்தகவர்த்தகம்
இப்புவிமதிக்க விழைத்திடும்புனிதனுஞ்
சுந்தரராஜ சுகுணனென்போனும்
பந்தமாய்க்கேட்டபண்பதுகொண்டே
ஆயுருவேதத் தமர்ந்தசிலாக்யன்
தாயினுமினிய தயாளுவாமியோக்யன்
கறுப்பையாநம்பிக் காவலன்றனது
பொறுப்பெனவெண்ணிப புந்தியுண்மகிழ்வாய்
பற்பலவேட்டுப் பிரதிகளைக்கொண்டு
எற்படவெழுதி யீந்தவைதன்னைச்
சென்னையம்பதியிற் றிகழ்காராளருண்
நன்னயத்தோர்க்கெலா நல்கவென்றோங்கும்
பொன்னுசாமியெனும் பூஜிதனமைத்த
மன்னுபூமாது வண்ணேந்திரத்தில்
அச்சிட்டுலகெலா மார்ந்திடச்செய்த
உச்சிதமகம்மது வுயர்குலத்துற்ற
மகுத்தெனுமிந்திரன் மருவியசீர்த்தியைப்
பகுப்பவரெவரோ பார்மிசைமாதோ.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

சிவமயம்.

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# ஜெனனசாகரம் - ருருஎ.

## பாயிரம் - காப்பு.

அண்டரண்டங்கடந்தபொருள்நிற்குணமாய்நின்ற
அளவில்லாநிர்மலமேசூட்சாசூட்சம்
எண்டிசையும்பரந்துநிரஞ்சனமேயாகி
ஏகசச்சிதானந்தப்பாலஞானம்
கொண்டதொருபூரணமெந்நாளுங்காப்பு
குறியானவொளியாளும்வெளியாளுங்காப்பு
புண்டரிகவெளியொளிப்பாள்சுழினைமோனம்
போதமுறும்வேதாந்தங்காப்புதானே. (க)

## இதுவுமது.

ஆதியந்தம்வாலைகுருபாதம்போற்றி
அம்பிகையாள்சேயர்சித்தர்பாதம்போற்றி
நீதியென்றகாலாங்கியையர்பாதம்
நிலைபெறவேவணங்கிநன்றாய்தீட்சைபெற்று
சோதியென்றநதிமூலஞ்செப்பக்கேளு
சொல்லரிதாய்நின்றதொருசித்தர்மூலம்
ஓதிநின்றகணபதிவல்லபையின்மூலம்
உற்றுநின்றமூலமெல்லாமுரைக்கின்றேனே. (உ)

## நான்முகம்-ஞானங்கூறல்.

உரைக்கிறேனுதிசித்தனொருவனப்பா
வொருவனுமேவல்லவடாப்ரம்மம்ப்ரம்மம்
கரைக்கிறேன திலிருந்துகலைசிறுத்துக்
காலாகிப்பிரிந்துதிதிபிண்டமாகி
நிரைக்கின்றவாணுமதுபெண்ணுமாகி
நிறைவாகப்திருறுகலையும்பூண்டு
திரைக்கிறேனவனொருத்தியல்லாவில்லை
தேவியுடசிருஷ்டிப்பைச்செப்பக்கேளே. (௩)

கேளப்பாவவளுடையதியானத்தாலே
கெடியாகத்தான்பிரிந்தமூலம்பார்த்து
ஆளப்பாவந்தவொருமூலத்தாலே
வழகாகசிருஷ்டித்தாளொருவனைத்தான்
வாளப்பாவொருவனுந்தான்வஞ்சகத்தால்
வந்தவழிசொல்லுமென்றுன்வாலையைத்தான்
பாளப்பாவொருவனுமேயில்லையில்லை
பாப்ரம்மமூலத்தாற்பிறந்தேன்பாரே. (௪)

## சிருஷ்டியின்கலைகள்கூறல்.

பரப்பாப்ரம்மமென்றசோதிக்குத்தான்
பரிவானகலையதுவாயிரத்தெட்டாகும்
சேரப்பாநான்பிறந்தகலைகள்தானுஞ்
சேர்ந்ததடாவன்பத்தியொன்றுங்கூடி
ஆரப்பாவாணுமொருபெண்ணுமான
வட்சரமுமதுதானுமைம்பத்தொன்று
வேரப்பாவொன்றுனவட்சரத்தால்
விதமெல்லாமறிந்ததடாயானுங்காணேன். (௫)

காணப்பாவைம்பத்தியொன்றுக்குத்தான்
கண்ணாகத்திறந்ததடாவொன்றுதானுந்
தோணப்பாவந்தவொருகண்ணினாலே
துலங்கவேயான்பிறந்தமூலங்கண்டேன்

காணப்பாகருவிதானகாதென்றும்
  நாதமென்றவோசையதுவேணுமென்றும்
பூணப்பாவதிற்சிறிதுகலைபிரிந்து
  பூரணமாயுந்தனையுஞ்சிருஷ்டித்தேனே. (௬)

இட்டித்தகலையதுதானெத்தனையோசொல்லுந்
  திரண்டதொருவிபரமதுதெரியச்சொல்லு
மட்டித்தகலையதுதானேமூன்றப்பா
  வதிகாரமோகமதாம்சிருஷ்டிசெய்தேன்
வட்டித்தகலையதுதான்வாலையாகி
  வந்ததடாமுகமைந்துகையும்பத்தாய்
எட்டித்தவுனக்கெனக்குமூலமப்பா
  யேகபரஞ்சோதியடாயெண்ணிக்கொள்ளே. (௭)

கொள்ளவேவைம்மூன்றுகலைக்குத்தானுங்
  குறியானவெளியொளிதானதுதான்சொல்லும்
விள்ளவேவெளிதானீபல்லாலில்லை
  விளங்கின்றவெளியதுதான்யென்னுக்குள்ளே
நள்ளவேயிதையறிவதேதுமைந்தா
  நானறியச்சோதியென்றகண்ணேவேணும்
வள்ளவேசோதியென்றகண்ணைசொன்னால்
  வகைமோசமெத்தவப்பாசொல்லொணாதே. (௮)

சொல்லாதேசேதியதுயில்லாவிட்டாற்
  சூட்சமதுவறிவதுதானேதுயேது
கல்லானயிருளதுதான்வந்துமூடுங்
  கண்பத்துமிருந்தகனலாவதேது
நல்லானசோதியதுஞானமாகும்
  ஞானமென்றகண்போனாலுயிரேயில்லை
வல்லானகண்ணையுந்தான்வாயிற்சொன்னால்
  வகையேதுமுனககில்லைவழுங்கினேனே. (௯)

## சிருஷ்டியின் அக்ஷரங்கூறல்.

வழங்கினேன்சிவனென்றுஞ்சிவந்தானென்றும்
  வல்லதோரட்சரமூன்றிருக்கவேதான்

களங்கமறவென்னையும்நீகேட்பதென்ன
கடைதலையுமானதுவுமதுவேயாகும்
துளங்கவேநால்மூன்றட்சரமேயானல்
தோன்றிநீயெதுவனாக்குமட்சரமேசொல்லும்
விளங்கவேயைம்பத்திலொன்றிலப்பா
விளங்கிநின்றவட்சரந்தானொன்றுதானே, (ய)

தானென்றவட்சரந்தானெதுதான்சொல்லாய்
தப்பிலேயோயினிமேலட்சரம்வேறுண்டோ
வேனென்றப்ரம்மமதுக்காயிரத்தெண்கலைதான்
வீடுபோலதுவுமொருவுயிருமாச்சு
நானென்றப்ரம்மத்தின்கண்ணுமானே
ஞட்டினேன்கால்தலையோடுடலுள்ளந்தான்
ஊனென்றவட்சரந்தான்வேணுமென்று
லுயிரானப்ரம்மத்திலூணிப்பாரே. (யக)

ஊணியதுபார்க்கவென்றுற்கண்தானெங்கே
யுடம்பதனைக்கண்ணாலேப்பார்ப்பதுண்டோ
ஆணியதாயிருப்பிடத்தைச்சொன்னயானு
லறிந்துநானந்தவழிதிறந்துபார்ப்பேன்
தோணியதோர்காலாலேயறியவேணுந்
துலங்கிவிடுமப்பவல்லோமூலமெல்லாம்
வாணியென்றகாலாலேயறியாவிட்டால்
வல்வினைமும்மெத்தவடாதலைகாணுதே. (யஉ)

காணுதுவென்றுசொல்லியுனாத்தேவிட்டாய்
காண்பதுநானினியேதுயெதைநான்காண்பேன்
தோணுதுகபடமதாய்சொன்னயால்
துணையொருவரில்லையினிநீயுநானே
பூணுதுயிருந்துவிட்டாலறிவதென்ன
பிழைமோசஞ்செய்யேனுன்சும்மாச்சொல்லு
கோணுதுகோணமடாமுக்கோணமப்பா
கொடிதானசுழிதானேகொளுத்தும்பாரே. (யங)

கொளுத்துமென்றவட்சரத்தைவாயாற்சொல்லக்
கூடாதுவதுசொல்லக்கூச்சமெத்த
வளுத்துமென்றவட்சரமேகொளுத்தும்போது
வந்தவழிகூச்சமதுயெங்கேயெங்கே
பளுத்துமென்றவட்சரத்தைச்சொன்னயானல்
ப்ாதியுடனுந்தனுக்குதத்தஞ்செய்வேன்
தளுத்தவொருவட்சாந்தானிதுதானென்று
தளைந்ததுதானயிரத்தெண்கலையுந்தானே. (யச)

தானென்றகலையதுவேயானுங்கண்டேன்
தப்பியதுவதுதனிலேயொன்றேயுண்டு
வேனென்றவட்சரத்தைக்கூடச்சேர்த்தால்
வெண்மைநிறங்காணுமதுவிளைந்துபாரு
கோனென்றவட்சரத்தையெங்கேவைத்துக்
குறிபாகவறிவதற்குயிடத்தைச்சொல்லு
நானென்றவீடுதனில்நாதவீடு
நயனத்தின்மேலானசுழினைபாரோ. (யரு)

பார்க்கவேவட்சரத்தைச்சுழினைவைத்துப்
பரிவாகக்கண்டுதங்கேப்ரம்மசோதி
ஏர்க்கவேயட்சரமோரஞ்சுசேர்க்க
வெனதுமுகமைந்துமைந்துவருணமாச்சு
சேர்க்கவறியாதவாலைப்பெண்ணேநீதான்
செயமானவட்சரம்நீசொன்னதல்ல
தாக்கபரப்ரம்மந்தான்யெனக்குச்சொல்லத்
தட்டுருவிப்பாய்ந்துதந்தசோதிதானே. (யசு)

சோதியென்றவிழிதிறக்கவக்கினியுமாச்சு
சோமசூரியனக்கினியுமூன்றுமாச்சு
வீதியென்றவக்கினியின்விழியாற்றனும்
விழித்தங்கேபார்க்கையிலேபத்தித்தையோ
நாதியென்றபேர்களுமோர்வொருவரில்லை
நானொருவன்தான்தனித்தேனந்தவேளை
ஓதியென்றபெண்ணையுந்தான்நானும்பார்த்து
வுடற்பாதிகொடுக்கவுந்தான்தேடினேனே. (யஎ)

தேடினேனாதாரமொன்றுமில்லை
திரண்டுருண்டப்ரம்மத்திலின்றுக்கொண்டு
சாடினேன்றிரைசத்திசமைத்தேனப்பா
சலனமில்லாப்பீடமதாய்போட்டேனென்றே
கூடினேன்வொருத்திதனைசிரசிற்கொண்டேன்
கூட்டோடேதானணைந்தேன்வொருத்திதன்னை
காடினேன்வொருத்திதன்னையேவற்காக
சாயவியாள்பாதமதில்வைத்திட்டேனே. (௰௮)

வைத்திட்டேன்சத்திகளோநாலுபேர்கள்
வகையானவாதிசத்திபராசத்தியோடு
மொய்த்திட்டஞானசத்திவாலைசத்தி
முதலானநால்வருக்கும்பங்காயிந்து
சித்திட்டமுகம்நாலுமவரவர்க்குச்
சமபாகஞ்சேர்ந்துநானங்கேநின்றேன்
ஒத்திட்டேனொருமுகமும்ப்ராம்மத்தோடே
யுறவாகப்ரம்மமுகமானேனப்பாரோ. (௰௯)

பார்க்குமென்றபீடசத்திரூபந்தானும்
பரிவானகலையிருநூற்றிருபத்திநாலாம்
ஏர்க்குமென்றசத்திதான்பிரிதிவியுமாளு
ளென்னசொல்வேனவளுடையவுடல்வளப்பம்
மார்க்கமென்றவப்புவதுரத்தமாச்சு
மைந்தனேதேயுவென்றபிந்துமாச்சு
தீர்க்கமென்றபுல்பூடுவிருட்சமெல்லாந்
திறமானரோமமதுவாய்வுமாச்சே. (௨௰)

ஆச்சுதென்றேயவளுடனன்கலந்ததாலே
யாகாசமுதலாகவஞ்சுமாச்சு
வாச்சுதென்றபொன்மேரு * ரசிதமேரு
வல்லபையாள்தனமிரண்டுமாகுமாகும்
நீச்சுதென்றேபானுமேசேர்ந்தபாகம்
திருவாணிவென்னியிடமெருமாச்சு

* ரசிதமேருவென்பது-வெள்ளிமலையெனக்கொள்க.

காச்சுதென்றசத்திகிரிசிவகிரியுமாகுங்
　கைலாசகொடிமுடியுமிதுதான்காணே.　　(உக)

காணவேரத்தினமாபரணமாச்சு
　கனமானமேகமதுவஸ்திரமாச்சு
பூணவேஜெகச்சோதிசொல்லப்போகாப்
　பூரணமாய்விளைந்ததெல்லாமவளுக்குள்ளே
ஆணவேயாதிசத்தியாதிவஸ்து
　வவளல்லாலதிகாரமார்க்குமில்லை
தோணவேயாளுமிவள்மூலந்தன்னை
　துலங்கவேகண்டதில்லையென்னுற்றுனே.　　(உ)

தானென்றலட்சுமியுமிவள்தானுகுந்
　தாங்கியதொராட்சாமும்-அவ்வும்-உவ்வும்
வேனென்றபிராணசத்திபிரியாசத்தி
　வேதாந்தசத்தியொடுமூன்றுமாச்சு
நானென்றமேருவதிலிருந்துக்கொண்டு
　நாட்டினேனனேகவிதசிருஷ்ட்டிப்பாகத்
தேனென்றப்ரம்மத்தாச்சரியம்பார்த்து
　தேவியைப்போற்கலைபிரிந்துசிருஷ்டித்தேனே,　　(உ௩)

## சிருஷ்டிக்குரியலோகங்களுங்-கலைகளுங்-கூறல்.

தேனுனகைலைக்குத்திசையெட்டாகுந்
　திக்கெட்டுபாலகர்க்குங்கலையெட்டாகும்
வானுனவயிரவருமிவர்தானுகும்
　வல்லதொருவஷ்டசித்தர்கார்த்திருப்பார்
தானுனகைலைமலையதனைச்சுத்தித்
　தான்வசிக்குங்கிரியெட்டும்வானமுட்ட
பானுனவாயிரத்தெண்கோடிகாதம்
　பாப்பாகவிற்குமிந்தவீதிதானே.　　(உ௪)

விதியும்நால்வீதியுமிப்படியேயாக
　விளங்குசப்தலோகமுமேயிதின்மேலாகும்

ஆதியாமேலோகமேழுக்குந்தா
 னதிதானபூலோகம்வாய்வுலோகம்
சாதியாம்வருணனுடலோகமொன்று
 சாற்றுகிறேன்கதிர்மதியின்லோகமொன்று
நீதியாம்நட்சத்ரலோகமொன்று
 நிகழ்த்துகிறேன்சத்தியலோகம்மேலாமே. (உரு)

ஆமென்றலோகமதுமேலதாகு
 மதிலிருந்துகீழேழுலோகமாகும்
ஓமென்றப்ரம்மகலையாயிரத்தெட்டு
 மொடுக்கியேயீரேழும்நிறைந்தேநிற்கும்
நாமென்றநந்திபதினெட்டுபேர்க்கும்
 நலமானகலைகள்பதினெட்டாய்நிற்கும்
வாமென்றதுவாரபாலாளெட்டுபேர்க்கும்
 வகையானகலையதுதானெட்டுமாச்சே. (உசு)

ஆச்சப்பாயிந்திரர்க்குகலையீரேழு
 மழகானப்ரம்மகலையெட்டொன்றாகும்
வாச்சப்பாவிஷ்ணுவுக்குகலையீராறு
 வளமானருத்ரர்கலைபதினைந்தாகும்
மூச்சப்பாமுப்பத்துமூன்றுகோடி
 முறையானதேவர்கலைமூன்றாகும்
பேச்சப்பாநாற்பத்தெண்ணாயிரந்தான்
 பேரானரிஷிகளுக்குநாற்பத்தெட்டே. (உஎ)

எட்டானஅஷ்டதுர்க்கிகலைதானெட்டா
 மியலானசப்தகன்னிகலைதானேழாய்
அட்டானலட்சுமியாள்யெட்டுபேர்க்கு
 மழகானகலையதுவேபன்னிரண்டாகுந்
திட்டானநவக்கிரகம்வொன்பதுக்குந்
 துடியானகலையிருபத்தேழுமாகும்
வட்டானகதிரவர்க்குப்பதினாறாகும்
 வளர்மதிக்குபதினைந்துகலையுமாமே. (உஅ)

ஆகுமேபிரமனன்னவாகனத்திற்கு
 மழகானகலைமூன்றுமாகுமாகும்

ஆகுமேமாலேறுங்கருடனுக்கு
வழகானகலையஞ்சுமாகிநிற்கும்
ஏகுமேருத்திரனேறும்ரிஷபத்திற்கு
வியல்பானகலையெட்டாய்ச்சேர்ந்துநிற்குந்
தாகுமேயிந்திரனேறும்யானைக்குத்தான்
தப்பாதுகலையேழுதானுமாமே. (உ௯)

ஆமேநமன்கலைநூத்திதொண்ணூத்திரண்டி
லழகுசத்திமூவருக்கும்நாற்பத்தெட்டாம்
நாமேபூதலங்களுக்குப்பதிமூன்றாகும்
ராட்சதர்க்குகலைபத்துநலமாய்நிற்கும்
வாமேவுமநிதருக்குபன்னிரண்டாகும்
மரவிதனக்கலையதுதான்றொண்டேயாகும்
பூமேவுபரவைவிலங்கின்நீர்வாழும்
புகழானவுயிர்களுக்குகலையேழாமே. (௩௰)

ஏழுடனேதத்துவன்னூர்வுயிருக்கெல்லா
மெறும்புகடைமுதல்கலைமூன்றனாதாநிற்கும்
வாளுடனேயாயிரத்தெண்கலையுமாச்சு
வல்லதொருகலையாலேதிஷ்டித்தேனுன்
நாளுடனேவுனைத்திட்டேன்வடுகனுக்கு
நன்றாகவோராயிரத்துயெட்டுமாச்சு
நாளுடனேகைலைக்குமேற்கதாக
நலமானதேசமதுவன்பத்தாரே. (௩௧)

ஆறுனயிதிவிருக்குமானிடர்க்கு
மைன்னூறுவயதுடனேமுழம்நானூறும்
பேறுனவடதிசையிலிதனில்வொட்டி
பிசகாதகீழ்த்திசையில்முழம்நாலுபத்து
கூறுனவயதுமதுமுன்னூறுகுங்
குறியானதென்றிசையோர்முழமோநாலு
தேறுனவயசுநூற்றிருபதாகத்
திசைநாலுமிப்படியேதிஷ்டித்தேனே. (௩௨)

திஷ்டித்தேன்வடக்கிலுள்ளமனிதர்கடெல்லாந்
தெளிஞானமடைவதற்குக்கிடையாதென்றே
அட்டித்தேன்தெற்கிலுள்ளமனிதர்கடெல்லா
மிறவாதயோகமுடன்ஞானமுண்டாம்
ஓட்டித்தேனவர்களுக்குக்கபடஞ்சூது
மோகோகோவாசையதுமெத்தவுண்டு
மட்டித்தேன்மனமதுவுமுறைத்துநின்றால்
மகத்தானசித்தனும்மருவுவானே. (கக)

மருவுவானதிசித்தனுன்றானும்
வளமானபரப்ரம்மந்தானாகும்
உருவானப்ரம்மகலையிந்தேனுர்க்கு
முசத்திபெற்றார்வல்லவர்கள்தவத்தினாலே
கருவானவொனறுபத்துவாயிரமுமாகக்
கண்டல்லோகைலையெல்லாநிறைந்தாரப்பா
தருவானகைலையதுவமுந்தக்கண்டு
தாக்கியேநந்திக்குப்போதித்தேனே. (கச)

தேனென்றதேவர்களைத்திரட்டிக்கூட்டித்
தென்றிசையிலேகவிட்டேனையிம்பேர்
நானென்றரிஷிகளிலேயேழுபேரை
நாட்டியேசெல்லுமென்றுநவின்றேனப்பா
வெனென்றதிசையெங்குமிப்படியேசொன்னேன்
விதமானதேவரெல்லாம்விபரங்கேட்கத்
தானென்றயுகம்நாலுமாறிமாறித்
தான்வருமேதிசைசுத்திதாக்கிப்பாரே. (கரு)

பாரப்பாகலியுகத்துமனிதரெல்லாம்
பரிவானஞானமதுவதிகமாகும்
காரப்பாகைலாசந்தேடிக்கொள்வார்
கருவாகவந்தவர்க்குகருணையீவேன்
சேரப்பாநீங்களுந்தானங்கிருந்து
சிவவடிவாய்ச்சித்தரடிசேரக்கேளு
ஆரப்பாகலியுகந்தானந்தமாறு
லாச்சரியங்கைதட்டிவந்துசேரோ. (கசா)

சேரொன்றேன்தேவரெல்லாமலைத்துநின்றார்
செயமானருத்திரனைக்கூட்டிவந்து
வாரொன்றேகுரிபத்திலவதானமாக்கி
வழகாகவக்கினியில்மூழ்கவென்றே
வாரொன்றேவல்லசித்தரென்றுசொல்லி
வழியாகவோர்க்கலையுமவனுக்கீந்து
தேரொன்றேகஸ்தியாவென்றுகூறித்
திறமானதென்பொதிகைசெல்லென்றேனே. (௩௭)

செல்லென்றேனவன்றானுமென்னைப்பார்த்து
ஜெயமானபிரணவமேவேணுமென்றான்
அல்லென்றேனறுமுகமாகவந்து
வப்பவல்லோவனுக்கிரகஞ்செய்வேனென்றேன்
நல்லென்றேனல்வேதசாஸ்திரமெல்லாம்
நலமானசதகோடிமந்திரமெல்லாம்
வெல்லென்றேன்வேதியராயிருந்துக்கொண்டு
விபரமதாயகஸ்தியர்க்குச்செப்பினேனே. (௩௮)

செப்பினேனிருளுணர்ந்தநாடேயென்றுஞ்
சிறப்பானகதிரவனைத்திருப்பென்றேன்யான்
ஒப்பினேனோர்கலையைக்கொண்டுசென்று
வுப்பானதெக்ஷணத்திற்பொதிகைசேர்ந்தான்
அப்பினேன்தேவர்களெந்தனையும்பார்த்து
வாச்சரியக்கைலாசதேகத்தோடே
நப்பினேனுன்போகேனென்றுசொன்னார்
நாட்டிலேநாருருவாய்ச்செய்யென்றேனே. (௩௯)

செய்யென்றுசொன்னதுவுஞ்சரிதானப்பா
செகத்திலேபிறந்தாலுமூடமாமோ
மெய்யென்றபொருளையெப்படிதான்காண்பேன்
விதமாகச்செப்பிவிட்டாற்போவேனென்றான்
மையென்றவிழியாளைப்பூசைசெய்தால்
வழியென்றகிருபையுந்தான்காட்டுவாள்பார்
ஐயோவென்றனேகம்பேர்வருவாரப்பா
வாதரித்துவப்பவல்லோகண்டுக்கொள்ளே. (௪௰)

கொள்ளென்றேன்தேவரெல்லாமொவ்வொன்றாகக்
குவலயத்திலவதாரஞ்செய்துக்கொண்டார்
விள்ளென்றேனகஸ்தியனாயரக்கர்கூடி
வேதனைகள்செய்தார்களொருவனென்று
வள்ளென்றேயெந்தனையுமனதிலுன்னி
மாய்கையாய்தியானமதுசெய்துக்கொண்டான்
தெள்ளென்றேநந்தியைத்தானும்பார்த்து
திறமானவிடுக்கமதுதீரென்றேனே. (௪௧)

தீரென்றேனந்தியுந்தானென்னைப்பார்த்து
திர்ந்துநான்வருகவோயிருக்கவோவென்றான்
காரென்றேனகஸ்தியனங்குள்ளமட்டும்
கலிமுடித்துநீயுந்தான்வரலாமென்றேன்
தானென்றவம்பரத்தாள்மூலேகேட்டான்
தவஞ்செய்தாலப்புரமேதருவேனென்றேன்
வீறென்றேனந்தியுந்தான்சுடர்வாட்கொண்டு
வேகமதாய்வந்துவினைதீர்த்திட்டானே. (௪உ)

தீர்த்துவிட்டநந்திக்குப்ரம்மபட்டந்
திரமதாய்யீய்ந்துவிட்டேன்சிலநாளாண்டான்
காத்துவிட்டபிரமனுக்குவிஷ்ணுபட்டங்
கருணைபெறவேயீந்தேன்வெகுநாளப்பா
பார்த்துவிட்டபரப்ரம்மரிஷிவரமேகேட்டான்
பரிவாகயீந்துவிட்டேன்பற்றற்றானே
தேர்த்துவிட்டரிஷியென்றன்றலையிற்கையைத்
திறமாகவைக்கவென்றானுதித்திட்டேனே. (௪௩)

உதித்திட்டேனிஸ்வரியாளென்னைத்தேடி
யுறவானவிஷ்ணுவையும்போகச்சொன்னாள்
அளித்திட்டயீஸ்வரியைப்பார்த்துமாலு
மவர்பயந்துபோனார்யான்போகேனென்றார்
களித்திட்டதன்மூலமுபதேசித்துக்
கன்னிகைபோலாவாய்நீபோய்வாவென்றேன்
செளித்திட்டமாலுமந்தவடிவேகொண்டு
சிறப்பாகவென்னைத்தேடிவந்தாள்காணே. (௪௪)

காணவேகன்னியைப்போல்வருகும்போது
　　காதலுடன்ரிஷிகண்டுமோகமுற்றான்
பூணவேசுகியில்லையென்றுசொல்லிப்
　　புகழ்திரோகசுத்திசெய்துவாநீயென்றான்
தோணவேதலைமுழுகித்தலைதுவட்ட
　　தொட்டதலைதீப்பிடித்துவெந்ததையோ
நாணவேகன்னிகைமால்வடிவமாகி
　　நம்மையுமேதாமழைத்தாள்நாம்வந்தோமே.　　(சரு)

வந்துவிட்டதிருமாலைத்தானும்பார்த்து
　　வரம்பெற்றபிரமரிஷியெங்கேயென்றேன்
வெந்துவிட்டான்ரிஷியவனுமென்றுசொல்ல
　　வெகுகெட்டிக்காரனென்றுமெச்சினேன்யான்
தந்துவிட்டரிஷிதானுஞ்சாம்பலாகித்
　　தழும்பாயவ்வுயிர்வந்துதனாயில்வீழ்க
அந்துவிட்டபையனொன்றுகேட்க
　　வறியோம்நாம்பரப்பிரம்மரிஷியென்றானே.　　(சசு)

என்றவுடன்ரிஷியுந்தானென்னைப்பார்த்து
　　யென்றாலம்மிழ்ந்துநானேபுத்திகெட்டு
அந்தவரமெந்தனுக்குவேண்டாமையா
　　வழியாதவரம்வேண்டுமென்றுகேட்டான்
நின்றவரமுந்தனுக்குக்கொடுக்கவென்றால்
　　நிலையாதநரலோகஞ்செல்வாயென்றேன்
வென்றவரம்வேண்டுமென்றாற்கலிபோய்தாமோன்
　　விதமானசாத்தாவாய்செல்லென்றேனே.　　(சஎ)

செல்லென்றேனாலோகம்ரிஷிபோய்ச்சேர்ந்தான்
　　செயமானமாலையுந்தானழைத்துக்கேட்டேன்
வெல்லென்றயிஸ்வரியாளென்னைப்பார்த்து
　　விதமாகவவள்மூலமெனக்குச்சொன்னாள்
நல்லென்றகன்னிகையாயானுந்தோன்றி
　　நலம்பெறவேயவன்கைகொண்டெரித்தேனென்றாள்
மல்லென்றமாலவனையானும்பார்த்து
　　மகத்தானமூலமொன்றேயீந்திட்டேனே.　　(சஅ)

ஈந்திட்டேனிலக்குமியாள்சேர்ந்ததாலே
 யிதமானசித்தியதின்மூலம்பார்த்து
பாய்ந்திட்டருத்திரனார்பட்டமீந்து
 பாமானவட்சாமுந்தருவேனென்றேன்
ஆய்ந்திட்டதிருமூலருத்திரனைத்தானு
 மழகானதெக்ஷணத்திற்செல்வாயென்றேன்
வாய்ந்திட்டதிருமூலனென்னைப்பார்த்து
 வளமானவம்பரமெங்கேயென்றானே. (௪௯)

எங்கெயென்றான்தெக்ஷணத்திற்றநுவேனென்றேன்
 யெனக்கேவற்பிள்ளையொன்றுவேண்டுமென்றான்
அங்கிருந்தோர்நந்திவந்துசபிப்பானென்றே
 ஞச்சரியமெல்லாந்தான்கேட்டுக்கொண்டான்
நங்கென்றகைலைமுதலண்டகூடம்
 நலமானமூலமுதலாராதாரம்
வங்கென்றபாப்ரம்மவாலாறெல்லாம்
 வல்லபிள்ளையென்றுசொல்லியுரைத்திட்டேனே. (௫௰)

உரைத்திட்டேனிதுவெல்லாமுள்ளத்துள்ளே
 வொளியாகவுனக்குள்ளேகாணவென்றால்
திரைத்திட்டேனண்டத்திலுள்ளதெல்லாந்
 திறமாகபிண்டத்திற்காண்பாயென்றேன்
வரைத்திட்டமாகபதினேழுபேர்கள்
 வந்துதிப்பார்நந்திகளும்நரலோகத்தில்
கரைத்திட்டதிட்சைமுதலாராதாரங்
 கண்டுகொண்டுவவர்களுக்குச்செப்பென்றானே. (௫௧)

செப்பென்றவுத்தாரம்யானுங்கேட்டுச்
 சிரசுதட்டபாதமதில்நமஸ்கரித்து
ஒப்பென்றதிரிசூலமழுவும்வாங்கி
 யுயர்விடையின்மீதேறித்தேவர்சூழ
வெப்பென்றகைலாசந்தன்னைவிட்டு
 விதமானதில்லைவளந்தன்னிற்சேர்ந்தேன்
நப்பென்றநரலோகம்பார்க்கும்போது
 நரரெல்லாமியாக்கதாரய்க்கண்டேனே. (௫௨)

கண்டவுடன்ராக்ஷதசம்மாஞ்செய்து
கருப்பிடித்துவனேகவிதமாண்பெண்ணாக
மண்டலத்தில்திருஷ்டித்தேனவனாயெல்லாம்
மகத்தானமலேகளெல்லாமிருக்கக்கண்டேன்
விண்டதொருமலேகளெல்லாம்வேதமூன்றி
விதமானசிரகரிந்துசபித்துப்போட்டேன்
கொண்டதொருதில்லேவனம்வெளியதாக்கி
குடியிருந்தபதஞ்சலிக்குவருட்சொன்னேனே. (ருக)

சொல்லிவிட்டேன்வியாக்கிரமபாதனுக்கு
செயமானவருள்காணவுபதேசித்தேன்
எய்துவிட்டேனவருமொருபிள்ளேக்குத்கா
னிதமானதீக்ஷையதுசெய்துவைத்தேன்
உய்துவிட்டுவங்கிருந்துதவமேசெய்து
வுயரீசன்சொற்படியேவரமும்பெற்றேன்
கொய்துவிட்டேனியானிருந்தகோலமெல்லாங்
கூடினேனம்பரத்திலாடினேனே. (ருச)

ஆடினேன்காலரிந்தானெந்தன்மைந்த
ஞதிகாலாங்கியென்றுபேருமீந்தேன்
சாடினேனங்கிருந்துபொதிகைதன்னிற்
சந்தோஷித்தகஸ்தியனுமழைத்துக்கொண்டான்
கூடினேன்மயூரத்தின்விபரங்கேட்டார்
குருந்தமரத்தடியிருப்பேன்பின்வாவென்றேன்
தேடியென்னேயகஸ்தியனும்வந்துகண்டு
தெரிசித்துப்பூசித்தம்பரங்கேட்டானே. (ருரு)

கேட்டவுடனங்கிருந்துசேவைதந்தேன்
கெடியானசிவவடிவமாக்கிக்கொண்டேன்
ஆட்டமுடனகஸ்தியனுங்காணவென்று
வாடினேன்சித்தம்பலந்தன்னில்நின்று
நாட்டமுடன்காலாங்கிப்பிள்ளேவந்தான்
கலம்பெறவேநிருவிகற்பசமாதிகேட்டான்
தேட்டமுடனவன்றனக்குச்சமாதிசொன்னேன்
தென்னிலங்கைதனிலிருந்துதேறினேனே. (ருசா)

தேறியேயெழுந்துவந்துபணிந்துநின்றான்
திரிகூடத்தீசான்யசாட்டிற்சென்றோம்
மாறியேவங்குமொருசமாதிசொன்னேன்
மலைதனக்குவாயுவிலேசமாதிநின்றான்
கூறியேயானுமதின்கிழக்காய்வந்து
குருமூலங்காலாங்கிக்குபதேசித்தேன்
மாறியேயிங்கிருநீயென்றுசொல்லி
மலையாளதேசமிசையான்சென்றேனே (௫௭)

சென்றிட்டேன்சேரமானெனையுங்கண்டு
தெரிசித்தேயெந்தனையுமோக்ஷங்கேட்டான்
வென்றிட்டதலமாகயானும்நின்று
விதமாகவவன்றனக்குமோக்ஷமீந்து
குன்றிட்டகொல்லிமலைச்சார்பில்வந்து
காலாங்கிபிள்ளையையுமழைத்துக்கொண்டு
நன்றிட்டசதுரகிரிமலையிற்சென்றே
நல்லதொருபிள்ளைக்குபதேசித்தேனே. (௫௮)

தேனென்றசித்திரகூடத்திற்சென்று
திறமானபிள்ளையொண்டுயானுமாக
கானென்றகாலாங்கிபிள்ளைக்குத்தான்
நலமானப்ரம்மபட்டங்கிடைக்குமென்று
கானென்றகைலாசந்தன்னிற்சென்றே
கமலனதுபட்டமதையீசனீந்தான்
தானென்றபிள்ளைக்குகர்ப்பமீந்து
தவஞ்செய்வாய்சதுரகிரிதனிலென்றேனே. (௫௬)

என்றுநானங்கிருந்துவயிரகிரியிற்சென்றே
யிதமானபிள்ளையொன்றுக்குபதேசித்தேன்
அன்றுநானுபதேசஞ்செய்தபிள்ளை
யழகானப்ரம்மபட்டந்தன்னையாண்டு
வென்றுமவனம்மிடத்தில்வந்துசேர்ந்து
விதமானவிஷ்ணுபட்டந்தனையுங்கேட்டான்
நன்றுடனேவீசனையும்பூசித்தாக்கால்
நலமானவப்பட்டம்வருமென்றேனே. (௯௰)

இஷ்டமுடன்மாயவனுர்கைலெசென்று
வீசனதுவிருதாளைப்பூசைசெய்ய
சட்டமாய்விஷ்ணுபட்டந்தன்னையீந்தார்
சமர்த்தானகாலாங்கிப்பிள்ளைக்குத்தான்
திட்டமாய்சதுரகிரிப்பிள்ளைவந்து
திடசுத்திபண்ணிவந்தான்சட்டைதள்ளி
அட்டமாசித்தியெல்லாமவனுக்கீந்து
வதிகாரப்ரம்மபட்டமாமென்றேனே (௬௧)

ஆமென்றப்ரம்மபட்டமீசனுமேயீந்தா
சதிலிருந்தான்சட்டையப்பனனேககாளாய்
ஊமென்றவயிரகிரிப்பிள்ளையையுங்கூட்டி
யுறவானநீலகிரிவந்துசேர்ந்தேன்
வானென்றவிஷ்ணுவுந்தானங்கேவந்து
வந்தனைகள்செய்துருத்ரபட்டங்கேட்டான்
நாமென்றதில்லைவனந்தன்னில்வந்தால்
நலமானருத்ரபட்டமாமென்றேனே. (௬௨)

என்றதொருமூல்மெல்லாமியானுஞ்சொன்னே
னிதமானருத்ரபட்டமீசனீந்தான்
அன்றதொருப்ரம்மாவும்விஷ்ணுவாச்சு
வாச்சரியம்வயிரகிரிப்பிள்ளைக்குத்தான்
நன்றதொருப்ரம்மபட்டந்தன்னையீந்தார்
நலமானபிள்ளைரெண்டுக்குபதேசித்தேன்
வென்றதொருருத்திரனென்னிடத்தில்வந்தே
விதமானயெம்பரத்தில்விதிகேட்டானே. (௬௩)

விதிகேட்டான்காலாங்கியென்னைப்பார்த்து
விதமானவெள்ளிமலைதனில்போவென்றேன்
நதிமூலமென்னிடத்தில்வந்துகேட்டான்
நான்கொடுத்தேன்கமண்டலமுந்தெண்டுங்கையில்
பதிகேட்டகாலாங்கிவந்தனைகள்செய்து
பதிவானபிள்ளையொன்றுவேண்டுமென்றான்

துதிகொண்டபிள்ளைகளைப்பார்த்துநீயுந்
துணையாகவழைத்தவடஞ்செல்லென்றேனே. (௬௪)

செல்லென்றவுத்தாரம்யானுங்கேட்டுச்
சிவவேடமானதெல்லாந்தரித்துக்கொண்டு
வல்லென்றகமண்டலமுந்தெண்டுங்கொண்டு
வடமேலாய்சென்றிட்டேன்மலையைப்பார்த்து
நல்லென்றபுவனகிரிபட்டணமேசேர்ந்து
நலமானபிள்ளையொன்றைத்தேடிப்பார்த்து
வெல்லென்றபிள்ளையொன்றுகாணாமற்றான்
விதமானகுருவருளைநினைத்திட்டேனே. (௬௫)

நினைத்திட்டேன்மூலகுருநாதன்பார்த்து
நிசமானபிள்ளையிருப்பிடமேசொன்னார்
அனைத்திட்டேனதுவிருக்குமிடமேசென்றே
னஞ்சாறுபிள்ளையொருவீட்டிற்கண்டேன்
கனிந்திட்டபிள்ளைகளிலொன்றைப்பார்த்துக்
காடுமட்டுமழைத்துப்போய்வருவேனென்றேன்
பிறந்திட்டபேச்சையவன்றாயுங்கேட்டுப்
பொல்லாதசன்யாசிபோவென்றாளே. (௬௬)

போமென்றபிள்ளையதின்றாயைப்பார்த்து
புசிப்புக்குமனமூன்றுதவிக்கின்றாயே
ஆமென்றபிள்ளைகளஞ்சாறுதன்னி
லாகுமென்றபிள்ளைகளைவைத்துக்கொண்டு
ஓமென்றபிள்ளையதாயொன்றுதந்தால்
வுன்பசியைத்தணிப்பனென்றுவுருதிசொன்னேன்
வாமென்றபிள்ளைகளையென்றான்விட்டு
வாகானபிள்ளைதனைக்கேளென்றாளே. (௬௭)

கேளென்றாள்கிழிக்கட்டிநூறுபொன்னைக்
கெடியாகவவடனக்குக்கொடுத்துப்போட்டு
ஆளென்றபிள்ளையொன்றையழைத்துக்கொண்டு
யழகானகைலகிரிமலையிற்சென்றேன்
வாளென்றமணிதருக்குஞானமில்லாதாலே
வலுவானபிள்ளைகளுக்கிடைக்கவில்லை

தேளென்றவிஷமானவாசைதள்ளிச்
சிலதுவுபதேசமதுசெப்பினேனே. (௬௮)

செப்பினேன்கற்பமுதற்றீட்சையெல்லாஞ்
செகசாலவித்தையெல்லாமறியச்சொன்னேன்
தப்பினேனென்றுசொல்லிகர்ப்பங்கொண்டு
தலைசாலுந்தான்தானேகண்டுக்கொண்டேன்
ஒப்பில்லாமூலர்தெரிசனமேகேட்டால்
வுலகத்திற்றில்லைவனஞ்செல்லாயென்றேன்
மெப்பினேனென்றவனும்வணக்கஞ்செய்து
வேதாந்தக்கிறவுகோற்கைக்கொண்டானே. (௬௯)

கைகொடுத்தகுருவையுந்தான்வணங்கியானுங்
காலமிந்துமூலரையுங்கண்டுக்கொண்டு
கைகொடுத்தபிள்ளைகளையானும்பார்த்துச்
சந்தோஷமாகவேதழுவிக்கொண்டு
ஐகொடுத்தவறுமுகத்தாற்சந்தோஷித்து
வாச்சரியமானபொன்னம்பலவரயென்று
உய்கொடுத்தவீசனிடஞ்செல்வாயென்று
வுறுதியாய்க்கவனமதுகொடுத்தார்தானே. (௭௰)

தானென்றகவனத்தாற்சென்றேனியானுந்
தப்பாமலாயிரத்தெண்போசனையதாக
மூனென்றமூச்சியிலேலப்படியேசென்று
முடியானகைலாசமுடியிற்சென்றேன்
வானென்றகைலாசத்திமலவாய்ந்து
வல்லசிவன்சத்திபதம்வணங்கினின்றேன்
ஏனென்றநீயார்காணென்றுகேட்க
வென்றனதுமூலர்திருப்பேர்சொன்னேனே. (௭௧)

சொன்னதொருமொழிகேட்டுவீசன்றானுஞ்
சுந்தரியைப்பார்த்துயிவன்சகத்தானென்றார்
அன்னையுந்தானேனையழைத்துமுத்தமிட்டு
வதிகாரப்ரம்மபட்டமருளிச்செய்தாள்
முன்னையுந்தானிருந்தவொருப்ரம்மாவைத்தான்
முடிவானவடபுரமேபோநீயென்றாள்

நன்னயமாய்ப்ரம்மனென்றபேருவ்வாங்கி
நற்பிரம்புதான்வாங்கிநடந்திட்டேனே. (எஉ)

நடந்திட்டேன்பிரமனுடலோகஞ்சென்று
நலமானவாசனத்திலேறிக்கொண்டேன்
கடந்திட்டபேர்போலமனிதரெல்லாங்
காடுபோலிருந்தார்களறிவோயில்லை
தொடர்ந்திட்டமோகமுங்கலியாணமில்லை
தொடரானயிறப்பினொடுபிறப்புமில்லை
உடந்திட்டமனிதரெல்லாமுறவுசேர்ந்து
வொருவர்போலொருவர்தனைத்தொடர்செய்தேனே. ( )

செய்திட்டேனுத்தாளுமுத்தமிட்டுச்
செயமானமுகத்தாலேபார்த்துபார்த்துக்
கைதிட்டகருமமதுமொன்றுக்கொன்று
காதல்கொண்டுவவனவனைச்சாகச்செய்தேன்
கொய்திட்டென்முன்னுள்ளபிராணியெல்லாங்
கொடியானயெமனையுந்தான்திருஷ்டித்தேனியான்
மெய்திட்டகாலாங்கியருளினாலே
மெய்க்காலதூதனையும்விதித்திட்டேனே. (எச)

விதித்திட்டசேதிருத்ரனறிந்துக்கொண்டு
விதமானராக்ஷதனையனுப்பிவைத்து
மதித்திட்டகதிரவனைமனைக்கச்சொல்லி
மாய்கையாலிருண்மூடச்செய்துவைத்தார்
எதிர்த்திட்டுசுடர்வாளைக்கையிற்கொண்டு
யேகாந்தக்காடாகவழுத்துவிட்டேன்
சதித்திட்டராக்ஷதனைச்செயித்தபின்பு
சந்தோஷமாய்க்கதிரோன்தான்வந்தானே. (எரு)

வந்ததொருருத்ரனவன்றனுங்கண்டு
மாற்றிவைத்ததாரொன்றுமனதிலெண்ணி
என்னுடசேனைதனைச்செயித்தவனொன்றே
யெழின்விடையின்மீதேறியிங்கேவந்தான்
கந்தமலரவரொங்கேநீயாரொன்றுங்
கடிதாமிவ்வேலைசெய்தோனெவன்தானென்றும்

ஐந்தவொருகோபமதாயென்னைக்கேட்க
வாத்தாடன்னருளாலேயான்செய்தேனே. (எகூ)

செய்ததுதான்போகட்டுமென்றுசொல்லிச்
செம்மையில்லைநீயுமிந்தவேலைக்கென்று
வைததுதான்கைலைக்குவாவாவென்றார்
வாகனத்திலிருவருமேகைலைசென்றோம்
மெய்தவஞ்சேரீசாதுவெதிரேவிட்டு
மிஞ்சியதோர்வேலையிவன்செயதானென்றார்
மைதவழுமுமைபாகனென்னைப்பார்த்து
மதிதவறிநடந்ததென்னவுரையென்றாரே. (எஎ)

உரையென்றவுத்தாரந்தன்னைக்கேட்டு
வுலகத்துமனுக்களுக்குவிறப்பில்லாதான்
நிரையென்றபுவிதேவியென்னைப்பார்த்து
நிறைவயதாற்திருஷ்டித்தாற்குறைவோயில்லை
தரையென்றமனுபாரந்தாங்கப்போகா
தப்பவுமேதவிறவுமேதிருஷ்டியென்றாள்
திரையென்றருத்திரனார்சங்கரித்தாற்
றிறமானதவம்போமென்றெண்ணினேனே. (எஅ)

உருத்திரசம்மாரங்கூறல்.

எண்ணியான்தவமில்லைக்கருமமென்று
மேமனென்றுந்தூதனென்றுங்காலனென்றும்
பண்ணியபாவமவன்பாற்சேரவென்று
பணையென்றகணையெடுத்துப்படைத்தேனப்பா
மண்ணின்மேற்படைத்தகுற்றமில்லையென்று
மகத்தானவீசனுமேசந்தோஷித்துப்
புண்ணியமாயுந்தனுக்குச்செய்தோமல்லாற்
பிள்ளையின்மேற்கோபமென்னபோவென்றாரே. (எகூ)

என்றவொருவீசனுத்தாரங்கேட்டு
வியல்ருத்ரசம்மாரமெப்படிதானென்றே

அன்றதொருபுவனமெல்லாஞ்சோதியாச்சு
வறுபதுநாழிகைக்கதிரோன்விசாலமாச்சு
சென்றதொருகதிரவர்க்குப்பாதிபொழுதாக்கிச்
சமபாதியிருட்டாக்கிச்சொல்லக்கேளு
வென்றதொருமனிதருக்குவுறக்கம்வைத்து
விதமானமூச்சுகளைசங்கரித்திடாயே. (அஎ)

சங்கமென்றவாயுளுமேகுளாந்துபோகுஞ்
சண்டனுக்குவுத்தாரஞ்செய்துப்போடு
கங்குலென்றவிருளதுவேழுடுமாறு
கருதுமெனக்கூர்வெளிச்சம்வேணுமென்றார்
பொங்கமென்றசந்திரனைப்பிடித்தேவீசன்
பெருதிருளைவிலக்குமெனக்கையிலீந்து
பங்கமதுகதிரவர்க்குப்பாதியென்று
பாஞ்சோதிருத்திரர்க்குப்பகர்ந்திட்டாரோ (அக

பறைந்திட்டவீசனையுமுருத்திரனார்பார்த்துப்
பதினைந்நோடைாக்கலையீந்தீரோவென்றார்.
அறைந்திட்டோமப்படியேதந்தீரொன்று
ராத்தாளுமதுகொடுக்கலாகாதென்றாள்
நிறைந்திட்டசந்த்ரனும்பூரணமதாக
நித்தமிருக்காதுமதிக்கோர்நாளென்றார்
கறைந்திட்டநாள்போகக்கறையாநாளிற்
காரணமதாகவொன்றுசொல்லுவேனே- (அஉ)

சொல்லுவேனென்றமொழியாத்தாள்கேட்டு
சுருக்கானகாரணந்தானேதோவென்றாள்
வெல்லுமென்றநந்திகளுந்தேவரெல்லாம்
விதமாறிபவதாரஞ்செய்யுமென்றோம்
நல்லுமென்றநந்திகட்குப்பூரணத்துநாளில்
நலமானதெரிசனம்நீகொடுப்பாயென்றார்
செல்லுமென்றவுத்தாரங்கேட்டுக்கொண்டு
சிந்திப்போர்க்கிதனைச்செப்புவளென்றாளே. (அ௩)

என்றமொழியுருத்திரனுங்கேட்டுக்கொண்டு
யிருவரையும்வந்தனைகள்செய்துபின்னர்
வென்றவழிசந்திரனைக்கையிற்கொண்டு
வேகமதாய்பூலோகம்வந்துபார்த்து
நன்றெனவேபூமியுநான்முகனுக்காச்சு
நலமானவிஷ்ணுவுக்குவதன்மேலாச்சு
கன்றெனவேதானிருக்கும்பதியின்மேலே
கதிரவனுலகமெல்லாம்வைத்திட்டாரே. (அச)

திட்டமாயெந்தனதுவேலைக்குத்தான்
திறமானபிரமனென்றுநியமஞ்செய்தார்
கஷ்டமாய்ச்செய்தோமேமுன்னமென்று
கருமமதுவிலகுதற்குப்பூசைசெய்தேன்
சட்டமாய்சாதிப்பூசகஸ்திரங்கொண்டு
தற்காலம்பூசைசெய்துபுரியுங்காலம்
இஷ்டமாய்ப்பூசைசெய்தானென்றுசொல்லி
யீசனுமேசங்குசக்ரமெனக்கீந்தாரே. (அரு)

கணேசன்சக்கரத்தைவிழுங்கியது-கூறல்.

ஈந்ததனையிருகரத்தால்வாங்கிக்கொண்டு
யிருதாளிற்சிரம்பொருந்தப்பணிந்துநின்றேன்
ஆய்ந்ததொருவீசனுந்தானெனையும்பார்த்து
வருட்சார்ந்துவிஷ்ணுவென்றபட்டமீந்தார்
வாய்ந்தவவ்வாயற்கடந்துவருகும்போது
வல்லகணபதியும்வழிமறித்துக்கேட்டார்
வேய்ந்தமதிவீசனையும்பூசைசெய்தேன்
வென்றிசங்குசக்கரமுமீந்தார்காணே. (அசு)

காணுமென்றசக்கரத்தைக்கண்டபோதே
கையில்தந்தால்பார்த்ததனைத்தருவேனென்றார்
வேணுமென்றுறபாருமென்றுகரத்திலீந்தேன்
வெகுசுருக்காய்வாய்தனிலேபோட்டுக்கொண்டார்

ஊணுமென்றசக்கரத்தைத்தாருமென்ற
வுடன்மூக்கைப்பிடித்திழுத்துத்தருகேனென்றார்
காணுமென்றகணபதியைவிட்டுநான்போய்
நாமமதுதுவாதசமுந்தான்பூண்டேனே. (அஎ)

பூண்டபின்புகையிலொருதப்புக்கொண்டு
புகழானசேகண்டியெடுத்துக்கொண்டு
ஆண்டதொருசல்லடமுங்கச்சைகட்டி
யழகானதண்டையொடுசிலம்பும்பூண்டு
நீண்டதொருமஞ்சள்முடிக்கயறும்பூண்டு
நெடிதானகுல்லாவுஞ்சிரத்தில்வைத்து
வேண்டதொருநெய்ப்பந்தங்கையிற்கொண்டு
விநாயகன்முன்னின்றொருகூத்தாடினேனே. (அஅ)

ஆடினேனவயவங்களெல்லாங்கண்டு
வாணந்தக்கூத்தாடித்தாதாவென்றேன்
சாடினதோரொன்கூத்தையவரும்பார்த்து
தான்சிரித்தார்சக்கரத்தைமரந்துவிட்டு
நாடினதோர்சக்கரத்தையெடுத்துக்கொண்டு
நானோடிவந்துவிட்டேன்மலையின்மீது
தேடிவந்ததேவரெல்லாமென்னைக்கண்டு
திருக்கூத்தைக்காட்டுமென்றுசெப்பினாரே. (அகூ)

செப்பினாரப்படியேயாடிக்காட்டச்
செகத்திலுள்ளமானிடருந்திரண்டேகண்டார்
ஒப்பினார்தேவர்களானென்னைப்பார்த்து
வுயர்தலந்தான்திருப்பதியென்றறிந்துக்கொண்டார்
அப்பினாகஸ்தியனாயிரம்பேர்க்
கருட்பெறவேயுபதேசஞ்செய்துவைத்தார்
மெப்பினார்நந்திகடாமேழுபேர்கள்
மிச்சமுள்ளோரகஸ்தியர்பாற்சென்றிட்டாரே. (கூ0)

## திருப்பதியுற்பவங்கூறல்.

சென்றிட்டநந்திகளிற்புலத்தியனென்றுஞ்
செயமானகாசிபர்மார்க்கண்டனோடும்
அன்றிட்டவஷ்டாங்கரிஷிதானென்று
வழுகானகௌதமருங்கலைக்கோட்டானும்
வென்றிட்டசதானந்தரிஷியுங்கூட
விதமானயெழுவரும்நந்திகளேயானார்
நன்றிட்டவகஸ்தியரோடெட்டுபேரும்
நலமானகைலாசவர்க்கந்தானே. (கூக)

தானென்றபொதிகையதிலிவர்கள்கூட்டந்
தானிருக்குமலையதுதானதிகமாகும்
நானென்றமலையதுவேசதுரகிரிதான்
நான்திருக்கூத்தாடினதால்திருப்பதியென்றுச்சு
வானென்றவெண்சதுரகிரியிலப்பா
வாழுகின்றதேவர்களோவொருநூற்றெட்டு
வேனென்றவெண்சதுரகிரிதானாகும்
விளங்குகின்றவேங்கடாசலபதியுமாமே. (கூஉ)

ஆமென்றவகஸ்தியருங்குளிகைசெய்தா
ரழகானகுதிரைக்குஜீனிசெய்தேன்
வாமென்றவகஸ்தியர்தானென்னைப்பார்த்து
வளர்ஜீனிவர்க்கமென்றேபெயருமீந்தார்
வேமென்றகுதிரையின்மீதேறிப்பார்த்து
வீதிசுத்திவருகிறேனென்றுகேட்டேன்
போமென்றுவகஸ்தியர்தாமனுப்பிவிட்டார்
போனேனென்மூச்சுக்கறுபதுகாதமாமே. (கூங)

காதமென்றகுதிரைசுருக்கிலையேயென்று
கடுங்காரமேற்றியதாற்சேணம்வைத்தேன்
வேதனவனெனைக்கண்டுகுதிரைகேட்டான்
விதமானகுதிரைதனையவனுக்கீந்தேன்

நாதன்வளர்கைலாசமதனிற்சென்று
கல்லாலின்மாநிழலிலிருந்துக்கொண்டேன்
மாதவர்களொடுவயன்மாற்றேவரெல்லாம்
மனதிளகிமகிழ்வோடுமிருந்திட்டாரே. (சுச)

மகிழ்ந்திட்டாரீசனுமேயதனைக்கண்டு
மகத்துவங்களதிகமதாயாச்சுதென்று
புகழ்ந்திட்டார்துவாரபாலரோடு
புகழானநந்தியையுமழைத்துச்சொன்னார்
இகழ்ந்திட்டாரிவராலேயாவதென்ன
வென்றுசொல்லியிருந்தார்கள்மகத்துவமேயென்றார்
உகந்திட்டராக்ஷதாய்செனனஞ்செய்ய
வுத்தாரஞ்செய்துவிட்டாரீசன்றானே. (சுரு)

சுப்பிரமணியர்உற்பவங்கூறல்.

ஈசனதுவுத்தாரமவர்கள்கேட்டு
யிதமானராக்ஷதராய்பிறந்திட்டார்கள்
நேசமுடனீசனெனைத்தானும்பார்த்து
நிருமணியகாரனென்றுயிருக்கச்சொன்னார்
ஆசனமுதலாராதாரமாறை
யறிவாலேமணியாருய்த்திரட்டிக்கொண்டேன்
வாசமுள்ளவீசனுந்தானென்னைப்பார்த்து
வல்லசுப்பிரமணியனென்னும்பெயர்சொன்னாரே (சுசு)

சொன்னபடிராக்ஷதரும்தவமேசெய்து
சோர்வில்லாவரங்களெல்லாம்பெற்றுக்கொண்டு
அன்னபடிகைலைதனிலுள்ளபேரை
யயன்புனிதமால்தேவர்ரிஷியையெல்லாம்
வின்னமுசன்சிறைச்சாலைப்பிடித்தடைத்தான்
மெய்யானதேவரெல்லாமிகவேநொந்தார்
வன்னமுள்ளவீசனிதையறிந்துக்கொண்டு
வரவழைத்தாரெந்தனையுமகிழ்ந்துதானே. (சுஎ)

தானென்றமணியாறுமுகமுமாக்கித்
தசவாய்வுபக்தையுமேகையதாக்கி

வேனென்றகூடாதனைவேலதாக்கி
விதமானவக்கினியையூர்தியாக்கி
பாலென்றகிராகமதைவீராளாக்கிப்
படைசெயித்துவாவென்றுபகர்ந்தாரீசன்
வானென்றபூரணநாளாத்தானைத்தான்
மகத்தானபூசைசெய்துமருநாளிற்றானே. (கூ௮)

## சூரசம்மாரங்கூறல்.

மறுநாளிலசுரனிடந்தன்னிற்சென்று
வான்வர்கள்சிறைவிடென்றுசொல்லிவிட்டேன்
உறுதியாய்சிறையாமலென்னைக்கூட
வோகோகோபிடித்துவரச்சொல்லிவிட்டான்
சுறுதியாயவனோடுவெதிர்த்துநானுஞ்
சூரனையுமாறுநாட்கொன்றேவிட்டு
பிரமன்முதற்றேவர்களைமீட்டுக்கொண்டு
பெருமையுடனீசனிடம்வந்திட்டேனே. (கூகூ)

வந்திட்டேனீசனென்னைமகிழ்ந்துபார்த்து
வலுவானவிந்த்ரபட்டமிருக்கச்சொன்னார்
முந்திட்டயிந்திரனுஞ்சிவனைப்பார்த்து
மொழிகுவானினியானென்செய்வேனென்றான்
தந்திட்டவுத்தாரப்படியேநீதான்
தாரணியிற்றசரதனாய்ப்பிறப்பாயென்றான்
எந்திட்டவின்னமொருகாரணமேயாகு
மியல்பானவிந்த்ரபட்டந்தாகுவென்றோ. (ா)

## தசரதனுற்பவங்கூறல்.

என்றுமொழிகேட்டுநரலோகம்போனா
ரிடிந்துவிட்டராக்ஷதரும்பரந்தேபின்னும்
வென்றதொருதவம்புரிந்துத்தாரங்கேட்டார்
வெகுவாமுன்னுள்ளதெல்லாம்வீணாய்ச்செய்தீர்
மூன்றுமொருவரமளித்தீனாயாவைந்து
முகத்தாலுமூனெசெயிக்கமுடியாதென்றீர்

நின்றவொருவருமுகத்தால்வெல்லச்சொல்ல
நீர்கொடுத்தவரமதுதான்பொய்யுமாச்சே. (௩௧)

## இராவணனுற்பவங்கூறல்.

ஆச்சென்றுசொன்னவசுரனையும்பார்த்து
வகம்பித்தாயதனாலேயழிந்ததென்றார்
போச்சுதென்றவென்வினையாற்போச்சுதையா
போகாதவரமொன்றுவேணுமென்றான்
வாச்சுதென்றவரங்கேட்டாற்றருமென்று
வாக்களித்தாரீஸ்வரனுமந்தவேளை
காச்சுதென்றதலைபத்தாய்ப்பிறக்கவேண்டுங்
கதித்தெழுந்தசத்ருவெல்லாங்கதிசொல்வீரே. (௩௨)

## இராமனுற்பவங்கூறல்.

சொல்லுமென்றவசுரனையுமீசன்பார்த்துச்
சுகமாகவிலங்கையிற்போய்பிறந்துநீயும்
வெல்லுமென்றதலைபத்தாயிருந்துக்கொண்டு
மேலானவிலங்கையரசாள்வாயென்றான்
அல்லுமென்றவரசனுமேயவடம்போனா
னப்போதுவிசனுமேயென்னைப்பார்த்து
வல்லதசரதனிடத்திலிராமனாக
வந்திருந்துராவணனைவதையென்றாரே. (௩௩)

## இராவணசம்மாரங்கூறல்.

என்றதொருவுத்தாரங்கேட்டுக்கொண்டு
வியல்பாகயான்பிறந்தேன்ராமனாக
கன்றதொருதெசரதனுமென்னைப்பார்த்துக்
காரணங்கள்முடிக்கவும்வந்தாயோவென்றான்
வென்றதொருவேலையெல்லாம்பார்த்துக்கொள்வாய்
வேலையில்லையென்பதிக்குப்போமோவென்றான்
நன்றதொருகாரியந்தானென்றேசொல்லி
நான்வனத்திற்போம்போதுபோவென்றானே. (௩௪)

போவென்றவனம்புகுந்தேனந்தவேளைப்
பொல்லாதாரவணனுமீனஞ்செய்தான்
ஆவென்றவில்லம்புமெடுத்துக்கொண்டு
வறுத்தறுத்துத்தள்ளிவிட்டேன்மூன்றுபேரை
மாவென்றராட்சதருமடிந்தபின்பு
மாறியேகடற்கரையில்வந்துசேர்ந்தேன்
தேவென்றநந்தியுமேயென்னைத்தேடி
தேகம்விட்டுவந்தாரொன்னிடமாய்த்தானே. (ரு)

## இராமேஸ்வரமுற்பவங்கூறல்.

தானென்றநந்தியவரொன்னைப்பார்த்து
தவமுடித்துக்கைலைக்குவருவதெப்போ
நானென்றராகூதராய்செனனஞ்செய்ய
நம்மாலேயாகாதுவினிமேலென்ன
வானென்றவீசனுடவருளைப்பெற்ற
வல்லவனேயெனக்குமொருவழிசொல்லென்றார்
மானென்றமைந்தனேநீயென்றுகூட்டி
மகாரமுதல்-உகாரம்வரைசெப்பினேனே. (ரசூ)

செப்பினேன்நிருவிகற்பச்சமாதிநின்று
சிலநாட்சென்றேகைலைச்செல்வாயென்றேன்
அப்பினேன்மகாரமுதல்-உகாரங்கண்டு
வறிந்தாரமலிங்கமதுவவன்பேராச்சு
தப்பியேநாம்வந்தபின்விபீஷணனும்வந்தே
தாளில்விழவிலங்கைபட்டமவனுக்கீந்தேன்
ஒப்பியேலங்கைக்குமவனும்போனான்
வுடனெழுந்துவடவாலிற்சென்றிட்டேனே. (ரஎ)

## திருவரங்கமுற்பவங்கூறல்.

சென்றிட்டேன்செம்பவனமங்கேசென்றேன்
செய்மானவணமதிலேசமாதிநின்றேன்

அன்றிட்டேனுயிரமாம்வருடமாச்சு
வாத்தாளுமங்குவந்தந்தரங்கள்சொன்னாள்
வின்றிட்டாத்தாள்சொன்னவந்தரங்கம்
விதமானவென்பேரும்ரங்கம்ரங்கம்
நன்றிட்டவாத்தாளுஞ்சொன்னதாலே
நல்லதொருஸ்ரீரங்கமென்பேராச்சே (௩அ)

ஆச்சந்ததலத்தைவிட்டுகைலைசென்றே
ஞச்சரியமாயீசனைமைத்துக்கொண்டு
காச்சென்றராவணனைக்கடிந்திட்டாயோ
காரமென்னநந்திக்குக்கடாக்ஷித்தாயோ
பேச்சென்றவேலையதுவொன்றுண்டப்பா
பெரிதல்லமுடித்துவாவென்றுசொன்னார்
மூச்சென்றவுத்தாரஞ்சொன்னபோது
முடித்துவந்தாலுத்தாரஞ்சொலுமென்றேனே. (௩௯)

சொல்லுமென்றமொழிகேட்டுவீசன்றானுஞ்
சூரனுக்குமணியாறுதலையாருச்சு
நல்லுமென்றவித்தையொன்றுச்சரியமாகும்
நலமானவஞ்சுமணியஞ்சுரூபம்
வெல்லுமென்றுவொருமணிதான்மாயவனுமாகும்
மெய்த்திருந்துங்காரணத்தைமுடிப்பாயென்றேன்
வல்லுமென்றவீசனுடபாதம்போற்றி
வலஞ்செய்துவையகத்தில்வந்திட்டேனே. (௪௰)

பாண்டவர்களுற்பவங்கூறல்.

வந்துவிட்டேன்க்ஷத்திரியவம்மிசத்தில்
வல்லபிள்ளையைந்துருவாய்ப்பிறந்துக்கொண்டோம்
வெந்திட்டானெனந்தகப்பனந்தவேளை
விலகியேநான்வனத்தில்விலகிநின்றேன்
தந்திட்டமாயவனைத்தேடித்தேடி
தவஞ்செய்தோம்நாங்களொருவைந்துபேரும்
நந்திட்டான்றனையறிந்துமாயன்றானும்
நல்லதிரியோதனைவெல்லென்றானே. (௪௧)

வெல்லுமென்றமாயனையுங்கூடக்கூட்டி
வில்லம்புதானெடுத்ததுமேவிச்சென்று
வல்லதிரியோதனன்மேலுத்தஞ்செய்து
வாங்கிவிட்டேனவனுயிரைப்பதினெட்டாநாள்
கொல்லுமென்றசத்துருவையெல்லாங்கொன்று
குடியாகவரசாட்சிசிலநாட்செய்தேன்
நல்லுமணியாகுமென்தாய்சேர்த்துககொண்டு
நலம்ர்ணகைலாசம்நான்சேர்ந்தேனே. (௱௰௨)

நானுமென்றவீசனுந்தானென்னைக்கண்டு
நல்லதொருவேலையெல்லாமுடித்தாயென்று
வேணுமென்றகாரியந்தான்கேழ்க்கச்சொன்னார்
விளையாடக்கன்னியர்கள்வேணுமென்றேன்
பூணுமென்றலட்சுமியாளெட்டுதுற்கையெட்டுபேரும்
புகழாகவுந்தனுக்கேகிட்டுமென்றார்
காணுமென்றகன்னியரும்பத்தாதென்றேன்
கன்னியொன்றுக்காயிரமாய்திருஷ்டித்தாரே. (௱௰௩)

தாவென்றபூமியிலேபெண்களெல்லாந்
தனுவாகவிவ்வளவுமாகச்சொன்னார்
பேரென்றவீசனுமுன்கிட்டுமென்றதாலே
பிரபலமாயவன்பேருகிருஷ்ணனுச்சு
சீரென்றகன்னியரையெல்லாங்கூடிச்
சிங்காரலீலைகளுஞ்செய்துக்கொண்டேன்
வீரென்றவிசுமாமித்திரனும்வந்து
விளையாடுங்கன்னியொன்றுதான்கேட்டானே. (௱௰௪)

கேட்டபின்னர்நானில்லாவிடஞ்செல்லென்றேன்
கெடியானவுத்தாரஞ்சொன்னபோதே
சாட்டிவிட்டபடிதோறும்வீடுசென்று
சாதகமாய்த்தான்பார்க்கயெங்கும்மின்றேன்
மூட்டிவிட்டதப்பாலேகோபமாகி
மும்முகிள்த்தான்கனைதனிலேவந்துசேர்ந்தான்
ஆட்டிவிட்டுநானவடம்வர்துசேர்ந்தே
னப்பவல்லோசாபத்தைப்பிடியென்றாரே. (௱௰௫)

## ஜெகன்னாதமுற்பவங்கூறல்.

பிடியென்றனெரிசாம்பலாவாயென்றான்
பெருத்ததொருமோசமென்றுபறந்துவிட்டேன்
துடியென்றதலையதனைவட்டமிட்டுத்
தொல்லுலகில்விருக்ஷமதாய்முளைப்பாயென்றான்
நொடியிலந்தசாபத்தால்மரமதாக
நோக்கினேனப்போதோர்தலமுண்டாச்சு
வடிவென்றவடிவுகளுங்காவாய்கொஞ்சம்
வையகத்திற்ஜெகன்னாதமிதுதானமே. (௩௰௬)

ஆமென்றகிருஷ்ணரூபஞ்ஜெகன்னாதந்தா
னாச்சரியமதனைவிட்டிப்பட்சியானேன்
போமென்றகைலாசமதனிற்சென்றேன்
பொல்லாதசாபமதார்கொடுத்தாரென்றார்
வீரென்றகோசிகன்றன்சாபத்தாலே
வின்னமாய்ப்போச்சுதையோவென்றிரோகந்தான்
காமென்றசாபமதையீந்தானென்றே
நல்லவரும்போகனென்றுபெயரீந்தாரே. (௩௰௭)

ஈந்துவிட்டாரீசனுமேபோகனென்று
யிதமானகலிமுடித்துவாநீயென்றார்
பாய்ந்துவிட்டேகைலைவிட்டுநரலோகத்திற்
பரிவானகருமலையில்வந்துசேர்ந்தேன்
சேர்ந்துவிட்டகன்னியாளெனக்குச்சாபஞ்
செபித்தாரோவிஸ்வாமித்திரருமப்போ
வாய்ந்துவிட்டகன்னியரென்செய்வோமென்றும்
வல்லகிருஷ்ணனென்றுமனம்வசனித்தாரே. (௩௰௮)

தானென்றமாலையணிப்பெண்கடன்னை
தாணிதனில்வேற்றுருவமெடுத்துக்கொண்டார்
சீரென்றவின்பசுகந்தருவேனென்றுஞ்
செகந்தனிலெநீக்களும்போய்பிறப்பீரென்றும்
பேரென்றபெண்களுக்குச்சொன்னதாலே
பிறந்திருந்தார்முதற்சாதிப்பெண்களாக

காரொன்றகருமலையில்யானும்வந்து
கருவானபிள்ளையொண்டுகைக்கொண்டேனே. (௱௰௬)

கொண்டதொருபிள்ளையொண்டுக்குபதேசித்துக்
குவலயத்திற்பெண்கொண்டுவாருமென்றேன்
கண்டதொருசாதியெல்லாம்வேண்டாம்பிள்ளாய்
கருவானமுதற்சாதிப்பெண்ணேவேணும்
அண்டபுவனத்திலாயிரத்திலொன்று
வரிதாகப்பிறந்திருக்குமதுதான்வேண்டும்
விண்டதொருகருக்களெல்லாஞ்சொல்லிவைத்து
மேலானவஞ்சனமுஞ்செப்பினேனே. (௱௨௰)

## கல்-பெண்ணுருவானவை-கூறல்.

செப்பினேனஞ்சனமுஞ்செய்யத்தானுஞ்
செகத்திலொருகருத்தேடிவாநீயென்றார்
அப்பினேன்கண்ணுடியொன்றுசெய்து
வதனமேலேயாச்சரியமெல்லாந்தோன்ற
ஒப்பினதோர்பெண்கள்தனைக்கொண்டுவந்தா
லொருநாள்தான்செய்ததொருமார்க்கங்கேளு
கப்பினதோர்கல்லொன்றையுபதேசித்துக்
கன்னியைப்போற்கொண்டுவந்துகாட்டினாரே. (௱௨௧)

காட்டினார்கல்லதனைப்பெண்ணைப்போலக்
கற்றவித்தையென்னிடத்திற்காட்டவென்று
மூட்டினேன்காக்கையெனும்பரவையாக்கி
முப்பிறப்புபிறக்கவென்றுசாபமீந்தேன்
நாட்டினேன்கவடியெல்லாமனிதரென்று
நல்லபிள்ளையென்றுசொல்லிநடந்துவிட்டேன்
கூட்டினேன்குருந்தமரநிழலைப்பார்த்துக்
குறித்ததலமிதுவென்றுபள்ளிகொண்டேன்பாரே. ()

காணப்பாகடையுகமேமுடிவதாகிக்
கடல்பொங்கிச்சங்கமதுவவிந்துபோச்சு

நாணப்பாகட்டையைப்போல்மிதந்துவிட்டேன்
நல்லதொருநரகமதுசுத்திக்கொண்டு
தோணப்பாசமு[illegible]ரந்தானடக்கும்போது
துலையாதகருங்கடலிற்சென்றிருந்தேன்
வீணப்பாபாற்கடலிற்றுயின்றவொன்று
மெய்யாகச்சொல்லுவதுமிதுதானுமே. (௩௨௩)

ஆமப்பாதேவர்கள்தான்யென்னைத்தேடி
யாரானுர்காலாங்கியையர்தன்னைக்கேட்டார்
நாமப்பாயிருக்குமிடமவருஞ்சொல்ல
நாடியேபாற்கடலில்வந்துசேர்ந்தார்
ஓமப்பாவெந்தனையுந்தியானஞ்செய்தா
ருடனெழுந்துவிழித்துயான்பார்த்தேனப்பா
வேமப்பாயெல்லார்க்குமமிர்தமீந்தே
வெண்மைபெருந்தயிர்க்கடலுமமிர்தமாச்சே. (௩௨௪)

ஆச்சுதப்பாபாற்கடலிற்றுயின்றதாலே
யழகானதயிர்க்கடலுமதுதானுச்சு
வாசசுதப்பாபருதியொளிப்பட்டதாலே
வல்லதயிர்நெய்க்கடலுமாச்சுவாச்சு
நீச்சுதப்பாவகஸ்தியருமதனைக்கண்டு
நிலையாதவுவற்கடலுமாக்கிவைத்தார்
ஓச்சுதப்பாரசக்கடலுமூரிலாச்சு
வுத்தமனேயம்பூலங்கரும்புதானே. (௩௨௫)

தானென்றசுத்தகடல்கமண்டலத்திற்கொண்டார்
தப்பாமல்நற்கடலைவயத்துள்வைத்தார்
வேனென்றகடலானதேழுமாச்சு
வெண்சதுரகிரியில்வந்துகுடியாய்நின்றேன்
நானென்றபெண்களும்லோகத்தில்வந்து
நாருடையரூபமதாய்ப்பிறந்தாரப்பா
ஊனென்றமனிதருக்குக்கட்டிவைத்தார்
வுடனுடனேவித்தையதாயறுத்தார்பாரே. (௩௨௬)

பாரப்பாவந்தவொருபெண்களைத்தான்
  பரிவானகுடித்தனத்திலாகாதென்று
தீரப்பாசமுத்திரத்தோர்தீவுதன்னில்
  தீதானகாட்டினிலேகொண்டுபோய்விட்டார்
வீரப்பாகனிகிழங்குவதனைத்தின்று
  வெளுத்ததடாதேகமெல்லாம்வெண்மையாக
ஆரப்பாவப்பவுள்ளமனிதரொல்லா
  மற்பவயதல்லவேபூரணமுமாமே. (௱௨௭)

ஆமென்றமனிதரிடவுயிர்போகாம
  லாச்சரியந்தரணிகனிற்புதைத்துவைப்பார்
நாமென்றுதொட்டவெனைத்தொட்டாரெல்லாம்
  நாட்டிலேயிறந்ததல்லாற்சாவோயில்லை
வேயென்றகவனமதுபோட்டுக்கொண்டு
  வெகுதேசஞ்சுத்திவந்தேன்வெகுநாள்தன்னில்
போமென்றபெண்களெல்லாம்வெளுப்பாய்க்கண்டேன்
  புகழான பூமியிலேயிரங்கினேனே. (௱௨௮)

இரங்கிவிட்டேனிருந்தவொருபெண்களெல்லா
  மேகவெண்மையெதனாலேயாச்சுதென்று
வரங்கிவிட்டபூமிதனையானும்பார்த்து
  வழ்லையுடகாரமதுசொல்வப்போகா
கிரங்கிட்டேன்காரமதுபார்த்துப்பார்த்து
  கிடையாதேவன்பத்தாருலகுதன்னில்
உரங்கியுடன்வழலைக்குவுயிருண்டாக்கி
  யுற்பனமாய்வேலையெல்லாந்தொடங்கினேனே. (௱௨௯)

தொடங்கினேன்பெண்களுடன்கூத்துமாடித்
  தொலையாதபிள்ளைகளும்பிறந்ததப்பா
அடங்கினதோர்சரக்குவறுபத்திநாலு
  மங்கிருந்தகாரமதாய்ச்செய்துப்பார்த்தேன்
மடங்கினதோர்சரக்கெல்லாங்காரங்கார
  மகத்தானசித்தர்களுங்காணமாட்டார்
புடங்கினதோர்சரக்கையெல்லாம்பிள்ளைகட்கு
  பூரணமாய்ச்சொல்லிவைத்தேன்புத்திதானே. (௱௩௰)

புத்தியென்றபிள்ளைகட்குப்ரிவினமேசெய்து
பிரித்தவரைப்பதினெட்டுத்தொட்பியாக்கி
சித்தியென்றகாயசித்திகவுனஞான ஞ்
சிவயோகமுதலாகவுரைத்துவைத்தேன்
வெற்றியென்றவித்தையெல்லாஞ்சொல்லிவைத்து
விளங்குவாய்ரெண்டுசகஸ்திரந்தானென்று
பத்தியென்றசத்திசொல்லின்படியேகேட்டால்
பாராள்வாயென்றுவரங்கொடுத்திட்டேனே. (௱௩௧)

கொடுத்துவிட்டேனதனைவிட்டாகாசமார்க்கங்
குளிகையிட்டுப்பறந்தேனப்போதுகண்டு
அடுத்தவென்னைமைந்தரெல்லாமையயென்று
றப்பரமேசொல்லுவோம்விள்ளாதேயென்றேன்
தொடுத்திட்டார்பராபரனேயென்றுசொல்லித்
தோத்திரங்கள்செய்திருக்கமூத்தியென்றேன்
விடுத்திட்டாரவர்களையும்விட்டுநீங்கி
வெகுசருக்காய்பரங்கிரிடதிற்சென்றேனே. (௱௩௨)

சென்றிட்டேனிறைந்ததொருமழைபூநீர்
செகத்திலேகிடையாதசருக்குமெத்த
அன்றிட்டேனிந்தனமுமதிகமென்று
வங்கிருந்துசரக்குகளைவைத்துப்பார்த்தேன்
வென்றிட்டசரக்கையுந்தான்வேதைசெய்தேன்
வெகுசருக்குவெகுசருக்காயிரத்திநேமூ
கன்றிட்டேனந்தவொருவயசைக்கண்டு
கற்பமுண்டுயிருந்தேனவ்வூரிற்றனே. (௱௩௩)

ஊரொன்றவூர்தனிலேயிருக்கும்போது
வுடன்சாபங்கொடுத்தபிள்ளைத்தேடிவந்தார்
காரொன்றபிள்ளைகட்குச்சாபந்தீர்த்துக்
கற்பமதுவங்குவைத்துவுண்ணச்சொன்னேன்
தேரொன்றவுபதேசஞ்செப்பிவிட்டு
செகத்திலேவந்துவிட்டேன்சித்தினுள்ளே
நேரொன்றமருந்துமாமலையில்வந்தேன்
நெடுமலையராக்ஷதனும்பிடுங்கிறனே. (௱௩௪)

பிடிங்கியேவங்கிருந்துகொங்குதேசம்
பூமியிலேவைங்கிவைத்துவன்னங்கொண்டான்
அடங்கியபின்சென்றுவந்தமலையிலேறி
யழுத்தினேன்பாதாளமுருவத்தானே
தொடங்கியென்றாகஷதனுமலையைத்தூக்க
தூக்குமொருபுரஞ்சற்றேயெழும்பக்கண்டு
ஒடுங்கியதோர்காலடிவூணினமேதயென்று
வுயர்வேறிப்பார்த்தேனேசுத்தித்தானே. (௫௩௫)

சுத்தியேயென்னைப்பார்த்தான்கண்ணிற்காணேன்
சுருக்கானபுளியமரநிழலினின்றேன்
வெற்றியாயிலைதொறுமாராய்ந்துபார்த்தான்
வேலுடனேதெண்டுகொண்டோரிலைக்குணின்றேன்
யுத்தியாயவன்றானுமென்னைப்பார்த்து
வுயரநின்றுகீழேநீயிறங்குவென்றான்
கத்தியேசொன்னதினால்வருவதில்லை
காரணமாயென்மலையைவிட்டேன்தானே. (௫௩௬)

விட்டனென்றசொற்கேட்டுக்கோபஞ்செய்து
விளையாட்டுப்பிள்ளையென்றுசண்டைசெய்து
குட்டநின்றுகூக்குரலிட்டுத்தள்ளவந்தான்
குறியறிந்துவரனுருமங்கேவந்து
அட்டையென்றுவவன்மனதைக்கட்டிவிட்டு
யறிவானபுத்திரனுற்பவமேசெய்து
தொட்டனென்றுசொல்லடாயிடும்பாவென்று
துலங்கவேபெயாதுவுமீந்தார்தானே. (௫௩௭)

ஈந்துவிட்டுவிடும்பனையுமுருத்தான்பார்த்து
யிவன்றனக்குயேவலாயிருநீயென்றார்
காய்ந்துவிட்டகாய்கனிகள்கொண்டுவந்து
கடாக்ஷித்துவானுற்கும்நேசித்தேன்யான்
பாய்ந்துவிட்டவரனுருமென்னைப்பார்த்து
பழம்வேறேயல்லவப்பாபிடிநீயென்றார்
வாய்ந்துவிட்டவானாம்மலையைவிட்டு
வளமானதன்கிரியிற்போய்ச்சேர்ந்தாரே. (௫௩௮)

தாவொன்றவிடும்பனையுந்தானும்பார்த்து
    தாரணியிற்கலக்கம்பைக்கட்டிவைத்தாய்
ஆரடாவுனக்கிந்தபுத்திசொன்னு
    ராச்சரியமாகவொருசித்தைப்பாரு
ஊரொன்றவூரிலுள்ளவுயிரையெல்லா
    மொருசித்தாயாட்டிவைப்பேனுலகையெல்லாம்
நேரொன்றகாவடிதானென்றுக்கப்பா
    நிகரில்லாக்காவடிகள்வருவிப்பேனே. (௱௩௯)

வருத்தாலேவஸ்துசித்தியெல்லாங்கொள்வாய்
    வந்ததொருவமிர்தமெல்லாநமக்காமென்றேன்
கருத்துவந்தவவன்றானும்வணங்கிக்கொண்டு
    கட்டளையையிட்டபடிகேட்பேனென்றான்
திருத்தவேயவனார்தானென்றுகேட்டால்
    திரமானமுதல்யுகத்தில்வயிரவனுமாகும்
பருத்ததொருவீரவாகுதேவராகும்
    பகருகின்றவனுமானும்வீமன்தானே. (௱௪௰)

தானென்றவிடும்பனொடுகடம்பனுகுந்
    தப்பாமலவனுமொருதேவனாகும்
வேனென்றதேவனைநான்வைத்துக்கொண்டு
    வெகுசித்துவாடிவிட்டேன்சித்தர்பார்த்து
நானென்றசித்தாகுஞ்சித்தேதென்று
    நலமானவகஸ்தியனுமிங்கேவந்தான்
வானென்றவாலைசுப்பிரமணியாவென்றும்
    வல்லகுருவென்றுமென்னைக்கட்டிவிட்டாரே. (௱௪௧)

கட்டிவிட்டார்யானிருக்குமூலஞ்சொன்னேன்
    கருணையதாயனுபோகமூலங்கண்டான்
ஓட்டிவிட்டானவனுமொன்றுதானே
    மூலகத்தில்மோகமதுகொஞ்சமாச்சு
செட்டிவிட்டார்மாலாய்நான்சேர்ந்ததாலே
    ஜெயமானவகஸ்தியன்மால்வாவாவென்றேன்
விட்டுவிட்டானிருவருமேவெவ்வேறாகி
    விதமானநாட்டினிலேயிரங்கினரே. (௱௪௨)

ஓமப்பாவங்கையொருகன்னிதன்னை
யுறவாகக்கலியாணஞ்செய்துக்கொண்டான்
காமப்பாவப்படியோர்பெண்ணைத்தானும்
நலமாகமணம்புரிந்துக்கொண்டேனப்பா
ஆமப்பாயிருவருமேபிள்ளைபெற்று
ரவர்பிள்ளைக்காதியுடதவமேசொன்னர்
வாமப்பாவெந்தனுடபிள்ளைக்கேதான்
வல்லபங்களொருபங்கியானிடஞ்சொன்னேனே-(௱௪௧)

சொன்னதொருவுத்தாரப்பிள்ளைகேட்டுச்
சுருக்காகமேல்நோக்கிப்பார்த்துக்கொண்டான்
அன்னதொருவவர்பிள்ளைகீழேபார்த்து
வண்டாண்டமறியாமல்மயங்கினன்பார்
வின்னமில்லாப்பிள்ளையதுமேலேபார்த்து
விளைவில்லையென்றுசொல்லிமொட்டையிட்டான்
தன்னையவன்கீழ்ப்பார்த்துவளர்த்திப்பார்த்து
தான்சிகைவைத்துக்கொண்டுவளர்த்திட்டானே.(௱௪௪)

இட்டதொருசத்திசிவமிருகூர்பார்த்து
யிதமானசத்திக்காபரணம்பூண்டான்
வட்டதொருபூமிசத்திசிவமேயென்று
வளமானபீஜநிலம்படலாகாதென்று
மட்டதொருமனமறிந்துமண்டிபோட்டு
மகத்தானபொருளையுந்தான்தெளிந்துக்கொண்டான்
சட்டதொருவொழிந்தவிடஞ்சுத்திசெய்து
சற்குருவாம்புருவகிலைகாட்டுவானே. (௱௪௫)

காட்டுவான்சார்வென்றுஞ்சகலமென்றுங்
காண்பதொருமணிதருக்குச்சலாம்சலாமென்றும்
மூட்டுவானல்லாவல்லாவென்று
முடித்ததொருயமபுரத்திணடுக்கவென்றும்
நாட்டுவான்பள்ளிகொண்டவாசலென்றும்
நயனத்தின்மேல்நோக்கிநாட்டச்சொல்லி
ஆட்டுவான்வேதமடாகடந்தவேத
மாச்சரியமதைவிட்டாலில்லைதானே. (௱௪௬)

தானென்றவகஸ்தியர்தன்பிள்ளைதானுஞ்
சத்திசிவமிருவருக்காபரணம்பூண்டான்
மானென்றமனந்தனிலேசிவந்தானென்று
மயங்கியவன்மனநோக்கிக்கைகுவித்தான்
வேனென்றபூமியிலேவீழ்ந்துவீழ்ந்து
வித்மர்னபீஜஙிலம்பறறவீழ்ந்தான்
நானென்றவெந்தன்பிள்ளைகளும்பார்த்து
நலமறியாமூடனென்றுநயந்திட்டாரே. (ருசஎ)

நயந்திட்டார்காயத்திரியுபதேசமென்று
நல்லதொருவுபநயனம்பூணூலிட்டான்
உயர்ந்திட்டருத்ராக்ஷவிபூதிபூண்டா
னுயிர்நிலையையறியாமற்சிவஞ்செபித்தான்
துயர்ந்திட்டவெந்தனுடமைந்தன்றானுந்
தூண்டியிட்டுவுயிர்நிலையைப்பிடித்துக்கொண்டான்
ஆய்ந்திட்டமுதல்வேதங்கடைவேதந்தா
னுச்சரியமெனதுமைந்தரறிந்தார்தானே. (ருசஅ)

தானென்றவகஸ்தியருநானுங்கூடி
ஸ்தாபித்தவேதமதுபின்னும்ரெண்டு
வேனென்றசத்தியவேதங்கள்ரெண்டாம்
விப்ரமதைக்கண்டவர்களிவர்களாகும்
நானென்றபிரம்மத்தைக்கண்டவர்களெல்லாம்
நல்லபிரம்மகுலமதுதான்பிராம்மணருகும்
கோனென்றசமண்வேதம்மூன்றும்வேதங்
கூறியதோர்கடைவேதந்தானுக்குமாமே. (ருசக)

ஆமென்றபிரமனுக்குச்சிகைப்புமாகு
மாச்சரியம்ருத்திரற்குவிபூதியாகும்
நாமென்றவிஷ்ணுவுக்குநாமமாகும்
நலமானவியமனுக்குகரிகோடாகும்
வாமென்றமஹேஸ்வரற்குவொன்றுமில்லை
மகத்தானநிர்வாணமாகுமாகும்
ஓமென்றபிரணவத்தையறிந்தோர்க்கெல்லாம்
வுணர்வில்லைவேதமெல்லாமொன்றுதானே. (ருடு)

ஒன்றானவகஸ்தியருமூலந்தன்னில்
வுயர்ந்ததொருகைலாசந்தன்னைக்கண்டு
அன்றானவீசனுமேயனுப்பிவைத்தா
ராதியிலேயவர்முன்னேவந்துசேர்ந்தார்
நன்றானமனிதர்கள்விக்கினமேதீர
நலமானவயித்தியத்தால்வியாதிதீர்த்தார்
வென்றானவீஸ்வரனுங்கைலையென்று
விதமானவகஸ்த்தியர்க்குவந்ததாமே. (ஈருக)

வந்ததால்வரும்விக்கினேஸ்வரற்கு
வல்லதொருவகாரத்தால்வாகனமுமாகும்
தொந்தமாயுலகினிற்கற்பத்தையாடித்
துல்லயாதவுள்வினையையறுக்கச்சொன்னார்
அந்தரங்கக்கண்தெரியாமூடர்க்கெல்லா
மறிவானஞானக்கண்திறக்கவைத்தார்
விந்தமாங்கலசமதின்விபரஞ்சொன்னார்
விதமாகவாயிரம்பேர்க்கருளினாரே, (ஈருஉ)

அருளினார்திறக்கவுந்தான்வழியுஞ்சொன்ன
ராச்சரியமதனாலேகாண்பதானார்
ஒடுங்கினார்கும்பத்திற்புகுந்துக்கொண்டார்
வோங்காரபஞ்சாக்ஷரத்தையறிந்துக்கொண்டார்
ஊரிலுள்ளமனிதர்களுஞ்சொல்வதொன்று
வுபத்ரமவரிடத்தில்வந்துதும்பியென்றார்
சார்வினிடசமத்தையுந்தானென்னசொல்வேன்
சாற்றுகிறேனாச்சரியமொன்றுதானே. (ஈருங)

தானென்றவன்னவற்குவந்தபேற்றைத்
தாரணியிற்சாற்றுகிறேன்கேண்மோமைந்தா
கோனென்றகும்பத்திற்பாய்ந்ததாலே
கோதில்லாக்குடவயிறுதானுமாச்சு
வேனென்றதும்பியதுவடைவதாலே
விதமானதும்பிமுகமவருக்காச்சு

வானென்றவைந்தெழுத்துமறிந்ததாலே
வல்லதொருவைங்காமுமவருக்காச்சே. (௩௫௪)

ஆச்சுதென்றவாறைப்பார்த்துப்பெண்ணென்
றழகாருமுதற்சாதிவேண்டுமென்றார்
மாச்சென்றமுதற்சாதியீஸ்வரியுமாகும்
மைந்தனேரெண்டாஞ்ஜாதிருத்ரியாகும்
வாச்சென்றமூன்றுவதிலக்குமியுமாகும்
வல்லநான்காம்ஜாதிவாணியாகும்
தாச்சென்றஜாதிகளிப்படியேயாகுஞ்
சாற்றுகிறேன்வேறுகிடையாதென்றாரே. (௩௫௫)

என்றதொருவாக்கையுந்தானவருங்கேட்டு
யிதமானமுதற்சாதிவேண்டுமென்று
நன்றதொருதேவருடன்கூடிநின்று
நலமானவரியதவஞ்செய்துக்கேட்டார்
வென்றதொருதபஞ்செய்துவரனைக்கேட்க
விதித்தாரேயாருஞ்சாதிமார்க்கம்
அன்றதொருமோதகங்கள்வடையோடப்ப
மவற்கடலைப்பொரிதேங்காய்சற்கரையின்பாகே. (௩௫௬)

பாகானகரும்பிளநீர்முதலதாகப்
படைத்துவைத்துமராறுமொன்றுசொல்வார்
வாகாய்நீயிருந்தவகைஒன்றாய்ச்சேர்த்தால்
வல்லதொருமுதலானபெண்ணுமொன்று
தாகானவிபரமதாய்திருஷ்டிக்கச்சொன்னார்
ஸ்தாபித்தார்கும்பமுனிதலவிபரம்பார்த்து
தேகானதேங்காயைத்தலையாய்வைத்து
தேன்மாவைத்தசையதுவாயாக்கினரே. (௩௫௭)

ஆக்கினர்கரும்பதனையெலும்பதாக
வாச்சரியமவற்கடலைகருவியாக்கி
தாக்கினர்மோதகத்தைஸ்தனமதாகத்
தப்பாமலப்பவடையிரலாக
நோக்கினரவையவமுப்பத்திரெண்டும்
நொடியிலேதிருஷ்டிக்கவாரனர்கண்டு

வாக்கிஞல்வல்லபையேயென்றுசொல்லி
மகத்தானநாமமது கொடுத்திட்டாரே. (௱ருஅ)

கொடுத்திட்டாரவருமூதற்சாதியென்று
கூடவேவைத்தொன்றுங்கூறிவைத்தார்
அடுத்திட்டகலிமூடித்துவந்தாயாஞ
லாச்சரியமெல்லாந்தான்காண்பாயென்று
விடுத்திட்டார்விநாயகனும்பெண்ணைக்கூடி
விதியோடேபூசையதுசெய்துக்கொண்டார்
தொடுத்திட்டபூசையதுசெய்ததாலே
துலங்கியதோர்மங்கையவள்தானுமாமே. (௱ருகூ)

ஆமென்றவிம்மார்க்கஞ்செய்தமைந்தமங்கை
யர்ச்சரியமநோன்மணியுமவள்தானுகும்
வாமென்றவீஸ்வரர்க்குமூருத்திரர்க்கும்
மகத்தானவிலக்குமிக்குஞ்சரஸ்வதிக்கும்
நாமென்றநாற்சாதிப்பெண்களுக்கும்
நாடினேனேந்தாஞ்சாதியிவள்தானுகும்
வேமென்றவகஸ்தியரும்விதியைவெல்ல
வெகுமருந்துபாடியதால்விநாயகனுமாமே. (௱கூ0)

## தன்னையறியும்-விபரங்கூறல்.

ஆமென்றகாலாங்கியையர்தானு
மருளிஞாதிதலவிபரமெல்லாம்
நேமென்றபிண்டத்தின்விபரங்கேளு
நிலையானபொருளையெல்லாநினைவாய்க்கேளு
வாமென்றவெளியினதுபூசைகேளு
வல்லசித்துவாடும்விளையாட்டைக்கேளு
தாமென்றவிருசார்வுமூலமெல்லாஞ்
சாற்றுகிறேன்சமாதிநிலைசாற்றுவேனே. (௱கூக)

சாற்றுகிறேன்கருவூரான்கொங்கணருமப்பா
சஞ்சலங்களடங்குமிடம்நிலைதான்பாரு

கோத்துவேனென்சாணுஞ்சடலந்தன்னிற்
கோர்வையாய்சிற்பவர்தானூர்தான்கேளு
பாத்துவேன்பூமியென்றபூமிதானும்
பருவமாய்சிவன்சத்தியிருவர்சேர்ந்தார்
தேத்துவேனண்டத்திலுள்ளதெல்லாந்
திறமானபிண்டத்திற்காட்டுவேனே. (௱௬௨)

காட்டுகிறேன்நாலும்ரெண்டும்பிருதிவியாகும்
கருவானபடம்ரெண்டும்பூமியாகும்
மூட்டுவேனுதிசத்திசிவமுமாகும்
மொழிந்ததொருபூமியின்மேல்வாய்வதாகும்
சாட்டுவேன்வாயுவென்றவிருகாலண்டஞ்
சமஸ்தானமதன்மேலேபிரமனண்டம்
நாட்டுவேன்பிரமனுசனமுமாக
நான்முகனும்வீற்றிருக்குமூலமாமே. (௱௬௩)

மூலமென்றசதுர்முகன்தன்திருஷ்டிப்புத்தான்
முடிவானவாசனமேற்சுழியின்கீழே
ஞாலமென்றவவ்வண்டவரையுமாகும்
நாடியதோர்பிரமனென்றகுயவனாகும்
ஜாலமென்றவேழ்வியதுகுயத்தியாகுஞ்
சமர்த்தானதிருஷ்டிப்பால்வாணியாகும்
வாலமென்றவிருவருமேசேர்ந்துகொண்டு
வையகத்தைசிருஷ்டித்தாரிவர்கள்தானே. (௱௬௪)

தானென்றபிரமனுக்குவன்னந்தன்னை
தலந்தோறும்வாகனமாயமைக்கவேண்டும்
வேனென்றபிரமனுக்குபீஜமென்றால்
விளங்கிநின்றநாற்கோணமுக்கோணந்தான்
கோனென்றசிகாரமொடுசகாரம்போட்டுக்
குறியானமம்மென்றுசத்தியேதான்
வானென்றமகாரமொடுவேவேவென்று
வனுபிரணவபிரம்மாவேவாவென்றூரே. (௱௬௫)

வானென்ற-உகாரமிட்டூதும்போது
வல்லபிரம்மனண்டமதுகண்ணிற்றோன்றும்
தானென்றவன்னமதுபிரம்மாவைத்தான்
தாங்காமற்றொழில்கள்செய்வனகாரத்தாலே
தானென்றவாகனந்தான்செய்யுமார்க்கம்
சலம்வேறுபால்வேறாய்ப்பிரித்துவைக்கும்
ஆமென்றபிரம்மலோகதேவதைகள்முப்பதுவா
மதன்மேனலங்குலந்தானதனுட்டானே. (௫௬௬)

தானென்றவதனுள்ளேசுத்தியாகுந்
தலமானபிரமன்ஸ்தாபிக்குமிடமதுவாம்
ஏனென்றபிரமனதுவெல்லைதானு
மெட்டுரெண்டுயோசனைதான்விஸ்தாரமாகும்
பானென்றகதிரவனுர்வுதிக்குமிடமாகும்
பகருகிறேன்பண்பொன்றிப்பாரின்மீதே
வாமென்றமைந்தாவாதித்தனென்னும்
வல்லதொருப்ரப்பின்கீழிருகால்கேளே. (௫௬௭)

கேளப்பாவைங்கோணமைந்திதழுமாகுங்
கெடியாகவதனடுவின்முக்கோணந்தான்
வாளப்பாவம்மென்றவெழுத்துமாகும்
வளமாகவைந்துமூன்றெட்டுமாகும்
நாளப்பாவெட்டிதழுமெட்டிச்சுத்தி
நலமானபிருதிவியப்புரெண்டுஞ்சேர்த்து
நீளப்பாவிந்நீளந்தன்னிலேதான்
கெடிதானகம்பம்ரெண்டிற்சேர்த்துதானே. (௫௬௮)

தானுருவாய்நின்றதொருகம்பந்தானுந்
தலமாகுமஞ்சுருவாணியாணி
வானுருவியீய்ந்துநிற்குஞ்சாகாக்காலும்
வல்லசத்திசிவமதுவாய்நின்றகால்தான்
ஊனுருவிச்சத்திக்காற்கீழேகாட்டி
வுயர்சிவத்தின்காலையுந்தான்மேலேகாட்டி
நானுருவிக்கண்டதொருமார்க்கமென்று
நலமானமாவலிக்குக்காட்டினேனே. (௫௬௯)

காட்டினேன்மாவலிதான்சிரசுதொட்டு
காட்டினலறிவனென்றுவென்னைக்கேட்டான்
மாட்டினேன்காலாங்கியுருத்திரனார்காலே
மயக்கமாய்வைத்துயானமூத்திக்காட்டக்
கூட்டினன்காலாங்கிகுருவைக்கண்டு
கூட்டைவிட்டுப்போகாமற்சிரஞ்சீவியாக
நாட்டினன்ஜெகதனையுந்தான்பொட்டலாக்கி
நல்லதொருமகாரத்தால்வாழ்ந்திட்டேனே. (௱எய)

இட்டதொருகுண்டலிதாயிருக்குந்தலம்
யிதமானபிரம்மாவும்விஷ்ணுவுந்தான்
சட்டதொருருத்திரன்மஹேஸ்வரன்தான்
சமத்தானநாற்காலாய்திருத்திக்கொண்டு
நட்டதொருகால்மேலேசதாசிவத்தை
நலமானபலகையாய்நாட்டிக்கொண்டு
திட்டதொருவீஸ்வரியாயிருந்துக்கொண்டு
திருஷ்டிப்பாளண்டாண்டந்திருஷ்டிப்பாளே. (௱எக)

பாழென்றயுகமதுதான்முடிந்தகாலம்
பரப்ரம்மசத்தியாயமூியாசத்தி
வாளென்றசத்திக்குளடங்குமென்பார்
வல்லசத்தியுள்ளடங்கும்படிதானப்பா
ஆளென்றகுண்டலிதாயிருக்குமூலை
மறிந்துநீயற்சித்தாற்குருவைக்காண்பாய்
தானென்றகால்பிடித்துவேறும்போது
தள்ளுமடாகாற்றுவலுவேகங்காணே. (௱எஉ)

காணப்பாகாற்றுக்குமேலதாகக்
கனசோலிமெத்தவடாசப்தமேகம்
தோணப்பாமழைபொழியுமிருளுங்கம்மூந்
தொந்திரவாற்செத்தவர்கள்கோடாகோடி
வீணப்பாவதன்மேலேவேதப்பிச்சென்றால்
விண்ணொளிருங்கதிரவர்கள்கோடாகோடி
காணப்பாவிழிதிறக்குமுன்னேமுன்னே
நலமானவொளிவீசுங்கண்கொள்ளாதே. (௱எ௩)

கொள்ளாதவானந்தங்காணவென்றாற்
　கொழுந்துவிட்டுவெரியுமதுவன்னிவிருட்சம்
உள்ளானகுண்டலிதானடுக்கவுண்டு
　வுற்றதொருகற்பமெல்லாமங்கேகொண்டு
அள்ளானதேகத்தைசுத்திசெய்து
　வப்புறமேசென்றாலாச்சரியங்காண்பாய்
விள்ளாதசோதியதுவெளியிற்காணும்
　வேதியருமிருக்குமிடங்காணலாமே. (௱௭௪)

காணலாம்வண்ணான்வண்ணாத்திதானுங்
　கருவானவழலையினால்திருஷ்டிசெய்வார்
பூணலாமவர்களைநீகண்டாயானாற்
　பொன்னானதக்கம்வெள்ளிசித்தியாகும்
தோணலாமதன்மேலேயடுக்குமொன்று
　துலங்கியதோர்பொதிகையென்றுசொல்லவாகும்
நாணலாமவரைநீகண்டாயானால்
　நல்லசித்தனென்றுசொல்லிப்பேரிவாரே. (௱௭௫)

வாரானகும்பமுனிவாட்கையோடு
　வல்லபையோடாயிரம்பேர்வாழ்ந்திருப்பார்சித்தர்
போனவுலகதனிற்கன்னிமூலை
　பேசாதமவுனத்தாற்போய்நீசேரு
ஆரானவவர்களுக்குமேலேயப்பா
　வாயிரத்தெண்ணிதழோடேகமலமொன்று
கூரானகூறறிந்துசென்றுநீதான்
　குடியிருக்கவீடதுதானிலைத்துப்போச்சே. (௱௭௬)

போச்சப்பாவவரிருக்குமண்டமேலே
　புகழாகவிருகமலம்பூர்த்துநிற்கும்
வாச்சப்பாலட்சுமியுமாலுமாக
　வசித்திருக்குங்கமலமடாமிரண்டுமாகும்
மோச்சப்பாமோகனப்பெண்ணதிலேநிற்கும்
　முடியாதுவவளுடையமோகமெத்த
காச்சப்பாகண்டத்தின்கீழேயானுங்
　கருவானகருத்தின்மேல்வாழுவோமே. (௱௭௭)

ஆமென்றபுருவத்தின் கீழேநிற்பா
ளவள்செய்யுமானந்தஞ்செப்பப்போகா
நாமென்றவகஸ்தியரிடம்பேருபெற்றால்
நலமானமயக்கமெல்லாந்தீருந்தீரும்
வேமென்றநவகோணம்விட்டுநீயும்
விதமானவிந்துவிட்டுக்கோணமிட்டு
ஓமென்றவகஸ்தியனாயங்கேவைத்து
ஓம்-கிலியும்-அங்கு-சிங்கு-ஆம்-ஆம்-என்னே. (௱எஅ)

என்றுதான்ரீங்காரம்சிவாவாவென்று
யிதமானநவகோணத்துள்ளேயிட்டு
நின்றுதானென்றுகக்கால்களுணி
நேயமுள்ளமாயவனைக்காணலாகும்
நன்றுதானறுகோணமறைந்துக்கொண்டு
நலமானவோரிதழுமதன்மேலிட்டு
ஒன்றுதான்விந்துவிட்டுக்கோணத்துள்ளே
ஓங்காரம்நடுவிட்டுச்சுத்திக்கேளே. (௱எகூ)

கேளப்பாநகாரமொடுசகாரமிட்டுக்
கெடியானஅகாரமொடு-உகாரமிட்டு
நீளப்பா-வகாரமொடு-ஆம்-ஆம்-என்று
நிலைத்ததொருசுக்கிலவர்ன்னதேவாவென்று
வாளப்பா-வசியநம-வென்றுதானும்
வல்லவுருவாயிரமேசெபித்தாயானல்
கேளப்பாவில்லை ருத்திரனார்வீடு
கொம்பேறிக்காட்டிடுவார்விமலவீடே. (௱அ0)

வீடானவுருத்திரனார்வீடுகேளு
விளங்குகின்றசுந்தரனார்வசிக்கும்வீடு
வாடானகாலகண்டன்விளையாடும்வீடு
வல்லவொருருத்திரனார்வாழும்வீடு
ஏடானவுச்சிவெளிதிறக்கும்வீடு
யிதமானதிரிசூலம்பிடித்தவீடு
தாடானவாசியதுசுழிக்கும்வீடு
தயவானநாற்பத்திமுக்கோணவீடே. (௱அக)

வீடானவீடுபெறவேண்டுமென்றால்
  வீணிலேயலேயாதேவினிமேலப்பா
நாடானநாட்டிலேகோணமுண்டு
  நாடியதோர்நாற்பத்திமுக்கோணந்தான்
வாடாதவக்ஷரத்தானேம்பத்தொன்று
  வல்லவொருவக்ஷரந்தானேம்பத்தொன்றுங்
கோடானகோடிவிதபதிலேகாணுங்
  கூர்ந்துபாரமிர்தவல்லிநாட்டந்தானே. (ஙஅஉ)

தானென்றவமிர்தவல்லியிதழ்தான்கேளு
  தாபித்தவாயிரத்தெட்டிதழ்தானப்பா
ஊனென்றதேகமதுவிதனுலாச்சு
  வுன்னிவுன்னிக்காலமுமேயிருக்கலாச்சு
நானென்றருத்திரனூர்புருவமையம்
  நல்லதொருபிரம்மத்தினடுவேயாகும்
வேனென்றவுச்சிவழிதிறந்துதானல்
  வேகாததலேயங்கேகாணலாமே. (ஙஅங)

காணலாம்நாதமென்றவிந்துவூறி
  கனமானபிரமனிடம்வந்துசேரும்
பேணலாமுருத்திரனூர்கமண்டவநீரப்ப
  பெரிதானவருவியொடுவந்துவீழும்
தோணலாந்தொண்ணூற்றாறுகருவியாகுந்
  துலங்கிநின்றவைந்துபேர்வுறன்முறையாகும்
ஆணலாமகஸ்திசத்தியாக்கைதானு
  மருவியிலேதோய்ந்துமுத்திகூடினாரே. (ஙஅச)

கூடினார்வுருத்திரனுருத்திரியுமங்கே
  கொலுவானவமிர்தவல்லிபிரமசத்தி
நாடினார்நந்தியென்றவிடபந்தானும்
  நலமானவைவர்தனேநாட்டிவைத்து
ஓடியேயெட்டினாற்காலேக்காட்டி
  வுற்றதொருகொம்பிரண்டினாலேகட்டி

ஆடிஞர்உருக்திரனைமேலேவைத்து
அந்தவிதங்கொண்டாக்காற்கைலேயாச்சே.  (௱அரு)

ஆச்சுதென்றபஞ்சகர்த்தாளையறிந்தாயாறு
லாக்கையதுவழியாதுவென்றமப்பா
வாச்சுதென்றதிருமூலர்வெளியாய்ச்சொன்னர்
வகைவிபரமறியவென்றுற்பதினுறிற்பார்
மூச்சுதென்றகருவூரான்முடிவைக்கண்டான்
முடிகாணக்கொங்கணனுமலேந்துக்கண்டான்
பேச்சுதென்றசக்கரமக்ஷரங்கள்தானும்
பெரும்பாதைசெல்லூர்க்குச்செல்வதாமே.  (௱அசு)

ஆமென்றபிரமனுக்குச்சிரங்களைந்து
வாச்சரியமவருக்குக்கண்ணேபத்து
வாமென்றுவிருக்கயிலேதிருஷ்டிசெய்த
வல்லதொருவுயிர்களுக்குதுவாரம்பத்து
ஓமென்றுவொருதலைதான்போனபோது
வுலகத்தில்திருஷ்டியெல்லாநவகண்ணுச்சு
நாமென்றகண்ணொன்றுமறைந்ததாலே
நாட்டிலேமனுக்களெல்லாமூடமாச்சே.  (௱அஎ)

ஆச்சென்றபிர்மாவும்விஷ்ணுவுந்தா
ஞச்சரியமகஸ்தியருமுருத்திரன்தானும்
தேச்சென்றதிசைசதாசிவன்தான்
தெரிவானகுண்டலியுயவண்ணனுந்தான்
வாச்சென்றபேர்களைத்தான்வகையதாக
வழிவேறேபொருள்வேறேவகுத்துச்சொன்னேன்
மூச்சென்றசங்கங்களக்ஷரங்கள்தானும்
முடியாதவவாவர்க்குவெவ்வேறொன்றே,  (௱அஅ)

என்றதொருமார்க்கமதையொன்றாய்க்காண
யெவருக்குமாச்சரியமொன்றுகேளு
நன்றதொருதேவனுமாய்ப்பிரமனுகி
நலமானவிஷ்ணுவுமாயுருத்திரனுமாகி
நின்றதொருவம்பரத்திற்சதாசிவனுமாகி
நிலைத்துநின்றமூலகுருவொன்றேயப்பா

வென்றதொருமூலகுருவதிகம்பாரு
வெகுசுருக்காயவரிருக்குமிடத்தைப்பாரே, (௱அகூ)

பாரப்பாவல்லவனைத்தேடவென்றுற்
பலவிதங்கள்காட்டிடுவார்பதியைக்காணர்
வீரப்பாதிருமூலரிருக்குந்தானம்
விதமானவண்டமெல்லாம்நிறைந்துநின்றார்
காரப்பாவவரொருத்தர்காலேக்காண
கணக்காகவனையாறுங்காணலாகும்
சேரப்பாமூலவர்க்கசேற்கைதன்னில்
சேர்ந்தாக்காற்ஜெயமாகுஞ்சேர்ந்துபாரே. (௱கூ௰)

## மலைவளங் - கூறல்.

சேர்ந்துபார்மூலவர்க்கமிருக்குந்தானம்
செப்புகிறேன்கிலையறிந்துசெய்வாயப்பா
ஆய்ந்துபார்காசிக்குமேற்கேகேளு
வாச்சரியமைன்னூருகாதஞ்சென்றால்
தோய்ந்துபாரங்குமொருமலைதானுண்டு
துலையாதவிமயகிரியதுவேயாகும்
வாய்ந்துப்பார்மலையேழுந்தாண்டிச்சென்றால்
மகத்தானமலையொன்றுவெளுப்புமாமே. (௱கூக)

வெளுப்பானமலைமுடியினுயரஞ்சென்றால்
வேதமென்றகாவியுடகொடியேகாணும்
வெளுப்பாகஜலம்வந்துகிழேவிழும்
விதமானரத்தினத்தைப்போலேகாணும்
களிப்பாகவெண்ணுதேவதனில்ஸ்நானம்
கண்டவுடன்செய்துநீநின்றாயானால்
ஒளிப்பானவொளிபோலேகணங்களேழு
முன்னுடையகண்களினிகாண்பாய்பாரே. (௱கூஉ)

பாரொன்றபேர்கள்தனைக்கண்டாயானால்
பார்த்தவுடன்மஸ்கரித்துப்பண்பாய்நில்லு
வாரொன்றவிடிபோலேமுழங்குமங்கே
வாத்தியங்கள்கேழ்க்குமடாசங்கினோசை

காரென்றவவ்விடமண்டலமேகார்த்தால்
கனசித்தரியாவரையும்வெளியிற்காண்பாய்
ஊரொன்றேபோவென்றேதிரவியங்களீவார்
வுருதியாய்காலாங்கியையனையுங்கேளே. (௱கூங)

கேளப்பாகாலாங்கியையன்றன்னைக்
கெடிஸ்தலந்தான்சொல்லுமென்றுகேட்பாயானல்
கோளப்பாதீரவென்றுகற்பமீந்து
குடியானகாலாங்கியைனிடஞ்சேர்ப்பார்
வீளப்பாகண்டவுடன்பதத்தில்வீழ்ந்து
விதமானகைகட்டிவாய்பொத்திநின்றால்
ஆளப்பாவென்றுசொல்லிகாலைக்காட்டி
யர்ச்சரியங்கவனசித்துமருள்வார்பாரே. (௱கூச)

பாரப்பாவம்மலையிற்சித்தர்கோடி
பரிவாகக்கலந்துமங்கேநிற்பாரப்பா
சேரப்பாவங்கிருந்துகமண்டலநீர்செல்லுஞ்
ஜெயமாகவெழுநூறுகாதமட்டும்
வீரப்பாவம்மலைக்குவடக்கோர்காதம்
வெளிசென்றால்மலையொன்றுகோமேதகமுமாகும்
நேரப்பாயதன்வடக்கோநாற்பதினாயிரந்தான்
நிலையானகாதமதுசெல்வாய்க்காணே. (௱கூரு)

காணப்பாவங்குமொருமலைதான்தோன்றுங்
கதிர்மதியுமதன்கீழேவலைந்தேபோகும்
தோணப்பாவஷ்டவர்ணந்துலங்கிநிற்குந்
தொலையாதவைந்துதலைநாகம்வாழும்
பூணப்பாநாகரத்னவிளக்கைப்போல
பொழுதடைந்தாலுடன்தோன்றுஞ்சோதிசோதி
வீணப்பாபோகாதுவங்கேசென்றால்
வெகுபேர்கள்கூட்டமதாய்மேவுவாரே. (௱கூசா)

மேவுமென்றமலையுயரமேயோர்காதம்
விரிந்துநின்றவிஸ்தாராமாயிரத்தெண்பதகம்

சாவுமென்றசார்பில்லைமலைச்சார்பெல்லாஞ்
 சஞ்சீவிகாற்றுமொருநூறுகாதம்
தாவுமென்றகாத்தடித்தாற்சஞ்சீவியாச்சு
 தாழ்வில்லையானைமுதலெறும்புகட்கும்
வேமென்றமனிதர்களுமங்கேசென்றால்
 வேகாதசடலமதாங்கற்போலாமே. (ருகூஎ)

ஆமென்றமலையதனையீசன்பார்த்து
 வனைநொடிதானதிலிருக்கவாசையுற்றார்
நாமென்றதிருமூலர்பருவதத்தை
 நாடியேவதிலிருப்பார்தபசுசெய்து
வாமென்றகமண்டலத்தினுதகந்தானும்
 வழிந்தோடுந்தேன்போலேபொங்கிப்பொங்கி
போமென்றசலமேழாயிரமுங்காதம்
 புகழானபூமியிலேபொங்குந்தானே. (ருகூஅ)

தானென்றதாரணியோரதனைநோக்கித்
 தகைசேருஞ்சிலாநதியென்றோதுவார்கள்
வேனென்றரிஷிகளுமக்கரையிற்கூட்டம்
 விகற்பமுறும்ராக்ஷதரோர்புரத்திற்கூட்டம்
மானென்றமனிதர்களைக்கண்டாரானால்
 மாமிசந்தானென்றுன்னிப்பிடித்தேதின்பார்
நானென்றதிருமூலரிதனைப்பார்த்து
 நல்லதொருகண்மறைப்புமைசொன்னாரே. (ருகூகூ)

## மறைப்பு-மை-கூறல்.

சொன்னதொருமையதனுச்சரியங்கேளு
 சுருக்கானகரும்பூனைக்கண்ணிரண்டும்
முன்னதொருகாந்தமதுகழஞ்சுவொன்று
 வுத்தமனேபேய்பீர்க்கன்வித்தோர்படிதான்
அன்னதொருசித்தாமணக்கின்முத்தோர்படிதா
 னுச்சரியமிதனைகுழித்தயிலம்வாங்கி
இன்னதொருகூர்மத்திலேடுங்கொண்டு
 யிதமானதுணியுமொன்றுகொண்டுவாயே. (உா)

வாவென்றமுன்கருவைநிழலுலர்த்தி
வல்லதொருகாந்தமதைப்பொடித்துச்சேர்த்து
தூவென்றபொடியதனைவட்டமாக்கித
துணியோடேசுருட்டிநீகிழியுமாக்கி
தாமென்றமனிதர்கள்செல்லாத்தானந்
தரைமெழுகிமணற்பரப்பிவிளக்கும்வைத்தீ
காவென்றகாற்றுமதுவடிக்கலாகா
கண்ணினாலொருவருந்தான்காணொண்ணாதே. (௨௱௧)

ஒண்ணானவடுப்பொன்றுவிந்துபோல
வுறவமைத்துமண்விளக்கில்திரிதான்போட்டு
நண்ணாகத்தயிலம்விட்டுத்திரிபுனையேயென்று
நற்றுதிசெய்தேயதனில்தீபமேற்றிப்
பண்ணானமுன்னோட்டைமேலேமூடிப்
பதனமதாய்திரையிட்டுமூடிப்போட்டுக்
கண்ணானகரிமுகனைப்பூசைசெய்து
கலைப்பானஞானப்பூபூசைபண்ணே. (௨௱௨)

பண்ணஓம்-மனாயஓம்-மனாயஆதி
பனாயுமேகுமாயிமனாயாவென்று
பொண்ணவேவாயிரத்தெட்டுருசெபித்து
புனிதமாங்கருஞ்சாவல்பலிதானிட்டு
நண்ணவேதூபமொடுதீபங்காட்டி
நலியாமலிருந்தேநீதியானம்பண்ணு
உண்ணவேதயிலமதுவெல்லாமுண்டால்
வுத்தமனேவோட்டினில்மைபற்றும்பாரே. (௨௱௩)

பாரப்பாபரக்காக்கைசிறகுகொண்டு
பங்கமதாய்மையதைநீசிலம்வையாமல்
சேரப்பானமைவழித்துத்தந்தமான
சிமிள்தனிலடைத்ததனைவைத்துக்கொண்டு
ஆரப்பாகண்ணீரோர்சொட்டுவிட்டு
வழகானமைபதனில்மத்தித்துக்கொண்டு
கூரப்பாமுன்தியானங்கூறிப்பின்னர்
குறியானபுருவமையப்போடுவாயே. (௨௱௪)

போடுவாய்மைபோட்டுப்போனாயானால்
புகழானஜெந்துவெல்லாமுன்னைக்காணார்
ஆடுவாயிந்தவித்தையில்லாவிட்டா
லப்பனேசித்தர்களுள்ளடுக்கப்போகா
நாடுவாயம்மலைக்குத்தெற்கேகேளு
நல்லதொருகன்னிமலையென்றுபேரும்
சூடுவாயம்மலையிற்சென்றாயானால்
சுந்தரம்போற்கன்னிமலைதோற்றுந்தானே. (உாரு)

தானென்றகன்னிகளீரொண்ணாயிரம்பேர்
தப்பாமற்காத்திருப்பார்சுந்தரம்போல்
நானென்றவாலைதனைப்பூசைசெய்வார்
நலமானநதியொன்றுவீழுமங்கே
வேனென்றநதியதுதான்மலையைச்சுற்றி
வெகுவிதமாயேழுமுகங்காணுங்காணும்
வானென்றநதியதனைச்சுற்றிதீர்த்தம்
வல்லகன்னிதீர்த்தமடாவழிதான்கேளே. (உாசு)

கேளப்பாபச்சையொன்றுமஞ்சளொன்று
கெடியானரத்தவர்னக்கறுப்பினோடும்
வாளப்பாவெண்மையென்றும்நீலமென்றும்
வகையானதீர்த்தமென்றுஞ்சொல்லப்போகா
நீளப்பாகாதமைநூற்றெழுபதாகும்
நெடுந்தூரமதுவுண்டாமுடிகாணாது
ஆளப்பாசத்தியிடமூலந்தன்னி
லாராலுமறிந்திடவொண்ணாதுபாரே. (உாஎ)

## கெந்தகபருவதத்தின்பெருமை-கூறல்.

பாரப்பாவதற்கடுத்தமலைதானென்று
பரிவானகெந்தகமாம்பருவதந்தான்
ஊரப்பாதேசமொன்றுராஜனென்று
வுத்தமனேகெந்தகந்தான்விளைவுமுண்டு
நேரப்பாவம்மலைமேற்சதுர்கிரிதானென்று
நிலையானசோதிப்புல்விருக்ஷமொன்று

ஆரப்பாவட்டமதாம்பாறையொன்று
வாச்சரியமஞ்சளிறச்சுனையொன்றுமே. (உ௱அ)

ஆமென்றசுனையோரமூலியொன்று
வாச்சரியஞ்சங்கிலியுந்தொங்குந்தொங்கும்
வாமென்றமூலிகையைவாயிற்போட்டு
வல்லவந்தசங்கிலியைத்தொட்டாயானால்
வேமென்றசலமதனில்தள்ளிவிட்டு
வெகுசுருக்காய்குளக்கரையினுள்ளேசேர்க்கும்
நாமென்றபடியொன்றுவதனிலேறி
நலியாமலுட்புகுந்துபார்த்திடாயே. (உ௱௯)

பார்த்திடுவாயதனிலொருகுழிதான்தோன்றும்
பண்பானதயிலமுண்டுகொம்புத்தேன்போல்
நேத்தியொடுகல்வத்திற்றேய்த்தாயாகி
னிகரில்லாவயதுபதினாறதாக
வாய்த்திடுவாய்காசிடைதானுள்ளேகொண்டால்
வல்லதொருதேகமடாகெந்திபோலாம்
சேர்த்திடுவாய்மண்டலமேயுண்டாயானால்
செகத்திலேசுந்தரம்போற்றேகமாமே. (உ௱ய)

ஆமென்றமலைதனிலேயுள்ளசித்த
ராமார்த்திபென்னும் பேர்தானப்பா
காமென்றபெண்களுமேயதுபோலப்பா
கல்லதொருசித்தருக்குச்சிறகுமுண்டாம்
வேமென்றசித்தருக்குகந்தர்வாளென்று
விளங்கியதோர்நாமமதுமூலர்சொன்னார்
வாமென்றமலைக்கடுத்துப்பதிங்காதஞ்சென்றால்
வல்லமலையொன்றுகோபுரம்போலாமே. (உயக)

ஆமப்பாமலையதுதானுகாசத்தை
யண்டமுட்டித்தோணுமடாவுயர்வுமெத்த
பேரப்பாவம்மலையிற்சென்றாயானால்
புசழான மூலிகையும்விருக்ஷமொன்று

காமப்பாகவரிமானதிலேயுண்டு
கருவானசிங்கமொடுவாளியுண்டு
வாமப்பாப்ச்சைசிறக்குதிரையுண்டு
வல்லதுரகதமும்வெள்ளையானையுண்டே. (௨௧௨)

உண்டடாவம்மலையினுயரஞ்சென்று
னுயிர்போலப்பேசுமடாமூலியெல்லாம்
நன்றதடாபாரையொன்றுகுகைதானென்று
நலமானகுகைக்கெதிரேகுகைதானுண்டு
கண்டதடாவுள்ளேநீநுழைந்தாயானாற்
காதவழிவிஸ்தாரமுண்டுபாரு
தெண்டடனேகமண்டலமுமெதிரில்வைத்துத்
திறமானசித்தர்களுமனேகம்பேரே. (௨௧௩)

பேரானசித்தர்களுக்கெல்லாமப்பா
பெரிதானவால்மூலைத்தேயிருக்கும்பாரு
வாரானவான்மீகரதிலேநின்றார்
வல்லதொருவசிட்டருந்தானங்கேநின்றார்
கூரானவிவர்களதுமைந்தர்கூட்டம்
குறையாதெண்ணாயிரமாம்பேருமுண்டாம்
நீரானமூலியெல்லாமதிலேயுண்டாம்
நிலையில்லாதலையாதேவொன்றுகேளே. (௨௧௪)

கேளப்பாவவர்களைநீகாணவென்றாற்
கெடியானவநுமானைச்சித்திசெய்து
வாளப்பாகைவசமேயானாலல்
வல்லதொருகுகையிற்சித்தரையுங்காண்பாய்
காளப்பாவநுமானைதியானஞ்செய்ய
நல்லதொருமுக்கோணவிந்துவிட்டு
ஆளப்பாவஞ்சனைபுத்திரரேயென்று
ஹரிஓம்நமாவாவாவென்றிடாயே. (௨௧௫)

என்றதொருவநுமானும்வந்துசேர்வா
ரிதமானவவிற்கடலைநிவேதனமேசெய்து

அன்றதொருகாம்பிரமணிகையிலுண்டு
வாச்சரியமதைகேட்டுப்பணிந்துவாங்கி
வென்றதொருமணியதனைக்கொண்டாயானால்
வேலைசொன்னபடியெல்லாங்கேட்டுக்கொள்வார்
நன்றதொருமந்திரத்தாலநுமான்றன்னை
நாவினாலாயிரமாயுருத்தானேத்தே. (உகசு)

ஏத்துவாயர்தமணிகிடைக்கவென்று
லெளிதல்லவருத்தமடாமெத்தமெத்த
சாத்துவேன்தாமரைநூலிழைநூற்றெட்டு
சாதகமாய்பதினாறுயிழையாய்க்கூட்டி
மாத்துவேன்மணிபதினாறிருக்கக்கட்டி
மைந்தனேசேவித்தாலவரைக்காண்பாய்
தோற்றுவேனென்றுசொல்லிவந்தாரானால்
தோத்திரங்கள்பூசையினால்மணியைவாங்கே. (உகஎ)

வாங்கியதோரநுமானுஞ்சித்தியானால்
வல்லபங்கள்குகைமூலிகாட்டுங்காட்டும்
தாங்கியதோர்தலங்காட்டுந்தனங்கள்காட்டும்
தப்பாதேசித்தரையுங்கண்டுகொள்வாய்
ஓங்கியதோர்மலையொன்றுக்கடுக்கக்கேளு
வுயர்ந்ததலமட்டமடாமரும்புகேளு
நீங்கியதோர்பச்சைக்கல்லதிலேயுண்டு
நிலைபானசுனையதுவுமதிலேகாணே. (உகஅ)

காணவேகாயகற்பம்வெகுசாயுண்டு
காட்டானைக்கூட்டமதுவுறைஞ்சும்போது
தோணவேமாண்டுதான்போகும்போகும்
தொலையாதசழன்வாசங்கண்டுதானால்
நீணவேபால்வடியுமதனையுண்ணு
நிலையானபெருங்காயமதுகாணும்
பூணவேயந்தவொருவாடைகண்டாற்
புகழானமூக்காலோக்தமாமே. (உகசு)

ஆமென்றநாய்த்தோலுக்கைகயிற்கொண்டு
 வாச்சரியமுகந்தனிலேமறைத்துப்போனல்
வேமென்றவேதனைகள்செய்யாதப்பா
 வெகுசுருக்காய்க்குகையொன்றுவிருள்போற்காணும்
வாவென்றசோதிவிருக்ஷமடுத்துவுண்டு
 வல்லதொருகம்பதனைக்கையிற்கொண்டு
நாமென்றமந்திரத்தால்ஜெபித்துப்போட்டு
 நலமானபாற்சோற்றையுள்ளேகொள்ளே. (உ௨௰)

கொள்ளுவாபதனையொருமூன்றுகைதான்
 கொழுந்துவிட்டுயெரிந்ததொருஜீவன்போலாம்
விள்ளுவாயுள்ளேநீசென்றயானல்
 வேலொன்றுதோன்றுமடாவிடையிலப்பா
நள்ளுவாயதற்கருகேமச்சமுனிதானும்
 நலமானகமண்டலமுமெதிரேவைத்து
உள்ளுவாரவிருப்பார்சித்தர்கூட்டம்
 வொருநூறுபேருடனேயிருப்பார்பாரே. (உ௨க)

பாரப்பாகமண்டலத்துத்தண்ணீர்தானும்
 பார்தனிலேவீழ்ந்தாக்கால்மச்சமாகும்
ஊரப்பாபதினெட்டுசாதியுண்டு
 வொளிவானமாணிக்கமுத்துமுண்டு
நேரப்பாவந்தநதிநெடுந்தூரம்போம்
 நிலையானகடலதிலேசெல்லுஞ்செல்லும்
காரப்பாயெமகூடபருவதந்தான்
 காலாங்கியையருமங்கிருப்பார்தானே. (உ௨௨)

தானென்றகமண்டலத்துத்தண்ணீர்தானுந்
 தாரணியிற்கங்கைநதியென்றுசொல்வார்
வேனென்றகங்கைநதிவெழுநூறுகாதம்
 விஸ்தாரமடிதொடுத்துநுனிவளைக்கும்
நானென்றகெங்கைதனைக்காய்ச்சினக்கால்
 நல்லதொருலூண்போலரக்தங்காணும்
கானென்றநதியடியிலிங்கமொன்று
 கங்கையதன்மேற்சொரிந்துகீழேபோமே. (உ௨௩)

போமென்றவிலிங்கத்தினிடதுபக்கம்
  புகழானமலைமீதுநடந்தான்போகும்
ஆமென்றமலைமீதுசென்றுயானு
  லைந்தாறுமலைக்கடுக்கமலைதானென்று
வேமென்றவங்கொருவிஸ்தாரமுண்டு
  விதமானபொய்கையுமண்டபமுமுண்டு
நாமென்றகுகையொன்றுவதனுட்சென்றால்
  நாதாக்கள்கூட்டம்சகஸ்திரத்தான்பாரே. (உஉச)

பாரென்றவட்டைபோற்கண்ணிற்காணும்
  பரிட்சிக்கப்பதினெட்டுபாஷைசொல்வார்
ஊரென்றவம்மலைக்குவடக்ககேளு
  வுத்தமனேபெருங்காடுமலைதானென்று
சீரொன்றபதினெட்டுச்சித்தருண்டு
  செப்புகிறேனவடத்திற்கூட்டமெத்த
காரொன்றகன்னியருமவருமாகக்
  கமண்டலங்களெதிர்வைத்துத்தவஞ்செய்வாரே. (உஉரு)

வாரொன்றவம்மலையினோரெல்லாம்
  வால்காட்டுசித்தோவளர்ந்துநிற்கும்
பேரொன்றபவானிநதியங்குதோன்றும்
  பெருங்காட்டுமலைக்கடுக்கமலையைக்கேளு
கூரொன்றமலையதுதான்கெந்தியப்பா
  குடியாகவிருக்குமங்கேசித்தர்கூட்டம்
சாரொன்றசஞ்சீவிமூலியுண்டாஞ்
  சந்தனவிருட்சமதுமுண்டாங்காணே. (உஉசு)

காணப்பாகாசிபர்தானங்கேவாழ்வார்
  கன்னியரோடிருந்துகமண்டலத்தைவைத்து
தோணப்பாதுங்கபத்ரிநதிதானென்று
  துலங்கவேயதிலிருந்துவிழுமப்பா
பூணப்பாவவருடையபிள்ளைதானும
  புகழானவயிரமலையடுக்கவுண்டு
நாணப்பாவவ்விடத்திற்சித்தர்கூட்டம்
  நலமாகவாயிரம்பேருண்டுதானே. (உஉஎ)

உண்டானவயிரமலையதனிற்கேளு
வுறவானகௌதமர்தானிருப்பாரங்கே
வண்டானமைவிழியார்சித்தர்கூட்டம்
மகத்தானவாயிரம்பேரதிலேயுண்டு
பண்டானகமண்டலத்தின்சலந்தானப்பா
பார்தனிலேமகாபத்ரிநதிதானுண்டு
விண்டானவதற்கருகேசவரிமலையொன்று
வெகுபேர்கள்கன்னியர்கள்கூட்டந்தானே. (உஉஅ)

கூட்டந்தானயிரத்தெண்ணூறுபெண்கள்
குடியாகவதிலிருப்பார்வாசமாகி
ஆட்டந்தான்அஷ்டசித்தியஷ்டதுர்க்கை
யாச்சரியமாகவவரங்கேவாழ்வார்
நாட்டந்தான்ரோமரிஷிபதிலேவாழ்வார்
நலமானபிள்ளைகளுமொருநூறுகும்
சாட்டந்தான்கமண்டலத்தினீர்தானப்பா
தாரணியில்வெள்ளாாமதன்பேராமே. (உஉக)

ஆமப்பாகருமலைதானதற்குமேற்கே
வாச்சரியம்புலத்தியர்தானதிலேவாசம்
வாமப்பாகமண்டலமும்வைத்துக்கொண்டு
வல்லபஞ்சேர்பிள்ளைகளாதொண்ணூத்தாறுகும்
ஓமப்பாகன்னியரோடிருந்துவாழ்வார்
வுற்றதொருபாலமடாசஞ்சீவியொன்று
நாமப்பாநதியதுதான்பெண்ணையாகும்
நலமாகவதிலிருந்துவருகும்பாரோ. (உநய)

பாரப்பாவம்மலையினருகேயோதும்
பாலமலையொன்றதனிற்சித்தர்கூட்டம்
மாரப்பாமார்க்கண்டரதிலேயுண்டு
மகத்தானசித்தருண்டுமலைக்குமேற்கே
பாரப்பாகன்னடியதேசத்தின்மேற்
பாலகிலமானகுடவுக்குவடக்கக்கேளு
போரப்பாசையோகமலைதானென்று
பெரிதானமலையாறுங்கடந்துசெல்லே. (உநக)

செல்லடாகுன்றிமலைநீண்டிருக்கும்
ஜெயமானமலையிரண்டாய்க்கிழிக்கிற்றென்றும்
வல்லடாசத்திகிரிசிவகிரியென்றும்பேராம்
வளமானவம்மலையினுச்சியிற்றான்
அல்லடாகுகையிரண்டுவவற்றிலுண்டு
வாச்சரியம்வுன்முகமாங்குகையைக்கேளு
நில்லடாசத்திபதினாறுபேர்கள்
நிலையாகவதனுள்ளேயிருப்பார்பாரே- (உகஉ)

இருக்கின்றகுகைக்குள்ளேமஞ்சமொன்று
வீரொட்டுகாலுடனேயமைத்துநிற்கும்
காரொன்றவயிரக்காற்கடைச்சலாகக்
கண்டவர்க்குச்சோதியதாய்த்தோன்றும்பாரு
பாரொன்றகுகையெதிரிலொன்றுண்டப்பா
பட்டொன்றுவெள்ளையொன்றுகூடாரமாகும்
வாரொன்றகாவிகொடிகட்டிநிற்கும்
வல்லவொருசொர்ணகுடமதன்மேலாமே (உகங)

ஆமப்பாகமண்டலநீரொதிரோவைத்து
வாச்சரியச்சப்ரமஞ்சத்திருப்பேனப்பா
நாமப்பாகிரீடமுந்தரித்துக்கொண்டு
நற்பெண்களெண்ணிரண்டுபேரைக்கூடி
தாமப்பாவிருக்குமிடந்தவசுமாகுந்
தப்பாமல்தண்டுற்றகூடாரங்கேள்
சேமப்பாநவவீரர்காவல்நிற்பார்
செயமானவயிரவனுங்காவல்தானே. (உகச)

தானென்றகுகைக்கெதிரோர்குகைதானுண்டு
தப்பாமற்கு கைக்குள்ளேசென்றாயானல்
வேனென்றபுஷ்கரணியொன்றுண்டங்கே
விதமானசித்தர்களுங்கூட்டமுண்டு
ஆமென்றவிருமூவாயிரம்பேர்தானு
மதிலிருப்பார்வாசமதாய்க்கரையைச்சுற்றி
தேனென்றசித்தருக்குவொப்பாகத்தான்
திகழுகின்றதிருநாமமுண்டுபாரோ. (உகரு)

பாரப்பாவவர்களுடதேகமெல்லாம்
  பச்சைவர்ன்னமாயிருப்பார்கண்டுபாரு
பேரப்பாகுகைக்குள்ளேதயிலமுண்டு
  பிசகாதகருநிலத்துத்தயிலமாகும்
வீரப்பாதயிலமதையிரும்பிற்றேய்க்க
  விந்தைமிகுமதன்மாத்தாயிரத்தேழாகும்
காரப்பாதயிலம்காசிடைத்தான்கொண்டால்
  காயாம்பூவர்ன்னமடாகண்டுபாரே. (உஙசு)

கண்டுபார்மண்டலமேகொண்டாயானல்
  காயமாலுள்ளவரையிருத்தும்பாரு
உண்டுபாரதற்கருகேதயிலமுண்டு
  வுத்தமனேகெந்தகமாந்தயிலமாகும்
நன்றுபார்வாலரசமருகேயுண்டு
  நல்லதொருநீர்க்குன்றின்முத்துமுண்டு
கொண்டுபாரதனையுநீயஞ்சாமற்றன்
  குழந்தையதுபோலாவாய்கொண்டாற்றனே. (உஙஎ)

தானென்றமூலிகைதான்தொண்ணூறத்தாறு
  தடவுமுன்னேநவலோகம்பேதளிக்கும்
வேனென்றகாமப்பாற்கானற்பாலின்
  விதஞ்சோதிவிருட்சமொடுஞ்சோமவிருட்சமுண்டாம்
ஓமென்றவிதனுடனேயாங்கேகேளு
  வுத்தமனேசோதிப்பால்கருநெல்லியுண்டாம்
நானென்றகுகைக்கருகேகூடாரத்தில்
  நாகமடாவாயிரத்தெண்சிரமுண்டாமே. (உஙஅ)

## தன்னுக்குட்டலங்கள்-கூறல்.

உண்டானவைந்துதலைநாகமுண்டு
  வூறுகின்றநாகமதுவனேகமுண்டு
கண்டானகாசினியிலலையவேண்டாங்
  கருவானகுமாகோவிலடியிலுண்டு
விண்டானசூரனதுகோட்டையுண்டு
  விதமானகுமரேசர்கோயிற்றன்னில்

தொண்டானசித்தர்களைக்காணவென்றால்
தோத்தரித்துநீயுமங்கேயிருந்துபாரே. (உ௩௯)

பாரப்பாதுவாரமதுயேழுக்குள்ளே
பார்த்துகுருபாதெரிசனமேசெய்வார்
நேரப்பாகேட்டதெல்லாமுனக்கேயீவார்
நின்றபடியெந்தனையுங்கேட்டாயானால்
வாரப்பாவாவென் றுவழைத்துப்போவார்
வாழ்ந்திருக்குமிடமதனைக்காட்டிவைப்பார்
சேரப்பாசஞ்சலங்கள்பட்டாயானால்
சயனத்திற்சொல்லியவர்போவார்காணே. (உ௪0)

காணப்பாவென்மலைதான்சொர்ன்னமாகும்
கடலோரந்தனிற்சொர்ன்னப்பொடியெடுப்பார்
பூணப்பாமனிதர்பிடுங்கிடுவாரொன்று
புகழானகற்போலக்கண்ணிற்றோணும்
வேணப்பாமலைதானும்வேறேயில்லை
வெளிவீசியிருந்தமலைபொடித்துதிர்ந்ததையோ
தோணப்பாமனிதர்கள்தான்பிழைக்கவென்று
துள்ளிதுள்ளிக்கரையவென்றுவிட்டிட்டேனே. (உ௪௧)

விட்டிட்டேன்லோகமதிலொருபேச்சாக
விளங்குவதையழிக்கவுந்தானாகாதென்று
தொட்டிட்டபிரம்மாவும்நந்தியென்று
துலங்கியதோர்விஷ்ணுவும்லட்சுமியாளென்றும்
சட்டிட்டருத்திரசங்காரியென்றுஞ்
சாற்றுவேன்யோகமதிலுற்றுப்பாரு
நட்டிட்டநவலோகமங்கேயுண்டு
நடமாடுஞ்சாக்குவறுபத்துநாலே. (உ௪௨)

நாலானசரக்குகளம்மலையினுண்டு
நதியொன்றுபொன்னிநதியோரமெல்லாம்
மேலானசித்தர்களும்தவமேசெய்வார்
மிகுந்ததொருவெண்சாரைநடமாட்டமுண்டாம்

காலானவாற்ரோமேற்கேசென்றால்
கைத்தாழைரக்தவர்ணமாகிநிற்கும்
மாலானவெள்ளையாலதிலேயுண்டாம்
மாச்சரியம்வெண்ணாவதிகந்தானே. (௨௪௩)

அதிகமென்றவாற்ரோமேற்கேசென்று
லாச்சரியமனேகமதாய்க்காணலாகும்
மதியமென்றபொழுதுக்குவாத்தியங்கேள்
மலையாதேயம்மலைமேலேறிச்செல்லு
நிதியமென்றதிரவியங்கள்கண்ணிற்றோன்றும்
நினைவிலதையுன்னமல்வந்துசேரு
கதியுமடாபெருவாய்நீயென்னைக்காண்பாய்
கிடையாதசித்தியெல்லாங்கிடைக்கும்பாரே. (௨௪௪)

பாரப்பாவந்நதிநீரொடுத்துக்காச்சப்
பழுதில்லாப்பொருளதுதான்கண்டுகொள்வாய்
வேரப்பாகன்னடியதேசந்தன்னில்
விதமானமலையொன்றுசித்தனென்று
கூறப்பாகோரக்கரதிலேயுண்டு
குறையாமலைந்நூறுசித்தருண்டு
சேரப்பாசிலைநாட்டில்மலைதானென்று
சிறப்பாமூசிக்காந்தமதிலேயுண்டே. (௨௪௫)

உண்டடாசித்தராதகூட்டமெத்த
வுறுதியாய்க்கருங்காட்டிற்சென்றாற்காணும்
பண்டடாபாலமலையதற்கருகேயுண்டு
பலபேர்கள்கூட்டமடாவதிலேயுண்டு
வண்டடாசேலத்துமலையுமுண்டு
விதமாகச்சாத்தாவின்கோயிலுண்டு
கண்டடாவதற்கருகேகைதானென்று
கடுவெளிசித்தாங்கேயிருப்பார்தானே. (௨௪௬)

தானென்றகொல்லிமலைதன்னிலப்பா
சாத்தாவின்கோவிலுண்டுசாற்றக்கேளு
மேனென்றகோயிலுக்குமேற்கதாக
மிச்சமடாசுனையதுதானென்றுண்டாங்கே
மானென்றவங்குமொருகுகையுமுண்டு
மாச்சரியவாயிரம்பேரதிலேயுண்டு
வேனென்றகமலமுனிசித்தருண்டு
மிகுக்தபலமூலிகளுமுண்டுபாரே. (௨௪௭)

பாரப்பாவம்மலைக்குமேற்கதாகப்
பகருகின்றகருமலைதானென்றுண்டப்பா
நேரப்பாவம்மலைமெல்மலைதானென்று
நெடியமலைக்குடும்பிலாமலைதானென்று
சீரப்பாகருக்களுடன்மூலியுண்டு
செயமானகுகையொன்றுஞ்சுனைதானென்று
வாரப்பாகல்லதன்மேற்போட்டிருக்கும்
வல்லபிள்ளைகருவாளனிருப்பான்காணே. (௨௪௮)

காணப்பாகன்னியர்கள்சித்தர்கூட்டங்
கடாக்ஷமுள்ளவைந்நூறுபேர்களுண்டு
தோணப்பாகமண்டலமுமுள்ளேவைத்து
துலங்கிடவேயதிலிருப்பாரொங்காளுந்தான்
பூணப்பாசஞ்சீவியெல்லாமுண்டு
புகழானகருநீலத்தயிலமுண்டு
ஆணப்பாவதிலிருந்துந்தீதானென்று
வாம்பிராகதியென்றுமதன்போமே. (௨௪௯)

ஆமென்றதிரிமூர்த்திமலைதானென்று
வாச்சரியமதன்மேலேசென்றுயானல்
நாமென்றகோயிலொன்றுந்தீதானென்று
நதிக்கருகேமலையொன்றுகுகைதானென்று
வாமென்றதிருமூலரிருந்ததானம்
வல்லவொருகாலாங்கியிருந்தாரங்கே
ஓமென்றுநானிருந்தேன்கற்பங்கொண்டு
வுகவிசெயுட்புத்திரனென்றாக்கினேனே. (௨௫௰)

ஆக்கினேனெடுமாலின்சமாதியொன்று
வாச்சரியம்நதியாறுமுகந்தானுண்டு
நோக்கினேன்கற்கதனக்குகையுமுண்டு
நுணுக்கமுள்ளகன்னியருமதிலேயுண்டு
தாக்கினேன்சித்தர்களாயிரம்பேருண்டு
தப்பாமலதன்கிழக்கேதானும்பாரு
தூக்கினேனென்றதொருகவனமூலி
துலங்குகுகைவாசலிலேயுண்டுகாணே. (உருக)

காணவேநீலமுடன்பால்புட்பராகமுண்டு
கடிகைக்குக்கிழக்காகமலைதானுண்டு
தோணவேகுகையொன்றுநூறுபேர்கள்
துலங்கவதிலேயிருப்பார்சித்தர்சித்தர்
பூணவேயதற்கருகேமலைதானொன்று
புகலுமிடமெங்களுக்குவுரியதாகும்
நீணவேசுனைமூன்றுவதிலேயுண்டு
நெற்கதிருமிருக்குமொருசுனையிற்றானே. (உருஉ)

தானென்றவதற்கருகேதெளிந்தசுனையொன்று
தப்பாமலருகினிற்கற்குழிநீருண்டு
வேனென்றகுகைக்குள்ளேகுழிதானொன்று
விதமானபெண்களதிற்பதினாறுண்டு
நானென்றும்விளையாடுமஞ்சமொன்று
நலமானசித்தர்பத்துபேருமுண்டாம்
கோனென்றவயிரவனார்காவலுண்டு
குண்டுமணிபச்சைவர்ணமுண்டுபாரே. (உருங)

பாரப்பாவதற்கருகேபழசியலையொன்று
பலகூத்துமாடிசிற்பேன்தொந்தங்கோடி
நேரப்பாகோயிலுக்குகிழக்கதாக
நிலையானபாறையொன்றுவட்டம்போலாம்
சாரப்பாகுகையொன்றுவுள்ளேபோகுஞ்
சலியாமலதிலிருப்போம்பெண்களோடும்
வீரப்பாபொய்கையொன்றுமஞ்சமொன்று
வேதையுள்ளமூலிகையுமதிலுண்டாமே. (உருச)

உண்டடாமேற்புரமேவழிதானென்று
வுலாவுமென்றகோயிலுக்குவழிதானென்று
வண்டடாதும்பியுண்டவழியேசென்றால்
வழியானவடபுரமேகுகைதானென்று
தொண்டடாசுனையொன்றுவுள்ளேநிற்குந்
துலங்கியதோர்வாசல்வழிசெல்லுசெல்லு
உண்டடாயிடும்பமலையொன்றுவந்த
வுச்சியிலேகுகையொன்றுவுண்டுபாரே. (உருரு)

பாரப்பாவம்மலையிற்பலபேர்கூட்டம்
பரிவாகவதிலிருப்பாரறிந்துபாரு
நேரப்பாகோடாங்கிமலையிற்கூட்டம்
நிலையாகவறுபதுபேரிருப்பார்சித்தர்
வீரப்பாவதன்கீழேரங்கமலையொன்று
விருதுபெற்றசித்தர்களுமொருநூறுண்டு
சேரப்பாசிறுமலைதானவற்றின்மீது
ஜெயமானவெள்ளைமலையொன்றுதானே. (உருசு)

தானென்றவம்மலைமேலைந்துபேர்கள்
தாபரமாயிருப்பார்களெந்நாளுந்தான்
கானென்றகள்ளர்பதிநாட்டிற்கேளு
கருவானசித்தர்மலையொன்றேயுண்டு
நானென்றமலைமேலேபாறையொன்று
நலமானசுனையொன்றுகோயிலொன்று
வேனென்றகுகையொன்றுவெளியிற்றோன்றும்
விஸ்தாரமிருகாதமிருக்குங்காணே. (உருஎ)

காணப்பாகுகையினுள்ளைந்நூறுபேர்கள்
கன்னியரைக்கலந்திருப்பார்தவமேசெய்து
தோணப்பாவதன்மேற்கேசுருளிமலைதானென்று
சுகமானவம்மலையிற்குகைதானென்று
நீணப்பாசுந்தரானந்தருண்டு
நிலையானமண்டபமுமமைத்துக்கொண்டு
பூணப்பாசித்தர்களுமதிலேயுண்டு
பிள்ளைகளாயிரம்பேர்கள்கூட்டமாமே. (உருஅ)

ஆமென்றகுகையெதிரிற்கரிநெல்லியுண்டு
வனையடுத்தாற்போற்சுனையுஞ்சோதிவிருட்சமுண்டு
வேமென்றசுனையோரம்வேதமூலி
விதமாய்ப்பாத்திகட்டிப்பயிராயிற்கும்
நாமென்றசுனைக்குட்கற்றாமரையுமுண்டு
நலவானவெண்சாரைத்தண்ணீருண்ணும்
வாமென்றவஸ்துவுடவாசம்வீசும்
வல்லதொருவண்டுகளுமுண்டுகாணே. (உருகூ)

காணப்பாவவர்கமண்டலத்துநீர்தான்
கருவானவைகைநதியென்றேபோம்
தோணப்பாவவர்மலைக்குவடுத்தேகேளு
தோணுமென்றதீர்த்தமலையொன்றுண்டப்பா
மேணப்பாசித்தர்களுங்கற்பங்கொள்ளப்
பிசகாதேயதிலிருப்பாரோணிகொண்டு
ஊணப்பாகுதிரைமலையருகேவுண்டு
வோங்குமதிலொருநூறுபேருண்டாமே. (உகூய)

உண்டானமலைமேலேபாறையொன்று
வுத்தமனேதென்சார்பிற்குகைதானென்று
துண்டானகுகையதிலேசுனைதானென்று
துடிக்கவனமூலியதன்கரையிலுண்டு
வெண்டானசித்தர்கவனத்துக்கப்பா
வெகுசுருக்காய்யெத்தவிசாரணையேசெய்வார்
அண்டானச்சதுரகிரிதன்னிலப்பா
வாச்சரியமெத்தவடாவறைகின்றேனே. (உகூக)

### சதுரகிரியின்பெருமைகூறல்.

அறைகின்றேனென்றதொருதோணிப்பாறை
யதன்வழியேயாற்றினுள்ளேசென்றாயானால்
நிறைக்கிறேன்கோரக்கர்குண்டாவுண்டு
நிச்சயமாயதனருகேகைதானென்று
மறைக்கிறேனென்றதொரும்றைப்புப்போட்டு
மைந்தருடன்கோரக்கரூதிலேவாழ்வார்

உரைக்கிறேனென்றுசொல்லியுயரச்சென்று
 லுத்தமனேபெருந்தூரட்டியிலேக்காடாமே. (உ௬உ)

ஆமென்றகாட்டகத்தின்நடுவேசென்று
 லங்கையுமேசாதிக்காய்தோப்புண்டப்பா
சேமென்றசெம்பாறைநடுவேயுண்டாஞ்
 சேரவேசுனையுண்டுபச்சைவர்ணம்
நாமென்றகுகையொன்றுதெற்கேபார்த்து
 நாதர்க்களொடுசட்டமுநியுமுண்டு
ஓமென்றகோயிலுக்குவடக்குமாகும்
 வுற்றதொருதோப்பிலிளந்தோப்புக்காணே. (உ௬௩)

காணப்பாகுளூராட்டித்தோப்பினுள்ளே
 கருநீலசுனையொன்றுநெல்லியுண்டு
பூணப்பாகுகையுண்டுபெண்களுண்டு
 புகழாகநாமுமங்கேயிருப்போம்பாரு
தோணப்பாசஞ்சீவிமூலியெல்லாந்
 துலையாமலதிலிருக்குந்தோணுதப்பா
நீணப்பாலிங்கத்துமேற்கேகேளு
 நிலையானகுகையுண்டுகிழக்கிற்றானே. (உ௬௪)

தானென்றசுனையதிலேகுகைதானென்று
 தாசித்தகஞ்சாவுமிகுதியுண்டு
தேனென்றசுந்தரானந்தருண்டு
 திறமானமைந்தர்களுமவற்கேயுண்டு
கானென்றபலாவடியிற்கருப்பனுண்டு
 கண்ணெதிரேயொருபோதுசென்றாயானால்
மானென்றபாறையொன்றுகுருக்கேயுண்டு
 மகத்தானபாதையிலேசுனைமூன்றாமே. (உ௬௫)

ஆமடாகுகையொன்றுவுள்ளேபோகு
 மாயிரம்பேர்சித்தரப்பாவதிலிருப்பார்
வாமடாகாலாங்கியையர்நின்று
 வல்லவொருகற்பமெல்லாமங்கேதின்றார்
ஓமடாவெந்தனுக்குக்கற்பமீந்தார்
 வுயர்ந்ததொருதயிலமெல்லாமங்கேயீந்தார்

நாமடாவதிலிருந்துச்சித்திபெற்று
நல்லதொருதயிலமெல்லாமூடினேனே (௨௬௬)

மூடினேன்கருப்பணையுங்காவல்வைத்து
முதலானபொருள்வேண்டுமென்றோர்க்கெல்லாம்
தேடினேனென்றுசொல்லித்தெளிந்துவந்தால்
திறம்பார்த்துயிருக்குமிடஞ்செப்புமென்றேன்
ஆடினேனட்டமாசித்ததெல்லா
மவாவருமங்கிருந்துச்சித்திபெற்றார்
கூடினேனாயிரம்பேர்தங்களோடே
குடியிருந்ததாற்சதுரகிரியுமாச்சே. (௨௬௭)

ஆச்சுதடாசஞ்சீவிமலையுமாகு
மதில்வீசுங்காற்றுவிருகாதமட்டும்
வாச்சுதடாவிதன்தெற்கேசார்வொன்றுண்டு
வல்லசித்தாதிலிருப்பாரைந்துபேர்தான்
சூச்சுதடாசிவகிரிக்குவடமேற்காகச்
சாடானமலையொன்றுவுயர்வோமெத்த
நீச்சுதடாகாடொன்றுநிலையாக்காடு
நிசமானதெப்பமொன்றுகுகையுமொன்றே. (௨௬௮)

ஒன்றானகுகைக்குள்ளேசித்தர்நூறு
வுறவாகவதிலிருப்பாருகந்துபாரு
கன்றானசவரிமலைதன்னிற்கேளு
கறப்பானசித்தர்களாயிரம்பேருண்டு
நன்றானபாறையொன்றுமூலியுண்டு
நலமானகுகையொன்றுகீழேபோகும்
அன்றானசுனையுமுண்டுநதியுமுண்டு
வதன்கிழக்கேமலையொன்றுவறிந்துப்பாரே (௨௬௯)

பாரப்பாவம்மலைமேற்பதினைந்துபேர்கள்
பரிவானவிலக்குமியைப்பூசித்தோர்கள்
வேரப்பாவவர்களுக்கோசித்துமெத்த
விரைவாகவதிலிருந்துதெற்கேகேளு
ஆரப்பாகிரிகூடமலைதானென்று
வாச்சரியத்திருமூலரதிலேவாசம்

பேரப்பாபிள்ளைகளுமனேகமுண்டு
பிசகாதேயதின்தெற்காற்றோங்கேளே. (உஎ0)

கேளப்பாவுயர்ந்ததொருமலைதானுண்டு
கெடியானகும்பமதுபோலேகாணும்
வாளப்பாவம்மலைக்குவிப்பாற்கேளு
வல்லவதின்வடபுரமாய்க்கடிகைசென்றால்
நீளப்பாபாறையொன்றுபூங்காவொன்று
நிசமாகவதனருகேதெப்பமுண்டு
கோளப்பாசொல்லவில்லைமங்கைதானுங்
குளித்தமஞ்சள்வாசமதுவீசுந்தானே (உஎக)

தானென்றகுனேயொன்றில்மஞ்சணீராத்
தானுரைந்துநிற்குமடாபாருபாரு
மானென்றகங்கைதனைக்கண்டாயானால்
மறுத்தொன்றுநினையாமற்பாதம்வீழ்வாய்
ஏனென்றுமென்னவிதமென்றுங்கேட்பார்
யெளியனுக்குவகஸ்தியனருண்வேண்டுமென்பாய்
கோனென்றசித்தர்குகைகாட்டுவிப்பார்
குடியாகவாயிரம்பேர்தோணும்பாரே. (உஎஉ)

பாரப்பாவவர்களைநீகண்டாயானாற்
பரிவுடனேபாதமதைப்பணிந்துநிற்பாய்
ஆரப்பாவென்றுசொல்லியுன்னைக்கேட்பா
ரகஸ்தியனைக்காணவந்தேனென்றுகூறு
சாரப்பாவவர்நூலின்சார்பையென்பார்
சார்ந்திருந்தேனென்னூலையென்றுசொல்லு
காரப்பாகனகமென்றபொருளைக்காட்டிக்
காசினியிற்போயினொன்றுசெப்புவாரே. (உஎங)

செப்புவாரதைவேண்டேனெனமறுத்துச்
செயமானவகஸ்தியனைக்காணக்கேளு
ஒப்பியேகற்பமெல்லாமுனக்குவீந்து
வுன்னுடையதேகமதைச்சித்திசெய்து
அப்புவார்மவுனமதைதீட்சைசெய்து
வகஸ்தியர்கண்முன்பாகச்சேர்ப்பாரப்பா

கப்புவார்சந்தோஷமாகப்பேசி
  கலமான சித்திகளுமருளுவாரே. (உஎச)

அருளுவார்கவனமுதற்கற்பமியாவு
  மாச்சரியமஷ்டசித்துமுடனேயிவரர்
பொருளதுவாய்முடிந்ததெல்லாங்கேட்டுக்கொள்ளு
  போட்டிருக்குமிடங்கேட்டுவந்துசேரு
தெருளுவார்சித்தரெல்லாங்கூடிவந்து
  தேவியு பூசைசெய்துமவுனங்கேட்பார்
சருளுவாருன்னையவர்சருவிவந்தாற்
  சாஷ்டாங்கம்பண்ணியேவந்துசேரே. (உஎரு)

சேருமென்றமூசியதுவதிகமுண்டு
  ஜெயமானகாத்தடிக்கச்சென்மைம்போகுங்
காருமென்றகமண்டலத்தின்ஜலமும்போகுங்
  கனாயோரம்நின்றதொருமூலிமெத்த
பேருமென்றதாம்பிரவர்ணிக்கரையோரமெல்லாம்
  பெரியோர்கள்கூட்டமடாபேசொணாது
ஏருமென்றதாம்பிரவர்ணியெழுகாதஞ்செல்லும்
  மென்சொல்வேனெக்கியங்களதிகம்பாரே. (உஎசு)

பாரென்றதண்ணீரிற்றும்பிரமுண்டாம்
  பரிவானவயச்செம்புபோலேகாணும்
வேரென்றபொதிகையாமத்தியமாகும்
  விளேர்கதொருசெம்பதுதானுலாவிநிற்கும்
வாரென்றவடக்குதிரிகூடமட்டும்
  வல்லதொருமேற்குமிருகாதமாகும்
தேரென்றதென்முகந்தான்கடிகைபத்து
  திறமானகிழக்கேழுகாதமுண்டே. (உஎஎ)

உண்டானபொதிகைக்குவடக்கேயப்பா
  உயர்ந்ததொருமூலவர்க்கச்சித்தர்கூட்டம்

நன்றடாநாகமலைப்பொதிகைமட்டும்
நாலுசகஸ்திரம்பேர்கள்வடவாற்கூட்டம்
அன்றடாவஞ்சுதலைப்பொதிகைதன்னி
லாயிரம்பேரவர்பிள்ளையதிலேயுண்டு
விண்டடாவீசானம்வெண்சதுரகிரியில்
விளங்குசித்தரொருநூறுபேராம்பாரே. (உஎஅ)

பாரப்பாவிந்திரனூர்நிக்குதன்னில்
பகாரியபச்சையாறொன்றுண்டப்பா
நேரப்பாவுண்ணுக்குச்சித்தருண்டு
நிறைவாகத்தயிலத்தாற்கிணறொன்றுண்டு
சீரப்பாசாத்தாவின்கோயிலுக்குமேற்கே
சிறந்ததொருமலைமேலேமலைதானென்று
கூரப்பாசுனைமூன்றுவெதிரேயுண்டு
குகையொன்றுதென்முகமாயிருக்குங்காணே. (உஎகூ)

காணப்பாவெண்ணுவலைந்தாருண்டு
கருவானசுனையருகேமூலியுண்டு
சோணப்பாசுனைதனின்மண்டலமேமூழ்க
தோன்றுமடாவப்பவல்லோமூலிதானும்
வீணப்பாசொல்லவில்லைமூலிதன்னில்
விதமானமூலிதன்னைச்சுனைநீராட்டி
பேணப்பாபழக்காயினளவுகொண்டாற்
பேச்சுமில்லைமூச்சுமில்லையடங்குந்தானே. (உஅ0)

தானென்றதேகமெல்லாம்விரிந்துபோகுந்
தப்பாமலூனெல்லாம்வடிந்துபோகும்
வானென்றபயருடனேசிருபயருங்காச்சி
வல்லதொருபஞ்சியினால்வாயிலூட்ட
நானென்றதேகமதுபச்சையாகும்
நல்லதொருவடுத்தசுனைஸ்நானம்பண்ணு
காமென்றகமண்டலநீர்நதிதானப்பா
காயசித்திவிதனாலேநண்டுக்கொள்ளே. (உஅக)

கண்டுபார்ரக்தக்கற்ருழையுண்டு
கருநீலக்கொடிவேலியதனருகேயுண்டு
உண்டுபார்குகையதிலேதெற்கேசென்ருல்
வுயர்ந்ததொருநம்பிமலையுண்டுபாரு
சென்றுபார்மலைமேலேநம்பிகோவில்
ஜெயமாஞ்கோவிலுக்குமேற்கேசென்ருல்
அன்றுபார்காதமதற்கப்பாலாக
வாச்சரியம்பாணையொன்றுவட்டமாமே. (உஅஉ)

ஆமென்றபாணியிலேகுழிதானுண்டு
வதுதனிலேகெந்தகத்தின்தயிலமுண்டு
வேனென்றதயிலமதைச்செம்பிற்றேய்க்க
விளைந்ததடாதங்கமதுவயசுபத்தாய்
வாமென்றதயிலத்துக்குவடுகன்காவல்
வல்லதொருவிருக்ஷமதுவதிலேயுண்டு
தாமென்றகுகையுண்டுசித்தருண்டு
தப்பாமலொருநூற்றுப்பத்துபேரே. (உஅங)

பேராகவதிலிருவர்பெரியோரப்பா
பிசகாதேநாற்பதுதான்முழமேயாகும்
ஆரானவகஸ்தியற்குமுன்னேயுண்டு
வாயிரத்தெண்காதமொருமூச்சிற்செல்ல
வீரானகுளிகையொன்றுவிருக்குமப்பா
விதமானகமண்டலமுங்கண்ணியோடு
வாரானவிபீஷணன்தான்வைத்ததாகும்
வகையாகநிதானித்தால்தோணும்பாரே. (உஅச)

தோணப்பாதங்கக்கொடிதானுமுண்டு
தூலங்கவேயதன்கீழ்மாவலியும்நூரும்
காணப்பாவின்னமோராச்சரியமுண்டு
களங்கமற்றமைந்தாவோதரியவாங்கு
ஆணப்பாமண்டுகேவேந்த்ரமொன்று
வதிலிருப்பான்கொங்கணவன்பிள்ளைகேளு
நீணப்பாவறுநூற்றியைம்பத்தேழ்பேர்
நிலையாகவதிலிருப்பார்நயந்துகேளே. (உஅரு)

கேளப்பாமயேந்திரத்திளைப்பாலாகக்
  கெடியானதியொன்றுமூலிகையுமொன்று
வாளப்பாவங்கிருந்துமேலேசென்றால்
  வழியானசோதிப்புல்சோதிவிருக்ஷம்
ஆளப்பாவதன்வழியேசென்றயாளு
  லாச்சரியமங்குமொருகுகைதானென்று
நீளப்பாகிழக்குமுகமாகக்காணும்
  நிலையானகருநெல்லிநிற்குந்தானே, (உ அசு)

தானென்றகுகையிற்கொங்கணவர்தாமுந்
  தப்பாமலிருப்பர்கமண்டலமுங்கொண்டு
வேனென்றதிருவண்ணாமலைதானென்று
  விளங்கியதோர்குகையொன்றுமேற்கேபாரு
வானென்றசங்கிலிச்சித்தரெல்லாம்
  வாழ்ந்திருக்குங்குகையதுதான்பிளந்துபாரு
ஊனென்றபேர்களுந்தானேறப்போகா
  வூனமிலாக்கவனிகளுமேறலாமே. (உ அஎ)

ஆமென்றவிக்குகையினடுவேயப்பா
  வாச்சரியச்சுனையொன்றுவதிகப்பாரு
வேமென்றசுனையருகேவெண்சாரையுண்டு
  வெகுசுருக்குத்தாடகைமாமலையக்கேளு
நாமென்றசுனையொன்றுகற்றொட்டியொன்று
  நல்லசுனைக்கரையோரமாள்போனிற்கும்
வாமென்றதொட்டியிலேசைத்ரந்தன்னில்
  மகத்தானவக்கினிநக்ஷத்திரத்திற்பாரே. (உ அஅ)

பாரப்பாதயிலமதுசிவந்துகாணும்
  பதனமாய்ச்சீசாவிலடைத்துக்கொண்டு
காரப்பாகாசிடைதானுள்ளேகொண்டால்
  கதிரவனருள்ளவனாயிருக்கும்பாரு
சாரப்பாதேகமதுசட்டைதள்ளுஞ்
  சஞ்சாரவெண்சாரையங்கேகாணும்
வீரப்பாவதற்கடுக்கக்குகைதானென்று
  விதமானசித்தர்கள்தானாறுபேரோ. (உ அசு)

பேரானமருத்துமாமலைதனிலேயொன்று
பெரிதானகனேயொன்றுபாணையொன்று
வாரானவடமுகமாய்க்குகைதானென்று
வல்லசித்தான்பதுபோதிலேயுண்டு
வீரானதயிலும்பாஷாணமுண்டு
விதநூள்ளமூலியெல்லாமதிலேயுண்டு
கூரானபொன்மலைதான்மேற்கேயுண்டு
கூடியிருப்பாராயிரம்பேர்சித்தர்தானே. (உகூ௰)

தானென்றகற்குழிதான்கிணறுபோலத்
தப்பாமலதிலிருப்பார்கெவுளிபோல
வானென்றபிள்ளையார்மலைதானென்று
வடிந்திருக்குங்கல்மதங்கள்வெள்ளிபோலாம்
கானென்றவவர்மலையில்மலைநானென்று
கற்கநவந்திறந்திருக்குங்கண்டுபாரு
நானென்றராமதேவர்க்கேயுண்டு
நலமானகமண்டலமுமதிதானென்றே (உகூக)

ஒன்றானவைந்துபத்தாச்சித்தருண்டு
வுத்தமனேயுகசஞ்சீவிக்கிணறுமுண்டு
வென்றானவதன்வடக்கேகருமலைதானென்று
விளங்கியதோர்சித்தர்களுஞ்சந்தானுண்டு
அன்றானபொதிகைக்குவாய்விலப்பா
வாச்சரியம்மலைசெம்மலைதானுமே
நன்றானபேர்களுந்தானாயிரம்பேர்
நம்முடையகருவூரார்பிள்ளைதானே. (உகூஉ)

தானென்றகூடன்மலையொன்றிலப்பா
தப்பாமற்சித்தர்பத்துபேர்தானுண்டு
வேனென்றவிபூமேஸ்வரமருகிற்றானும்
விதமானகந்மாதனமுமுண்டு
வானென்றவசிட்டருடபிள்ளையப்பா
வல்லவர்களன்பத்தியொருபோரும்
ஊனென்றவுருப்புவதிலேயுண்டு
வுத்தமனேசாதமாமலையிற்கேளே. (உகூ௩)

கேளப்பாநாரதமாமலையிற்றானுங்
கெடியானசுனையொன்றுவதற்குளப்பா
வாளப்பாகுகைவாசலுள்ளேசென்றால்
வல்லதொருவெண்கலத்தாற்கதவுமுண்டு
நாளப்பாநாரதருமதிலேவாழ்வார்
நற்புதல்வராறுபத்துநால்வரோடும்
நீளப்பாவெள்ளையூர்தனிலேகேளு
நிசமானவுப்புவாடைக்காரமாமே (உ௬௪)

காரமென்றதென்மேற்கேபிரான்மலைதானென்று
கனமானசித்தாதிற்பதினாறுண்டு
வீரமென்றவம்மலைக்குமேற்கேகேளு
விதமானகருமலைதானென்றுண்டப்பா
சீரமென்றமலைமீதிற்சென்றயானாற்
சஞ்சீவிமெத்தவுண்டுசொல்லப்போகா
பாரமென்றகுகையொன்றுவதற்குளப்பா
பாம்பாட்டிசித்தருமுண்டதனிற்பாரே. (உ௬௫)

பார்க்குமென்றபிள்ளைகளோவைந்தாப்பத்து
பரிவானகன்னியொடுகமண்டலமும்வைத்து
ஏர்க்குமென்றபாம்பாட்டிச்சித்தருந்தான்
யெந்நாளுமதிலிருப்பாரின்னங்கேளு
கார்க்குமென்றகமண்டலநீர்பாலாறாகுங்
கன்னியிலேகுமாரகுந்திமலைதானென்று
தீர்க்கமென்றதிராவியங்கள்கோட்டையுண்டு
திறமானசித்தர்களும்பதினேழாமே. (உ௬௬)

ஆமென்றவதன்மேற்கேமலைதானென்று
வாச்சரியமெத்தவடாலறையக்கேளு
நாமென்றமலையினுச்சியடுக்கக்கேளு
நல்லதொருவேலதுதானிற்குநிற்கும்
ஓமென்றபாறையொன்றுசுனையுமொன்று
வுத்தமனேவிக்ரகங்களனேகமுண்டு
வேமென்றகுகையொன்றுகண்ணிற்காணும்
விளங்குகின்றகுகைக்குள்ளேசென்றுகாணே. (உ௬எ)

காணப்பாவழகண்ணிச்சித்தருண்டு
கமண்டலநீர்தொட்டியிலேவந்துபாயும்
தோணப்பாயின்னிகளொன்பதுபேருண்டு
துலங்கிடவேகன்னியொன்றுவவர்பாலுண்டு
பூணப்பாவதனடியிற்றெப்பமுண்டு
புகழானதிரவியங்களனேகமுண்டு
மாணப்பாவழகர்மலையென்றுபேரு
மாச்சரியம்நீலகிரிக்கதிகம்பாரே. (௨௬௮)

## அழகர்மலைவளங்கூறல்.

பாரென்றேனம்மலையினுயரச்சென்றால்
பதிவானகறுப்பனுடகோவிலொன்று
நீரென்றேன்கோவிலுக்குத்தெற்கேசென்றால்
நெடியதொருபாரையொன்றுஞ்சுனையொன்றுண்டு
பேரென்றேன்வனம்வொன்றுபெருத்துக்காணும்
பெரிதானகுகையொன்றுகதவுந்தோணும்
சேரென்றேன்குகையுள்ளேசென்றுயானாற்
செயமானவகப்பைசித்தரிருப்பார்தானே. (௨௬௯)

தானென்றசப்தரிஷிசப்தகன்னி
தற்பரமாந்திருமாலுமதனிலுண்டாம்
கோனென்றபச்சைவர்ன்னக்குதிரையுண்டு
கொடிதானவாகாசப்புரவியுண்டு
மானென்றநீலவர்ன்னக்கல்லுமுண்டு
மாணிக்கமேவுமடாசுனையிலப்பா
தேனென்றதேவதைகளனேகமுண்டு
ஜெயமானகமண்டலநீராருண்டாமே. (௩௭)

உண்டாநீலஞ்சோதிமரமுமுண்டு
வுயர்ந்ததொருமூலிகையுமதிலேயுண்டு
கண்டாகொயம்புத்தூர்மலையிலப்பா
கனகூட்டமைந்நூறுசித்தருண்டு
அண்டாவிரட்டியூர்மலையிலப்பா
வைம்பதுபேரதிலிருப்பார்சித்தர்தானும்

உண்டாவிர்த்தாசலமலையிலப்பா
வொருநூற்றுவிருபதுபேர்சித்தராமே. (௬௱௧)

ஆமப்பாவருணகிரிமலையிற்கேளு
மைந்நூறுபேர்கள்சித்தாதனில்வாழ்வார்
ஓமப்பாகழுக்குன்றிலொன்பதுபேர்கூட்டம்
வுயர்வானகால்மலையிலொருநூறுசித்தர்
நாமப்பாமலைகளிலேயனேகஞ்சொன்னோம்
நல்லதொருசித்தரெல்லாஞ்சொருபமாகி
சேமப்பாலவரவரோசமாதிகின்று
செகமலையிலிங்கமதாய்முளைத்திட்டாரே. (௬௱௨)

முளைத்திட்டார்சிருவிகற்பசமாதியாகும்
முழங்குகின்றவஷ்டாங்கயோகமாகும்
தளைத்திட்டவெட்டிரெண்டக்ஷரமேயப்பா
தானறிந்தபேர்களுக்குச்சமாதிலிங்கம்
அளைத்திட்டவக்ஷரமுமேகமாகு
மறையவல்லோவந்தமுஞ்சூட்சமுந்தாமாச்சு
வளைத்திட்டசபாபிரம்மசக்கரமேயப்பா
வல்லதொருசூட்சுமமாந்தேகந்தானே. (௬௱௩)

தானென்றசூட்சுமதேகத்தைக்கொண்டு
தலங்கண்டுதூலத்திலடக்கிக்கொண்டு
வேனென்றமூலமாய்முளைத்தாராயோ
விதமானமூச்சோடுபேச்சமற்று
பானென்றபேரின்பமானவாசல்
பற்றியுள்ளேவரம்பெற்றார்சாவோயில்லை
மானென்றமைந்தனேமலையிற்றானு
மயங்கியலையாதேயொன்றுகேளே. (௬௱௪)

கேளப்பாமூலவர்க்கமதிகமாகுங்
கிடையாதசித்தியெல்லாமிவர்க்கேயெய்தும்
வாளப்பரவிந்தவர்க்கமசடோவில்லை
வல்லதொருமூலமதைவழுத்தக்கேளு

சூளப்பாசூழ்ந்திருக்குமிடங்களெல்லாஞ்
சூட்டுகிறேன்சுந்தரம்போற்றிறந்துக்கொள்ளு
ஆளப்பாவாகாசம்பரமேயாகு
மடங்கிநின்றார்திருமூலராதிதானே. (௩௱௫)

ஆதியென்றசித்தம்பாமேதிருமூலராச்சு
வவருடனேபதினெண்பேரதிலேயாச்சு
சோதியென்றகாலாங்கிநாதர்தானுந்
துலங்குகின்றகாஞ்சிபுரந்தனிலேயாகும்
நீதியென்றநீதியெல்லாம்வழுவராமல்
நீணிலத்திற்றபங்கணிச்சயமாய்ச்செய்வார்
வேதியென்றகும்பமுநிகும்பகோணம்
விளங்கிநின்றுவொந்நாளுமந்தவூரே. (௩௱௬)

ஊரானமயிற்றேசமச்சமுநியேயாகு
முற்றதொருசீகாழிசட்டைமுநியேயாகும்
பேரானவழுகண்ணிச்சித்தர்தானும்
பெரிதானநாகப்பட்டணமேயாச்சு
வேரானவிடைமருதூர்யிடைக்காடராகும்
விளங்கிநின்றமதுரைசுந்தரருமாச்சு
சீரானகமலமுநியதுவேயாச்சு
சிறந்ததுவாரகையிற்பாம்பாட்டியாமே. (௩௱௭)

ஆமென்றபுண்ணாக்குவீசர்தாமு
மழகானநாங்கணுச்சேரியிலேயாச்சு
வாமென்றகொங்கணர்தானிருந்தமூலம்
வளர்ந்ததிருக்கணங்குடியிலாகும்
நாமென்றநாரதனிருந்தமூலம்
நலமானவிடைமருதூர்நாட்டமாச்சு
ஓமென்றவயித்தீச்சுரந்தனில்வசிட்ட
ருன்னதமாயுகந்துநின்றமூலந்தானே. (௩௱௮)

காமென்றவால்மீகர்திருவைதனிலிருந்தார்
கருவூரார்காளஹத்திரியுமாச்சு

தேனென்றகாசியிலேவிஸ்வாமித்ரர்
திருவையார்தனிலகப்பைச்சித்தாகும்
வானென்றகடுவெளிச்சித்தர்தானும்
வளமானதிருக்காஞ்சிப்பதியிலாச்சு
வேனென்றபுலத்தியர்தானிருந்தமூலம்
விதமானவாவடையார்கோவிலாச்சே. (ருாகூ)

ஆச்சென்றகோரக்கர்கழுக்குன்றமூல
மதிகருத்திராஸ்தலத்திற்காசிபருமாச்சு
நீச்சென்றவருணகிரிதன்னிற்கேளு
நிஜமானகௌதமருமதிலிருந்தார்
காச்சென்றகருவைநல்லூர்மார்க்கண்டர்தான்
கருவானதிரிகூடல்மூலராச்சே
வாச்சென்றபாவவிநாசர்தன்னில்
வளமானபுலத்தியர்தன்மூலமாமே. (ருாய)

ஆமென்றசுந்தரகாலாங்கிநாத
ரதிலிருந்தார்திருக்கடவூரவர்தானுகும்
போமென்றதிருப்பவணமவர்தானுச்சு
புகழ்ந்ததிருக்கோவலூரவருமாச்சு
நாமென்றவாடுதுறைவிஸ்வாமித்ரர்
நல்லதிருஞாலமூமேபாம்பாட்டிச்சித்தர்
வரமென்றதிருப்பனந்தாள்வரரிஷியுமாகும்
வளர்திருப்பெருங்காவூர்தான்கன்னிசித்தர்தானெ. ()

தானென்றவானைக்காவலதிலேகேளு
சமஸ்தானமச்சமுனிசமாதியாகும்
தெனென்றதென்மலையில்வரதனுகுஞ்
சேனையெனுஞ்சேத்தூர்மார்க்கண்டராச்சு
வானென்றமலைநாடுநெடுங்குன்றூரில்
மகத்தானதிருமூலர்வாசபாச்சு
நானென்றமேலச்சிதம்பரத்தில்
நாடிநின்றதிருமூலர்நாட்டந்தானே. (ருகஉ)

நாட்டமுடன்திருக்கோணந்தன்னிலேதான்
நாட்டியதோர்கோரக்கரதன்மூலமாச்சு
தேட்டமுடன்கொங்கணர்தனிக்கோடிதுறையதாகுஞ்
சிறந்ததிருவாஞ்சியிற்கமலமுநியாகும்
ஆட்டமுடன்பதினெட்டுசித்தரெல்லா
மஷ்டாங்கயோகத்தாலெட்டெட்டாகி
கூட்டமுடனெவ்வொருவர்சித்துகாட்டிக்
குவலயத்திலிங்கந்தாய்முளைத்தார்பாரே. (௩௧௩)

பாரப்பாவிப்படியேசித்தரெல்லாம்
பலவிதமாய்மலைகாடாற்பூமியெல்லாம்
ஆரப்பாவங்குமிங்குநிறைந்துநின்று
ரவரவர்கள்பிள்ளைகளுமப்படியேநின்றார்
சீரப்பாசித்தருடமூலங்காணச்
செகத்திலேயெவரறியப்போராரையோ
நேரப்பாநாமறிந்தசிறிதுசொன்னேம்
நிலைக்காட்டாச்சித்தர்களுமனாத்திட்டாரே. (௩௧௪)

மனைத்திட்டார்நதிமூலம்ரிஷிமூலமெல்லாம்
வகைவிபரமாகவுந்தான்சொல்லிவைத்தேன்
நினைத்திட்டேன்யானிருக்குமூலஞ்சொல்வேன்
நிலையானவரையாறுந்தலங்களாகி
அனைத்திட்டாவினன்குடியும்பரங்குன்றமப்பா
வழகானதிருத்தணிகைக்கழுக்குன்றோடு
பனைத்திட்டவேரகமுஞ்செந்தூராகும்
பரிவானதலமாறும்நாம்தாமமே. (௩௧௫)

ஆமென்றதலங்கள்வழியின்னஞ்சொல்வே
னப்பனேகதிர்காமஞ்சுப்பிரமணியம்
ஓமென்றமரவருடகோவிலொன்று
வுறவானவேள்விமலைவள்ளியூராம்
நாமென்றசாமிமலைவேலூராகும்
நலமானசோலைமலைதென்னிலஞ்சியாகும்
வாமென்றகாஞ்சிபுரமுதலாயுள்ள
மலைதோறுமிருந்துவிளையாடினேனே. (௩௧௬)

## அண்டபிண்டமறியச்சாட்சிகூறல்.

ஆடினரோவ்வொருவரூபத்தினாலு
மானதொருசித்ததெல்லாமாடியாடி
நாடினன்பதினேழுசித்தருந்தான்
ஞாலமதிற்சிவதலங்களனேகமானார்
நாடியதோர்தலத்திலகஸ்தியருநாமும்
நாம்வாய்வாய்க்கன்னிதிசையதனில்வாழ்வோம்
நீடியதோர்மூலர்சபாதியாய்நின்று
நிலைத்ததனாற்சிவாலயமென்றுலகிலாச்சே. (௩௧௭)

ஆச்சுதென்றவாதிசித்தரொன்பதுபேராகு
மவரிருந்தவிடமதுவெகோணமாகும்
வாச்சுதென்றநவகோணவீட்டினாலே
வல்லதொருவாலயமாய்நிலைத்ததையோ
பேச்சுதென்றநவலோகவாட்டமெல்லாம்
பெரிதானவாட்டமொன்றுமில்லையப்பா
காச்சுதென்றநவலோகம்நவலோகந்தான்
கண்டுபார்நவத்வாரமொன்பதாமே. (௩௧௮)

ஆமென்றநவகோடிதேவராச்சு
வாச்சரியநவக்ரகமுமிவர்களாச்சு
வாமென்றமனுதேகம்நவகோணமாகும்
வல்லதொருவிஸ்தாரதேகமன்பத்தாறு
வேமென்றவிவர்களெல்லாமிதற்குளுண்டு
விதமானபிண்டத்திலடக்கக்காணும்
நாமென்றபிண்டத்திற்காணுமொன்று
நலமானவண்டத்திற்காட்டினேனே. (௩௧௯)

காட்டினேனண்டாண்டஞ்சரியாய்க்காண
காசினியில்மூலவர்க்கசித்தைக்கேளு
ஆட்டினதோர்மூலவர்க்கசித்தருக்கு
வதிகமடாவெந்தனுடசித்துமெத்த
மாட்டினரீசனுந்தானயனுமாக
மகிழ்ந்தெனக்குப்பட்டமதுவிஸ்தாரப்போ

மூட்டினேன் நூற்றியெட்டுச்சதுர்யுகந்தான்
முடிவாகதிருஷ்டிசெய்துவிருந்தேன்காணே. (௫௨௰)

காணப்பாவதிலிருந்துக்கடந்தபின்பு
கருவானவிஷ்ணுபட்டங்கட்டிவைத்தார்
தோணப்பார்லதிலிருந்துஅலக்கஞ்செய்தார்
தொல்லுலகில்விஷ்ணுபதிசொல்லுவேன்கேள்
பூணப்பாதேவருக்காய்கிருத்தஞ்செய்வேன்
புகழானதிருப்பதியென்றதன்பேராச்சு
நீணப்பாசெம்பிவனந்தன்னில்வந்து
நிருவிகற்பச்சமாதியாயிருந்திட்டேனே. (௫௨௧)

இருந்திட்டேன்வெகுகோடிகாலமாக
விருக்கயிலேயீஸ்வரியாளென்முன்வந்து
திருந்திட்டவந்தரங்கமங்கேசொன்னாள்
தெளிந்தறிந்தவரங்கனென்றுபெயருமாச்சு
வருந்திட்டபூதமைந்துமைந்துரங்கம்
வல்லதொருகருவிதொண்ணூத்தாறுங்கேளு
பொருந்திட்டதலந்தொண்ணூத்தாறுமாச்சு
பிள்ளைகளுக்கொருதலமாயிருந்தேன்பாரே. (௫௨௨)

## மிலேச்சருண்டானவை-கூறல்.

பாரப்பாநூத்தெட்டுத்தலமுமாச்சுப்
பலவிதமாய்ப்பெயர்படைத்துநானும்நின்றேன்
வேரப்பாவின்னமோராச்சரியங்கேளு
விதமானதுலுக்கர்மதமொன்றுண்டாக்கி
ஆரப்பாவம்மதத்திநிறைந்துநின்றே
வனேகவிதரூபமதாய்வெளியாய்நின்றேன்
சாரப்பாயெம்பாத்தின்மார்க்கமாகுஞ்
சார்ந்துபாராகாசரூபந்தானே. (௫௨௩)

## ஆதிநந்தி.

தாவென்றவாதியிலேநந்தியானேன்
தவஞ்செய்துசித்தனயன்மாலுமானேன்

வேனென்றசுப்பிரமணியரூபமானேன்
    விண்ணவர்சேனாபதியிந்திரனுமானேன்
நானென்றகிருஷ்ணவடிவாகிநின்றேன்
    நபிரூபமாயுலகமெங்குமானேன்
வானென்றபராபரமாய்நின்றுக்கொண்டேன்
    மாநிலத்திற்போகரென்றுவாழ்ந்திட்டேனே. (கஉச)

வாழ்ந்திட்டேனென்தனுடசித்தைக்கண்டு
    வல்லசித்தரியாவர்களுமலைத்தெழுந்து
தாழ்ந்திட்டாரருள்வேண்டுமென்றுகேட்டார்
    தவஞ்செய்தாற்றருவேனென்றருளிச்செய்தேன்
சூழ்ந்திட்டார்யானிருக்கும்பதியிலப்பா
    சொல்லரியதவஞ்செய்துவிருக்குநாளில்
வீழ்ந்திட்டுப்போறார்கள்மனிதரென்று
    விதிவிலகியிருப்பதற்குச்செப்பினேனே. (கஉரு)

செப்புகிறேன்சித்தரொல்லாமறைத்தேவைத்தார்
    செகந்தனிலெசொன்னதெல்லாங்கபடமெத்த
அப்புகிறேன்கபடமென்றவினையைத்தள்ளி
    யதிசுருக்காயாச்சரியமடையச்சொல்வேன்
தப்புகிறேனென்றுலுந்தவறொட்டாது
    தன்னிலேதூக்குமடாவெந்தன்மூலம்
ஒப்புகிறேனென்றனுடமூலங்காண
    வுயர்ந்ததொருகாயசித்திசெய்துவாயே. (கஉசு)

## பத்தியங்-கூறல்.

வாமப்பாவறுசுவையுந்தள்ளிப்போட்டு
    வண்மையுள்ளவாவின்பாற்சோறுமுண்டு
தாமப்பாவறுசுவையாலுந்திதன்னில்
    தாவித்துக்கிருமியதுதுளைத்ததையோ
வேமப்பாவடக்காயாற்கிருமியுண்டாம்
    மேவிநின்றகிரமதனிலெண்ணெயாகா
சாவப்பாவிந்துவதுபோனதாலே
    சடலத்தில்நரைதிரையுண்டாச்சுபாரே. (கஉஎ)

## கற்பங்-கூறல்.

ப்ரப்பாபலமார்க்கமெல்லாந்தன்னிற்
பரிவாகவோரிடத்திலிருந்துக்கொண்டு
சேரப்பாயோகத்திற்சிந்தைவைத்து
சென்றுஞாத்தக்கற்பமெல்லாந்தின்றுபாரு
வீரப்பாசெங்கடுக்காய்த்தூளேசெய்து
விதமானசித்தாமுத்துவெண்ணெய்சேர்த்து
வாரப்பாமிச்சங்காயளவுதின்ன
வல்லதோர்மூலசுத்தியுடனேயாமே. (ந உஅ)

ஆமென்றமண்டலமேதின்றுவந்தா
லாச்சரியமூலசுத்திகூடும்போகும்
போமென்றபொற்சீந்திக்கொண்டுவந்து
புகழாகநிழலுலர்த்திச்சூரணமேசெய்து
நாமென்றஜாதிக்காய்பத்ரிசிராம்பு
நலமானதிப்பிலியுமுளகோடேலம்
தேமென்றதேசாபரஞ்சுக்குசேர்த்துச்
செயமானவெந்நீரில்விடைதான்கொள்ளே. (ந உகூ)

கொண்டடாவாய்வுகள்போம்பித்தம்போகுங்
கொடுஞ்சூலைக்கட்டுகளும்வாங்கிப்போகும்
அண்டடாமண்டலமேகொண்டாயானு
லாச்சரியந்தேகம்பொன்னிறமேகாணும்
மெண்டடாவியாதிகளுந்தீர்ந்துபோகும்
வேதமென்றகுளிகையதுகைக்குள்ளாகும்
சென்றடாதசவாயுநிலையும்போகுஞ்
சிக்கனமாய்முளகுபதினொன்றுஞ்சேரே. (உநந)

சேரப்பாகோமயத்தைவிட்டுவாட்டி
ஜெயமாகவந்நீரிற்குழைத்துக்கொண்டு
வீரப்பாமிச்சங்காயளவுதின்ன
விதமானவாய்வினொடுகிருமிதீரும்
வாரப்பாபித்தமொடுபாண்டும்பொகும்
வல்லவனேமண்டலநால்வனாயிற்றின்றால்
சீரப்பாதேகமதுசட்டைதள்ளுஞ்
செம்பட்டைப்போலாகும்ரோமந்தானே. (உநக)

தானென்றவத்தியின்வேர்தயிலம்வாங்கித்
தனியானதிரிபலையைப்பொடிதான்செய்து
நானென்றதுட்டிடைதான்தயிலத்திற்கொள்ள
நலமானவஸ்தியுள்ளசூடுபோகும்
வேனென்றகிருமிகளுமிறந்துபோகும்
விதமானதேகமதுகெட்டியாகும்
வானென்றபொற்றலையைக்கொண்டுவந்து
வல்லதொருமிளகிருபத்தொன்றுசேரே (௩௩௨)

சேரப்பாவெள்ளாட்டினீரிலப்பா
சேரவேயரைத்துமிச்சங்காய்போற்றின்ன
வாரப்பாபித்தம்போம்பாண்டும்போகும்
வல்லதொருநரைதிரையுமாறிப்போகும்
வீரப்பாமண்டலமேதின்றுபாரு
விதமானகற்றுழைசிவந்ததாகும்
பாரப்பாயதன்சோற்றைமண்டலமேகொள்ளப்
பகர்மேகமிருபத்தியொன்றும்போமே. (௩௩௩)

போமென்றவாய்வெல்லாமகன்றுபோகும்
புகழானதேகமதுகுளிர்ச்சியாகும்
வாமென்றமண்டலத்தில்நரைதிரையும்போகும்
வல்லவனேதில்லைப்பால்வாங்கிக்கொள்ளு
ஆமென்றகுழைதனிலேபாலைவாங்கி
யாச்சரியம்நடுநாவில்விட்டுக்கொண்டால்
நாமென்றதேகமதுமிறுகிப்போகும்
நரைதிரையுண்டானதெல்லாந்தீருந்தானே. (௩௩௪)

தானென்றமண்டலந்தான்விடாமற்கொள்ளத்
தசவாயுண்டானதெலாந்தானஞ்சேரும்
வேனென்றசுவாசமதுநிலையிற்கட்டும்
வெள்ளெருக்கம்பால்வாங்கிவிடாதேகொள்ளு
கானென்றமாசமதுவாறுகொண்டாற்
கனசித்தியாகுமடாதேகந்தேகந்
வானென்றபெட்டியதின்பருப்பைவாங்கி
வல்லதொருசெங்கொட்டைக்கூட்டுச்சேரே. (௩௩௫)

சேயொன்றேன்வேம்பின்வித்துங்கூடச்சேர்த்து
செயமானகுறியொட்டிவிரையுஞ்சேர்த்து
வீயொன்றவகைக்கிரண்டுபடிதான்சேர்த்து
வீரமென்றகாமியப்பூபலம்பத்துகூட்டி
ஆயொன்றகுழித்தயிலமிறக்கிக்கொண்டு
வாச்சரியமிளகுகிராம்புசாதிக்காயும்
நேயொன்றபத்திரியுஞ்சரியாய்தூக்கி
நேர்புடன்சூரணித்துவிரலிடைதான்கொள்ளே. (ருருசு)

கொள்ளுவாய்விரலிடைதயிலத்திற்கொள்ளக்
கொடிதானசூலையொடுமேகம்போகும்
மள்ளுவாய்வாயுவெல்லர்ந்தணிந்துபோகும்
மாச்சரியவிடந்தீண்டிலதுவேசாகும்
ஈள்ளுவாய்நான்குமண்டலமேகொண்டால்
ஈரையேதுதிரையேதுநமனங்கேது
உள்ளுவாய்தயிலமதுவுறுதியப்பா
வுரைத்துவிட்டேனுண்மையதாய்க்கொண்டுவாளே. ()

வாளப்பாசெங்கடுக்காவேர்தயிலம்நாழி
வல்லதொருசிவன்வேம்புதயிலம்நாழி
ஆளப்பாவெழிஞ்சிவேர்தயிலம்நாழி
யாச்சரியம்வேம்பின்வேர்தயிலம்நாழி
நாளப்பாவாவாரைவேர்தயிலம்நாழி
நலமானவில்வவேர்தயிலம்நாழி
வேளப்பாநிலவாகைதயிலம்நாழி
வெண்ணொச்சிவேர்தயிலம்நாழிபாரே. (ருருஅ)

பாரப்பாவிதுவெல்லாமொன்றாய்ச்செய்து
பண்பானபீங்கானிற்பதனம்பண்ணி
வீரப்பாஜாதிக்காய்மிளகுபத்ரி
விதமானவாலுழுவைவாய்விலங்கம்
நேரப்பாகருஞ்சீரகங்காமியப்பூ
நிரையாகருக்கிமூலமிதனோடப்பா
சீரப்பாகோரோசனைகிராம்புசுக்கு
சித்தரத்தைவகைக்குபலமூன்றுகூட்டே. (ருருகூ)

கூட்டுவாய்புழுகினுடுசெவ்வாதுமப்பா
கொடிதானவிவையிரண்டுங்களஞ்சிரண்டு
ஆட்டுவாய்மருந்தையெல்லாஞ்சூரணமேசெய்து
வப்பனேவிரலிடைதான் தயிலத்திற்கொள்ள
மாட்டுவாய்மண்டலத்திற்சட்டைதான்தள்ளும்
மகத்தானகருவியெல்லாமடங்கிநிற்கும்
தீட்டுவாய்தேவியுடபூசைபண்ணி
திறமானமன்மூவந்துகொண்டுபாரே. (௩௪௰)

பாரப்பாமகாரமென்றதீருண்டோர்க்குப்
பகருகின்றகோபமதுகனவிலில்லை
நேரப்பாபசியில்லையாசையில்லை
நேயமாந்திரோதாயிமாய்கையில்லை
ஊரப்பாசாதிவர்ணாஸ்ரமமுமில்லை
வோகோகோவறுயதுபேர்பட்டுவீழ்ந்தார்
வேரப்பாவூமைப்பால்விடாமற்கொண்டால்
விதமானமுப்பத்தியாறும்போச்சே. (௩௪௧)

போச்சுதடாதொண்ணூத்தியாறுபேரும்
புகழானவுட்கருவியெல்லாம்போச்சு
காச்சுதடாபுறக்கருவியெல்லாமப்பா
கசடானகருவியதைநீத்தால்சித்தன்
வாச்சுதடாகோடியனுமிகுந்துசெய்வார்
வல்லபிரானனுகூலசத்ருவாகும்
ஏச்சுதடாபுறக்கருவிபோகவேகா
னெளிதினிலேசெப்புகிறேனினிதுபாரே. (௩௪௨)

பாருமென்றவிந்துவுடன்கெந்திசேர்த்துப்
பால்விட்டரைத்துக்கொட்டைப்பாக்களவுதின்ன
வற்குமென்றபச்சரிசிபருப்பும்பொங்கி
யெலுமிச்சங்காயளவுபசுநெய்யுஞ்சேர்த்து
தீற்குமென்றவொருபோதுதின்றுபாரு
தின்னயிலேமங்கென்றேயூதிக்கொள்ளு
ஆர்க்குமேயிப்பொருள்தான்கிட்டாதப்பா
வாச்சரியவிடியாலேமூலங்கொள்ளே. (௩௪௩)

கொள்ளுவாய்விடியவொருசாமமென்னக்
குணமென்னமணமென்னக்கூடவிட்டு
அள்ளுவாயதுநடுவே-ஹரிஓம்-என்று
வாச்சரியம்-அம்பரமேயென்றடைத்து
தள்ளுவாய்-நசி-மசி-என்றுகூறி
நடுவாகவிந்துவிட்டுஓலமிட்டு
கள்ளுவாய்மூலமூலைக்கோணநாட்டிக்
கடிதானமூன்றுபிடிகொண்டுவாவே. (௩௪௪)

வாமப்பாகொளும்போதுஓங்காரங்கொண்டு
வளர்பொழுதுசாய்ந்தாக்கால்மகாரங்கொள்ளு
வேமப்பாதேகமதுசிவந்துபோகும்
வெளிக்கருவிமறைக்கவுந்தான்போதைகாணும்
ஆமப்பாகண்மூழிக்குமுன்னேசோதி
யனற்சுடுமேகதிரவனர்போலேவந்து
தாமப்பாவருடமிப்படியேகொண்டால்
தாளாதுதேகமதுவிருக்குந்தானே. (௩௪௫)

தானென்றதேகத்திற்குவயதுநூறுருந்
தப்பாதுநரைதிரையும்நாடாதப்பா
நானென்றபிள்ளைகளுங்கொண்டமார்க்கம்
நாடிப்பார்சிவயோகந்தோணுந்தோணும்
வேனென்றகற்பமதுகொள்ளும்போது
விதமானமுக்கோணசக்கரமேபோட்டு
கானென்றவாலையினக்ஷரமேபோட்டுக்
கருவான-அங்கென்றும்வங்கென்றும்போடே. (௩௪௬)

போடுவாய்வாலைபரமேஸ்பரிவாவாவென்று
புகழான-வ-சி-ய-ந-ம-வாவாவென்று
ஆடுவாய்வஸ்துவொடுசத்திவைத்து
வாச்சரியம்வடைபயருதோசைவைதது
கூடுவாய்கந்தமூலபலாதிவைத்துக்
கொடிதானபுழுகுசவ்வாதத்தர்வைத்து
சாடுவாய்சந்தணமும்பன்னீர்வைத்து
சாங்கமாய்தூபமொடுதீபங்காட்டே. (௩௪௭)

காட்டியேநமஸ்கரித்தாயிரத்திநெட்டுக்
கருவானவுருசெபித்துவெதிரோகின்றால்
சூட்டியேயன்பனெனவுன்முன்வந்து
சுந்தரம்போல்நிற்பாளேவாலைதானும்
பூட்டியேமனதொன்றாய்ப்பாதந்தன்னில்
புத்திடாய்வேண்டியதைக்கேட்டுக்கொண்டால்
நாட்டியேவிந்திடுவாள்திறமுமாவாய
நல்லதொருசித்தியெல்லாம்மப்போதாமே. (௩௪அ)

ஆமென்றசித்தியெல்லாமிவளைவிட்டா
லாராலுமாகாதுதேறத்தானும்
வாமென்றபூசையெல்லாம்நாங்கள்செய்து
வல்லசித்தர்பதினெட்டுபேருமானோம்
ஓமென்றபூசையதுவறியமாட்டா
யுட்கொண்டகற்பமெல்லாமுறையாதப்பா
தேமென்றதேகமதுநிலையாதப்பா
தேடியுன்னையெமன்கொண்டுபோவான்காணே. (௩௪௯)

காணப்பாகைலாசவர்க்கத்தாருங்
கக்கத்திலெந்திரங்கள்போட்டுக்கொண்டு
நீணப்பாபூசையதுநிலையாய்ச்செய்வார்
நிலைகாட்டாமனைப்போடுமடக்குமுண்டு
தோணப்பாமூலகுருவிதனைப்பார்த்து
தோன்றவேயாவருக்குமெந்திரம்போட்டு
ஆணப்பாநாற்பத்திமுக்கோணந்தா
னழகானசிதம்பரத்திலடக்கமாச்சே. (௩௫௰)

ஆச்சுதடாவஷ்டசித்துமதற்குள்ளாச்சு
வல்லவொருதேவதையுமடங்கிப்போச்சு
காச்சுதடாநீநினைத்தபடியேயப்பா
கண்திறக்குமுன்னேயல்லோகாசிகாணும்
ஏச்சுதடாவுன்னெழுத்தேமனையுமப்பா
யெக்கோடிகாலமுந்தானிருக்கலாகும்
காச்சுதடாவிந்ததனையறிந்துக்கொண்டால்
கைலாசபதியுனக்குக்காணியாமே. (௩௫௧)

ஆமென்றவாதிவஸ்துகற்பங்கொள்ள
வாச்சரியஞ்சித்தியொன்றுசொல்லக்கேளு
வாமென்றபாஷாணம்வெள்ளையாக
வல்லவனேபலமைந்துதூக்கிக்கொண்டு
வேமென்றஜெயநீராற்ருேய்த்தெடுத்து
வெய்யலிலேகாளொன்றுபோட்டுவிட்டால்
போமென்றவெண்ணெயதுசிவந்துபோகும்
புகழானமுப்பூவையப்பாகொள்ளே. (௩௫௨)

கொள்ளுவாய்வெய்யலிலேயுலர்த்திவைத்துக்
கொடிதானரும்பத்திலடைத்தபின்பு
கள்ளுவாய்சீலைமண்தானேழுஞ்செய்து
கலியாமற்கெஜபுடமேபோடக்கட்டும்
அள்ளுவாயதையெடுத்துவைத்துக்கொண்டு
வரைக்காசுயிடை வீதமுண்ணுவுண்ணு
உள்ளுவாய்வருடமென்றுகொள்ளவேண்டு
முருதியாயண்டமொடுவஸ்துகூட்டே. (௩௫௩)

கூட்டுவாய்கட்டினதோருப்புசேர்த்து
கொடியதொருபழங்கொறக்காபுளியுஞ்சேர்த்து
ஊட்டுவாய்வெள்ளாட்டுமாமிசமுஞ்சேர்த்து
வுருதியுடனோர்வருடந்தின்றபின்பு
மாட்டுவாயமைந்ததொருபாஷாணந்தான்
மயங்காதேகாற்களஞ்சிதினமுங்கொள்ளு
காட்டுவாய்பலமைந்துங்கொள்வதாலல்
நலமானவருடமொன்றுநாட்டிப்பாரே. (௩௫௪)

பாஷாணவேதை-கூறல்.

பாரப்பாவருடமொன்றுவாச்சுதானற்
பகருகின்றகர்ப்பூரமுருக்கிக்கொண்டு
நேரப்பாபத்துக்குவொன்றுதானும்
நீயுமங்கேவிந்தால்வயதுபத்தனையாம்
பாரப்பாவிருவருடங்கொண்டாயானல்
பண்பானவயதுமடாபதினைறுகுஞ்
சாரப்பாலிங்கமொருபலந்தான்வாங்கிச்
சலியாமற்பங்கம்பாலைச்சாருவாங்கே. (௩௫௫)

வாங்கியதைப்பதினைந்துபுடமேபோட
வல்லதொருலிங்கமதுகட்டியாகும்
தாங்குவாய்சையோகமரத்தின்பாலில்
சாமம்ரெண்டுசுருக்கிட்டால்மெழுகுமாகும்
தாங்குவாய்தாம்பரத்திற்பத்தொன்றீய
தங்கமதுபத்தரையுமாகுமாகும்
ஓங்குவாய்வருடமொன்றுவுள்ளேகொள்ள
வீளவயதுபோலாகுஞ்சொன்னேன்பாரே. (௧௫௬)

சொன்னதொருகருங்கோழிமுட்டைதன்னில்
சுகமாகத்தலைக்கன்னிமூட்டைதன்னில்
பின்னதொருவிரதமதுபலமேதாக்கி
நிலையானகொம்பரக்கால்வாயைமூடி
அன்னதொருவடைக்குள்ளேவைத்தாயானால்
வடையிலுள்ளகுஞ்சுகளும்பொறித்துப்போகும்
வன்னதொருமுட்டையைநீயெடுத்துக்கொண்டு
வல்லதோர்மிஞ்சின்வேர்கவசங்கட்டே. (௧௫௭)

கட்டியேகுக்கிடத்திற்போட்டாயானால்
கருவானமணியதுதானிருகிநிற்கும்
ஓட்டியேகருவூமத்தைக்காய்க்குள்வைத்து
வுயர்ந்துநின்றலிங்கமொடுதுருசுகெந்தி
இட்டியேமனோசிலையுஞ்சரியாய்தூக்கி
யிதமாகவகைக்குக்கால்பொடித்துக்கொண்டு
கெட்டியாயதற்குள்ளேயடைத்துக்கொண்டு
கெடியானவராகபுடம்போட்டுக்கொள்ளே. (௧௫௮)

கொள்ளுகின்றசெந்தூரம்முருக்கம்பூப்போலாம்
குறியானசெந்தூரமெடுத்துக்கொண்டு
தெள்ளுவாய்காற்களஞ்சுதேனிற்கொள்ள
திடமாகுந்திசைவாய்வும்படிந்துபோகும்
அள்ளுமென்றசூலையெல்லாம்வாங்கிப்போகு
மாச்சரியச்செந்தூரம்வயதுபத்தாம்
நள்ளுமென்றவிரதமயக்கரண்டிவிட்டு
நல்விளக்குகொளுத்தியபின்கீழேவையே. (௧௫௯)

## இரசச்செந்தூரம்.

வையப்பாசிலையதனைச்சுருக்குதாக்க
வல்லவனேகடிகையொன்றுமாச்சுதானால்
உய்யப்பாதுருசதுவும்பலத்துக்குக்கால்
உத்தமனேபொடித்ததனையதன்மேற்றூவி
கையப்பாவெள்ளிச்சியெண்ணெய்கூடதாகக்
கதறியதுசாகுமடாகட்டியாகும்
மெய்யப்பாவதையெடுத்துக்கல்வத்திட்டு
விதமாகநொருக்கிடவேநொருங்குங்காணே. (௩௬௰)

காணப்பாவிதனுடனேதுருசுகெந்தி
கனவீரலிங்கமடாசிலையுஞ்சேர்த்து
கோணப்பாவகைக்குக்காற்பலமேதூக்கி
கொப்பனவேயிதுவெல்லாங்கள்ளிப்பாலால்
பூணப்பாவாட்டியதைப்பில்லைசெய்து
புகழானவோட்டிலிட்டுமேலேமூடி
நீணப்பாசீலைமண்மூன்றுசெய்து
நிலையானகெஜப்புடத்திற்போட்டிடாயே. (௩௬௧)

## உருக்கு-அரப்பொடிச்செந்தூரம்.

போடுவாய்செந்தூரஞ்சிவந்துகாணும்
புடமேழில்முருக்கம்பூப்போலேகாட்டும்
சூடுவாய்சூலையொடுசூடும்போகும்
துடியானவிருபத்தோர்மேகம்போகும்
ஆடுவாய்நெய்தனிலேபணவிடைதான்கொள்ள
வாச்சரியந்திசைவாய்வுமடங்கிப்போகும்
சாடுவாயுருக்கினாப்பொடியைவாங்கி
சார்வானகுமட்டிமாதளைச்சாற்றிற்போடே. (௩௬௨)

போடுமென்றரவிபுடத்தில்வைத்துப்போடு
புகழாகநாற்சாமமாச்சுதானால்
ஆடுமென்றவெள்ளிபோற்சுத்தியாகு
மதனுடனேதுருசுகெந்திவீரம்லிங்கம்
சாடுமென்றமனோசிலையும்வகைக்குக்காற்பலந்தான்
சரியாகத்தூக்கிநீகல்வத்திட்டு

கூடுமென்றகள்ளிப்பால்விட்டுவாட்டிக்
குறியாகபில்லைசெய்துவெயிலில்வையே. (௩சு௩)

வையப்பாசாமம்நான்காச்சுதானல்
வகையானகள்ளிப்பால்விட்டுவாட்டி
உய்யப்பாபில்லைசெய்துவோட்டில்வைத்து
வுறவானவோடுகொண்டுமேலேமூடி
மெய்யப்பாசீலைமண்மூன்றுசெய்து
விதமானசெகப்புமேபோடுபோடு
கையப்பாசெந்தூரமுருக்கம்பூப்போலாங்
கருவானசெந்தூரமெடுத்துக்கொள்ளே. (௩சு௪)

கொள்ளுமென்றசெந்தூரம்பணவிடைநெய்யிற்றேனில்
கொண்டிடவேவாயுவொடுபித்தம்போகும்
நள்ளுமென்றமேகம்போம்சூடும்போகும்
நலமானதேகமதுவிரும்புபோலாம்
தள்ளுமென்றவயத்தினுடகிண்ணிவாங்கித்
தப்பாமற்றுருசுசஞ்சரியாய்த்தூக்கி
தெள்ளுமென்றசம்பழத்தின்சாற்றாலாட்டித்
திறமானகிண்ணியிலேவைத்துமூடே. (௩சு௫)

மூடியேதோர்கிண்ணமதைநெல்லுக்குள்ளே
முழக்கமுடன்மண்டலமேவைத்தபின்பு
ஆடியதோரடையெடுக்கவெண்ணெய்போலா
மாச்சரியமந்தவிடைகெந்திலிங்கம்
சூடியதோர்கல்வத்திலிட்டுக்கொண்டு
சுருக்கானசம்பளத்தின்சாற்றாலாட்டிக்
கூடியதோர்காசியென்றகுப்பிக்கேற்றிக்
கொடிதானமண்சீலைமூன்றுசெய்யே, (௩சுசு)

செய்யப்பாபாண்டத்தில்மணலைபபோட்டுச்
செயமானகுப்பிதலைகீழாய்நட்டு
மெய்யப்பாவதுமூழ்கமணலையிட்டு
விதமானபானைவாயோடுமூடி
கையப்பாசீலைமண்தான்மூன்றுசெய்து
கமலமெனுமக்கினித்தீபாக்கிமூட்டி

உய்யப்பாசாமமதுவிரண்டேயாஞு
    லுத்தமனேயிறக்கிவைத்துவாரிப்பாரோ (௧௬௭)

பாரப்பாசெந்தூரஞ்சிவந்துபோகும
    பருவமுடனதையெடுத்துப்பாணையில்வைத்து
நேரப்பாநெய்தேனிற்பணவிடைதான்கொள்ள
    நில்லாதுபாண்டுஞெடுவாய்வும்போகும்
தீரப்பாமேகவெட்டைபோகும்பாரு
    திறமானவரையாப்புகிரெந்திபோகும்
சேரப்பாபத்தியமாய்க்கொண்டுவந்தால்
    க்ஷணத்திலேவியாதியெல்லாந்தீருந்தானே. (௧௬௮)

தானென்றதுருசுகட்டிப்பலந்தாஞென்று
    தான்றூக்கிவட்டவோட்டில்வைத்துக்கொண்டு
வேனென்றமாம்பாவிற்றுவைத்துவைத்து
    விட்டுவிடுரவியிலேநீறிப்போகும்
நானென்றவீரமொடுலிங்கங்கெந்தி
    நல்மானமஞேசிலையும்பூரஞ்சேர்த்து
ஊனென்றவகைக்குக்காற்பலமாய்த்தூக்கி
    வுத்தமனேசம்பளத்தின்சாற்ருலாட்டே. (௧௬௯)

ஆட்டியேயில்லைசெய்துவோட்டில்மூடி
    யசையாமற்சீலைமண்மூன்றுசெய்து
கூட்டியேகெசப்புடத்திற்செந்தூரமாகுங்
    குறியானசெந்தூரம்நெய்தேனிற்கொள்
ளட்டியேபத்தியமாய்க்கொண்டாயாஞு
    லுத்தமனேவாய்விஞெடுபித்தம்போகும்
ஓட்டியேவிட்டுவிடும்மேகவாதம்
    வுள்விளைந்தகூடுகளுமோடிப்போமே. (௧௭0)

போமென்றவுளியதனைக்கொண்டுவந்து
    புகழானவெள்ளாட்டின்நீராவாங்கி
நாமென்றவுளியதனைக்காச்சிக்காச்சி
    நாலாறுதிராந்துவைக்கப்பொடியாய்ப்போகும்

வேமென்றபொடியதனையெடுத்துக்கொண்டு
வீரமுடன்நீலமுங்கெந்திசேர்த்து
பாமென்றபொடியொன்றுக்குப்பலங்காலாகப்
பயன்காணமருந்தெல்லாம்கிருத்துவாங்கே. (நூஎக)

## வெள்வங்கச்செந்தூரம்.

வாங்கியேகலவத்தில்வைத்துக்கொண்டு
வளமானகுமரிப்பால்விட்டுவாட்டி
ஓங்கியேபில்லைசெய்துவோட்டில்மூடி
யுறவானசீலைமண்மூன்றுஞ்செய்து
தாங்கியேகெசப்புடத்திற்செந்தூரமாகும்
தப்பாமல்மண்டலநெய்தேனிற்கொள்ள
நீங்கியேவோடுமடாவாதபித்தம்
நிலையாதமேகமொடுவாய்வும்போமே. (நூஎஉ)

போமென்றவெள்வங்கஞ்சட்டிதனில்விட்டுப்
புகழானபூமிவேர்முருக்கம்பட்டை
நாமென்றநாற்சாமமிரண்டுங்கிண்ட
நலமானசெந்தூரஞ்சுயமேயப்பா
வேமென்றவிறகொன்றுலெரித்துக்கொள்ள
விதமானசெந்தூரம்பதனம்பண்ணு
வாமென்றதிரிகடுகுதூளேசெய்து
வல்லதொருசெந்தூரம்பணவிடைதான்கொள்ளே. ()

கொள்ளுவாய்பசுவினதுவெண்ணெயதன்னில்
கொடுதானவாயுவொடுசூலைபோகும்
அள்ளுவாய்கிரெந்தியரையாப்புபோகு
மாச்சரியமேகமெல்லாமகன்றுபோகும்
நள்ளுவாய்கரிவாங்கமுருக்கிக்கொண்டு
நலமானமேனிசிலையும்பொடித்துப்போட்டு
தெள்ளுவாய்ப்புனல்முருங்கைவோரற்கிண்டத்
திறமானவங்கமதுசுத்தியாமே. (நூஎச)

ஆமென்றவங்கமதைவோட்டில்வைத்து
வழகானகழுதைப்பாறகருக்குக்காட்டி

வேமென்றதினைப்பொரியும்புற்பொரியுந்தாக்கி
விதமானபாலுடனேபோட்டுக்கிண்டி
நாமென்றகாந்தச்செந்தூரமீந்தால்
நல்லதொருவெள்ளியடாவயதுபத்து
ஓமென்றவெள்ளியைநீதகடாய்த்தட்டி
வுத்தமனேசெம்பூள்ளியனாத்துப்போடே. (௩எ௫)

போடுவாய்பற்பமதாதவளமாகும்
புகழானபற்பமதைகல்வத்திட்டு
நீடுவாய்ஜாதிலிங்கஞ்சிலையும்வீரம்
நெடுஞ்சூதகெந்தியொடுபூரங்கூட்டி
ஆடுவாய்வகைக்குக்காற்பலந்தானப்பா
வமைந்துநின்றபற்பமொருபலமுங்கூட்டி
நாடுவாய்சம்பழத்தின்சாற்றாலாட்டி
நலமானபில்லைசெய்துவோடுமூடே. (௩எ௬)

மூடவேசீலைமண்மூன்றுசெய்து
முழக்கமுள்ளவராகத்தின்புடமேபோட்டு
ஆடவேவெடுத்திடச்செந்தூரமாகு
மாச்சரியநெயதேனில்மண்டலந்தான்கொண்டால்
வாடவேவாயுவொடுஞ்சூலைபோகும்
வயற்றிலுள்ளகுன்மவலிவாங்கிப்போகும்
சாடவேதங்கமதுபலந்தானொன்று
சார்வானகெந்திரசம்பலன்தான்கூட்டே. (௩எஎ)

கூட்டடாவிரண்டுமொன்றாய்க்கல்வத்தாட்டிக்
குறியானதங்கமதுவுருகும்போது
மாட்டடாரசங்கெந்தியதனில்மாட்ட
மணற்போலவாகிவிடுந்தங்கமப்பா
சாட்டடாகல்வத்திலிட்டுக்கொண்டு
சார்வானகெந்திலிங்கஞ்சூதங்கூட்டி
ஆட்டடாவவ்விடைக்குச்சரியாய்க்கூட்டி
யப்பனேயிருசாமங்கல்வத்தாட்டே. (௩எஅ)

ஆட்டிநீபில்லைசெய்துவோடுமூடி
யழகானசீலைமண்தான்மூன்றுசெய்து

நாட்டிநீவராகபுடம்போடுவாயே
    நலமானபுடமூன்றிற்செந்தூரமாகும்
நாட்டடாசெந்தூரம்பணவிடைநெய்தேனில்
    நலமாகக்கொண்டிடவேதீரும்நோய்கேள்
வாட்டிவிடுஞ்சூலையொடுவாய்வும்போகும்
    வல்லவொருமேகமெல்லாம்வாங்கிப்போமே. (௩எசு)

போமென்றதேகம்பொன்னிறமேயாகும்
    புகழானசெந்தூரம்பத்தியமாய்க்கொண்டால்
வாமென்றபாஷாணயுப்புவெடியுப்புங்கூட்டி
    வண்மைமணத்தக்காளிச்சாற்றாலாட்டி
வேமென்றபில்லைசெய்துவராகபுடம்போட்டு
    விதமானமேனிதனிற்புடமொன்றுபோடு
வாமென்றமுன்சாற்றிலரைத்துக்கொண்டு
    வண்மைபெறுஞ்செப்பதனிற்கவசங்கட்டே (௩அ௰)

காட்டுவாய்மண்மூன்றுசெய்துக்கொண்டு
    கருவானகெசப்புடத்திற்போடுபோடு
ஓட்டுவாய்புடமூன்றில்நொறுங்கிப்போகும்
    வுத்தமனேகல்வத்திட்டிடித்துக்கொண்டு
கோட்டுவாய்லிங்கமொடுகெந்திசூதம்
    குறியானசிலைதுருசுவீரம்பூரம்
சாட்டுவாய்வகைக்குக்காற்பலந்தான்தூக்கிச்
    சார்வாகக்கல்வத்திலாட்டிக்கொள்ளே. (௩அக)

## தாம்பரச்செந்தூரம்.

கொள்ளவேசம்பளத்தின்சாற்றாலாட்டிக்
    குறியானபில்லைசெய்துவோட்டில்வைத்து
விள்ளவேமண்மூன்றுசெய்துக்கொண்டு
    விதமானகெசப்புடத்திற்போடுபோடு
அள்ளவேசெந்தூரமெடுத்துக்கொண்டு
    வாச்சரியநெய்தேனிற்கொண்டாயானல்
தள்ளவேசெய்யுமடாவாய்வுசூலை
    சலமானவயற்றுவலிகுன்மம்போமே. (௩அ௨)

## சூடவன்செந்தூரம்.

போமப்பாபித்தளையைப்பலந்தானென்று
புகழானகுகையினில்வைத்துருக்கிக்கொண்டு
காமப்பாதாழம்பாற்கால்படிதான்வாங்கி
நலமானதுருசுகாற்பலமேசேர்த்து
வேமப்பாசுருக்கிடுவாய்சாமமட்டும்
விதமானகல்வத்தில்நொருக்கிக்கொண்டு
தாமப்பாலிங்கமனோசிலையினோடுந்
தகுமானகெந்திபசந்துருசுமாமே. (ரு அரு)

ஆமப்பாபூரமொடுவகைவகைக்கு
வானவையைக்காற்பலமாய்க்கல்வத்திட்டு
சேமப்பாசம்பளத்தின்சாறறாலாட்டித்
திறமானபில்லைசெய்துவோட்டால்மூடி
தாமப்பாசீலையதுமூன்றுசெய்து
தப்பாமற்கெஜபுடத்திற்றாக்குதாக்கு
காமப்பாசெந்தூரஞ்சிவந்துபோகும்
நலமானநெய்தனிலேகொள்ளுவாயே. (ரு அச)

கொள்ளடாபணவிடையைக்கொண்டாயானால்
கொடியகுன்மவயற்றுவலிசூலைபோகும்
நள்ளடாமேகமொடுகிரொந்திதீரும்
நலமானவெண்கலத்தையறைத்துப்போட்டு
அள்ளடாபுடமூன்றுபோட்டபின்பு
வானதொருகல்வத்தில்நொருக்கிக்கொண்டு
வள்ளடாசிலையிரசம்வீரம்பூரம்
வளமானதுருசுலிங்கமொக்கப்பாரே. (ரு அரு)

பாரப்பாவிலைகள்சமவிடையாய்க்கொண்டு
பழச்சாற்றாற்கல்வத்திலாட்டிக்கொண்டு
வாரப்பாபில்லைசெய்துவோட்டில்வைத்து
வளமானமண்மூன்றுசெய்துக்கொண்டு
சேரப்பாகெஜப்புடத்திற்போட்டுவாங்கு
செந்தூரம்முருக்கம்பூப்போலிருக்கும்

பாரப்பாபணவிடை நெய்தேனிற்கொள்ளப்
பற்றற்றுவாய்விஞெடுமேகம்போமே. (௩அகூ)

போமென்றவிலாரியிலைச்சாருவாங்கிப்
புகழானவெள்வங்கத்தகடுதட்டி
நேமென்றவிலாரியுடன்துருசுசேர்த்து
ரொண்டுமொன்ருயாடியந்தத்தகட்டிலப்பா
வேமென்றபுடமேழுபோட்டாயாஞல்
வெருசுருக்குலிங்கமதுநொருங்கிப்போகும்
வாமென்றகல்வத்திலாட்டிக்கொண்டு
வளமானகெந்திரசந்துருசுசேரே. (௩அஎ)

சேரப்பாசிலைலிங்கம்வீரம்பூரந்
திறமானவகைக்குக்காற்பலமதாக
நேரப்பாகல்வத்தில்முன்மருந்தோடிட்டு
நிலையானபழச்சாற்ருற்சாமமட்டும்
ஆரப்பாவாட்டுசிப்பிலிலைசெய்து
வழகானவோட்டில்வைத்துமேலேமூடி
காரப்பாமண்மூன்றுசெய்துக்கொண்டு
கெஜப்புடத்தில்கீறியுஞ்செந்தூரமாமே. (௩அஅ)

ஆமென்றசெந்தூரமுருக்கம்பூப்போ
லப்பனேசெந்தூரம்பத்துக்கொன்றீய்
தாமென்றவயததுதானைந்தாறுகுந்
தப்பாமற்சூலையொடுதன்மம்போகும்
நாமென்றமேகமொடுகிரந்திகுட்டம்
நலமானவாய்வோடுசூடும்போகும்
வாமென்றநெய்தனிலேகொண்டாயாஞல்
வல்லதொருவியாதியெல்லாம்பறக்கும்பாரே. (௩அகூ)

பாவொன்றதுருசுமொருபலந்தான்வாங்கி
பணிநீரைப்பீங்கானில்விடுத்துக்கொண்டு
வேவொன்றதுருசதனையதனில்விட்டு
வெய்யலிலேவைத்தெடுப்பாய்மூன்றுநாளும்
சாவொன்றமரக்கொடியையதனிற்சுற்றிச்
சார்வாகநாள்மூன்றுவரியில்வைத்து

காசொன்றசுண்ணாம்புசீலைசெய்து
கருத்துடனேமண்சீலையிரண்டுசெய்யே. (ருகூ௰)

செய்தபின்புரவிதனிலேயுலர்த்திக்கொண்டு
சிறப்பானதைத்தெருவிற்புடத்தைப்போடு
எய்திடுவாயக்கினமதுதவளம்போலா
மென்செய்மேவன்மஞ்சளுக்குஞ்சிவந்துகாட்டு
கொய்திடுவாய்ண்டத்தின்வெண்கருதானப்பா
குறிப்பாகக்காற்படிநீர்பிஞ்சுகாணில்வாங்கி
மெய்திடுவாய்சூடனதுகளஞ்சுபொடிசெய்து
விதமானகருவிலிடச்செயநீராச்சே (ருகூக)

ஆச்சென்றசெயநீராற்சுன்னமாட்டி
யழகாகபில்லைசெய்துரவியிற்போடு
காச்சென்றவதனீரமுலர்த்தபின்பு
கருவானவோட்டில்வைத்துமேலேமூடி
நீச்சென்றசீலைமண்மூன்றுசெய்து
நிலையாகக்காடையென்றபுடமேபோடு
வாச்சென்றசுன்னமதுபழுதாறுது
வல்லதொருதங்கச்செந்தூரங்கூட்டே. (ருகூஉ)

கூட்டுவாய்ரசக்குடகரியிலிட்டுக்
குளிர்ந்ததொருகூடமதுமஞ்சாடிபோடு
நாட்டுவாயதன்வயதேழனையேயாகும்
நலமானசூதவித்தையெளிதோமெத்த
ஆட்டுவாய்வாலையைநீபூசைசெய்து
யருந்தேனிலவற்றைமஞ்சாடிகொள்ள
ஓட்டுவாய்சூட்டிறெடுவாய்வும்போகும்
வுற்றதொருபித்தமதிற்பாண்டுபோமே, (ருகூரு)

போமென்றவிந்துவதுகற்போலாகும்
புகழானநாதிரையுமாறிப்போகும்
ஆமென்றதுருசதனிற்பலமேதூக்கி
யாச்சரியக்குடிவொட்டிப்பாலையூட்டி
நாமென்றவனவிளஞ்சூடாய்வாட்டி
நல்லதொருமருந்தைமூன்றுநாள்வைத்து

வேமென்றநாளையிலே துணியைச்சுற்றி
    விதமானசீலையொன்றுசெய்துலர்த்தே. (௩௯௪)

## துருசுசுன்னம்.

உலர்த்தியேயிரண்டெருவிற்புடத்தைப்போடு
    வுற்றதொருசுன்னமதுபருத்திப்போலாம்
நிலத்திலேசுன்னமதைக்கல்வத்திட்டு
    நலமானகன்னிநீர்விட்டுவாட்டி
பிலத்திலேபில்லைசெய்துபுடத்தைப்போடு
    பிசகாமல்வீரமதுபலந்தான்றூக்கி
சலத்திலேயண்டவெள்ளைச்சலமேவாங்கித்
    தப்பாமற்கல்வத்திலிட்டுவாட்டே. (௩௯௫)

ஆட்டியேபில்லைசெய்துபுடத்திற்போடு
    வாச்சரியந்துருசினதுபோக்குமெத்த
நாட்டியேதாம்பரத்தையுருக்கிக்கொண்டு
    நலமானசுன்னமதுபத்துக்கொன்றீ
நீட்டியேயதன்வயதெட்டடையேயாகும்
    நிலையானசுன்னமதைப்பதனம்பண்ணு
காட்டியேவிடுமுன்னேநோய்கள்தீரும்
    கற்பமாய்க்கொண்டாக்காற்சித்தியாமே. (௩௯௬)

## வெள்வங்கச்சுன்னம்.

சித்தியாம்வெள்வங்கத்தகடுதட்டி
    சிறந்ததொருவெண்ணெச்சியரைத்துக்கட்டி
பத்தியாய்பத்தெருவிற்புடத்தைப்போடு
    பாருமென்றசுன்னமதுதவளம்போலாம்
வெற்றியாஞ்சுன்னமிடைவீரம்பூரம்
    விளைந்துகன்னிநீரினிலேதுருசுசேர்த்து
முத்தியாய்மூன்றுநாளுறவைத்து
    முன்மருந்தில்விட்டரைத்துக்கவசங்கட்டே (௩௯௭)

கட்டுவாய்சீலைசெய்துவெருத்தான்மூன்று
    கருவானபுடம்போடச்சுன்னமாகும்
இட்டுவாய்மருபடியுமண்டநீரா
    யிதமாகவாட்டிபுடமிரண்டுபோட்டு

வெட்டுவாய்மூடுமட்டாகசன்னஞ்சுன்னம்
  வேகமதுமெத்தவப்பாவாருஞ்சொல்லார்
ஒட்டுவாய்தாம்பரத்திலுடனேயீந்தால்
  வுடன்சுருக்குவயதுவெட்டையாங்காணே. (ருசுஅ)

காணப்பாபசலியிலேவங்கத்துக்காங்
  கருவானதங்கமதுபலந்தான்வாங்கி
தோணப்பாவெற்றிலேபோற்றகடாய்த்தட்டி
  துடியானபனிதாங்கியிலேயைக்கொண்டு
நீணப்பாவறைத்துநீதகட்டுக்கப்பி
  நெடிதானவன்பதெருபுடத்தைப்போட்டு
பூணப்பாதங்கமதுபொடிந்துநீறும்
  புகழானசுன்னமதையெடுத்துக்கொள்ளே. (ருசுசு)

கொள்ளுவாயிரதமதிற்கொடுத்தாயானாற்
  கொழுகியேயிழுக்குமட்டாவயதைந்தாறுய்
உள்ளுவாய்சுன்னமதைத்தேனிற்கொள்ள
  வுருதியாய்த்தங்கமதுவுருகிநிற்கும்
நள்ளுவாய்வியாதியெல்லாமாண்டுபோகும்
  நாதவிந்துமுடனேதான்கட்டிப்போகும்
தெள்ளுவாயநாதிரையுந்தேய்ந்துபோகும்
  திறமானசுன்னமதுமண்டலந்தான்தின்னே. (சா)

## தாம்பரபற்பம்.

தின்னுவாய்தாம்பரத்தைதகடாய்தட்டித்
  திறமானவிருள்ளிச்சாற்றிற்போடு
உண்ணுவாய்மூன்றுநாளெடுத்துக்கொண்டு
  வுப்புவெள்ளைக்குன்றுமூத்துமண்டவோடும்
துண்ணுவாய்கர்ப்பூரம்வீரஞ்சேர்த்து
  துடியானவாய்நீராலாட்டிக்கொண்டு
பண்ணுவாய்தகட்டினிலேவயிரம்போடு
  பதமானசீலைசெய்துகெசப்புடத்திற்போடே. (சாக)

போடுவாயதையெடுக்கச்சுன்னமாகும்
புகழானசுன்னமதைநெய்யிற்கொள்ள
பாடுவாய்சூட்டமொடுகிரொந்திபோகும்
பதிக்குள்ளமேகமொடுகுன்மந்தீரும்
கூடுவாய்தேகமதுவிருகிஇறுகுங்
குறியாகப்பத்தியமண்டலமேகொள்ளு
நாடுவாய்ப்பணவிடைகால்வீதங்கொள்ள
நாடாமற்போகுமடாநோய்கள்தானே. (௬௱௨)

போமென்றசெம்பினைப்பொடியைவாங்கி
புகழாகச்சுத்திசெய்துகுகையிலிட்டு
வாமென்றவண்டவோட்டைநொறுக்கிக்கொண்டு
வண்மையுடன்கீழமேலாயிட்டுவைத்து
வேமென்றசித்தடியின்சாரத்தையூட்டி
வேகமதாயுலைதனிலேசாமமூது
நாமென்றசுன்னமதுதவளம்போலாம்
நவிலுசயரோகமுநெஞ்சடைப்பும்போமே. (௬௱௩)

போமப்பாபொருமலொடுநீர்கட்டுப்போம்
பொல்லாதநோய்களெல்லாம்பிரிந்துபோகும்
ஆமப்பாவெண்கலமோர்பலந்தான்வாங்கி
யப்பனேயுருகியதுவாடும்போது
வாமப்பாவவரைப்பொடிதான்பலமேயீந்து
வல்லதொருதேட்கொடுக்குசலத்தையூற்று
வேமப்பாவெண்கலமுநொருங்கிக்காணும்
விதமானமூன்றுப்பாற்புடமொன்றுதீரே. (௬௱௪)

தீரொன்றபுடமொன்றதானபின்பு
திறமானகலவத்தில்நொருக்கிக்கொண்டு
பாரொன்றகெந்திலிங்கம்வீரம்பூரம்
பரிவானதுருசுசிலைரசமுங்கூட்டி
காரொன்றவகைக்குக்காற்பலந்தான்தூக்கி
கல்வத்திலிட்டுபழச்சாற்றாலாட்டி
கூரொன்றபில்லைசெய்துவோட்டில்வைத்துக்
குறிப்பாகச்சீலைமண்மூன்றுசெய்யே. (௬௱௫)

செய்யடாவுலர்ந்தபின்புகெசப்புடமேபோடு
திறமானசெந்தூரமதுவேயாகும்
மெய்யடாநவலோகச்செந்தூரமெல்லாம்
மிஞ்சாதேயேழுபுடந்தீருதீரு
கையடாசெந்தூரம்நெய்யிற்கொள்ளக்
கனலெழுந்துவாய்விஞெடுபித்தம்போகும்
வையடாபணவிடைதான்குன்மத்திற்கு
வலுவானமேகமெல்லாமாளும்பாரே. (சாகூ)

பாரப்பாநாகமதுபலந்தான்வாங்கிப்
பண்பானவிரதமதுபலமேதூக்கி
நேரப்பாவெள்ளங்கம்பலமைந்துகொண்டு
நேர்புடனேநாகமதையுருக்கிக்கொண்டு
சாரப்பாவிதுப்பெண்ணெயதனில்விட்டுச்
சாய்த்துவிடுவேழெட்டுதிரந்தான்கேளு
வாரப்பாபாரையுப்புச்சாற்றிஞலே
வல்லவனேயறைத்துநாகத்திற்பூசே. (சாள)

பூசியேமூன்றுபுடமதனிற்றீர்த்துப்
புகழானகரிப்பானையில்மூன்றுபுடந்தீரு
வாசியேசெருப்படையில்மூன்றுதிரு
வலுவானவேளையிலேயொண்டுதீரு
மூசியேகண்ணேழுமடைந்துபோகும்
மூழியானநாகமதுகட்டிப்போகும்
ஆசியேயவ்விடைக்குத்தங்கஞ்சேர்த்து
வாச்சரியமிரண்டுமொன்ருயுருக்கிக்கொள்ளே. (சாஅ)

கொள்ளுவாய்முன்னிதைந்துசுத்திசெய்து
கூடவிட்டுவுருக்கியேமூன்றுஞ்சேரு
அள்ளுவாய்வங்கமதையுருக்கிக்கொண்டு
வாச்சரியகெவுரிவெள்ளையந்திலொன்று
நள்ளுவாய்சேர்த்துருக்கிமுன்மருந்துசேரு
நலமானவைந்துமொன்ருயுருக்கிக்கொண்டு
விள்ளுவாய்பசலியிலேயெருக்கம்பழுப்பு
வினாவாகச்சேர்த்தரைத்துக்கவசங்கட்டே. (சாகூ)

கட்டியேகெசப்புடந்தான்மூன்றுபோடு
　　கருவானகட்டியதுகற்போலாகும்
வெட்டியேதுருசோடுவிராலியிலையறைத்து
　　விதமானபுடமொன்றுதீருதீரு
ஓட்டியேவறைப்பொடியுமெரிமாம்பட்டை
　　வுறவாகவிரண்டுமொன்றாயிடித்துக்கொண்டு
தட்டியேயிவையிரண்டுங்கூட்டிக்கொண்டு
　　தயவாகவுள்வைத்துப்பொரிகாம்போடே. (சாய)

போட்டபின்புசீலைமண்தானேழுஞ்செய்து
　　புகழானகுகைதனிலேயுருகவூது
மூட்டவேகுகைதனிலேகிட்டம்பாய
　　முழக்கம்தாய்ச்சாகுமதுவூதிவாங்கு
நாட்டவேகல்வத்தில்நொருக்கிக்கொண்டு
　　நலமானகெந்திரசம்லிங்கம்பூரம்
கூட்டவேதுருசுசிலைவீரமேழுங்
　　குறிப்பாகவகைக்குக்காற்பலமேதூக்கே. (சகக)

தூக்கியேயதனுடனேசேர்த்துக்கொண்டு
　　சுகமானபழச்சாற்றையிட்டுவாட்டி
நோக்கியேயொருசாமமாட்டிவாங்கி
　　நுணுக்கமாய்பில்லைசெய்துவோட்டில்வைத்து
வாக்கியேமண்மூன்றுசெய்துக்கொண்டு
　　வலமானவராகபுடமேழுதீரு
தாக்கியேயெடுத்துப்பார்செந்தூரமாகும்
　　சார்வாகநெய்தேனிற்பணவிடைதான்கொள்ளே. (சகஉ)

கொள்ளவேமேகமுடன்வாய்வும்போகும்
　　கொடிதானகுன்மமூட்டன்சூலைபோகும்
விள்ளவேதாம்பரத்திறபத்துக்கொன்று
　　விதமாகவீந்திடிலெட்டனாயுமாகும்
நள்ளவேவளையலுப்புகெந்தியுப்பு
　　நலமானபாறையுப்புகரியுப்போடு
உள்ளவேயிந்துப்புவாகவைந்தும்
　　வுறவாகச்சமவிடையாய்த்தூக்கிக்கொள்ளே. (சகங)

கொள்ளுமென்றவுப்பைபெல்லாங்கல்வத்திட்டு
கூறுகின்றதாணிச்சார்விட்டுவாட்டி
நள்ளுமென்றகலயத்திலடக்கிக்கொண்டு
நற்சீலைசெய்துகெஜப்புடத்திற்போடு
விள்ளுமென்றநீர்முள்ளிச்சாற்றாலாட்டி
வினைவாகமுன்போலப்புடத்தைப்போடு
அள்ளுமென்றமேனிச்சார்தன்னாலாட்டி
வாவலுடன்முன்புடம்போலொன்றுதீரே. (௪௧௪)

தீரென்றவுப்பதுவும்பற்பம்போலரம்
திறமானவுப்பதனைப்பதனம்பண்ணு
கூறொன்றநாயுருவிச்சாம்பல்வாங்கிக்
குறியானதண்ணீரிற்கரைத்துப்போடு
வீரொன்றசாமமதுநான்குசென்று
விதமானதெளுவிருத்துக்காச்சிக்கொண்டாற்
சேரொன்றவுப்பதுவும்வெளுத்துக்காணுஞ்
சிறப்பானவுப்பெடுத்துவைத்திடாயே. (௪௧௫)

வைத்திடுவாய்பாலின்வெள்ளைப்பாஷாணந்தான்
வளமாகப்பலமைந்துதூக்கிக்கொண்டு
மொய்த்திடுவாய்சவுககாரம்பலமொன்றேகால்
முறையானவுப்புவைந்துபலந்தான்சேர்த்து
மெய்த்திடுவாய்கொடிக்கள்ளிச்சாறுதன்னால்
விதமானகல்வத்திற்சாமமாட்டிக்
கைத்திடுவாய்த்திரிதிரியாய்த்திரித்துக்கொண்டு
கருவாரவைவாத்துமணற்கொண்டுவாயே. (௪௧௬)

கொண்டுவந்தமணலதனையோட்டில்வைத்துக்
கொடிதானதிரியதனையதனிற்போட்டு
விண்டுமேதைரவியில்ரெண்டுசாமம்வைத்து
விதமாகக்காய்ந்தபிறகெடுத்துக்கொண்டு
ட்ண்டுவந்ததிருகுகள்ளிப்பயத்தங்காய்க்கள்ளி
பரிவானமான்செவியுமெருக்குங்கூட்டி
தண்டுவுத்தாமணியிஞெடுயிந்துவுந்தான்
தப்பாமற்சரியிடையாயிடித்துவாங்கே. (௪௧௭)

ஓங்குவாய்தாம்பரத்தின் தவலையப்பா
 வளமாகவதிற்பாதிகீழேயிட்டு
ஓங்கியதன்வாயதற்குத்துணியுங்கட்டி
 யோதடுப்புக்கரிபரப்பியதன்மேற்கேளு
தாங்குவாய்நெருப்பதனை விசறிக்கொண்டு
 தப்பாமற்றிரியையெல்லாமதன்மேல்வைத்து
நீங்குவாய்திரிமூடவுப்பைத்தூவி
 நிலையானகரிமூடிப்பொட்டணமாய்க்கட்டே. (சகஅ)

கட்டியேமுன்தவலைமருந்தில்வைத்துக்
 கள்ளியிடித்திரும்பதுவுமதன்மேல்வைத்து
கெட்டியேதவலைவாய்க்கோடிமூடிக்
 கெடியானசீலையதுவேழுசெய்து
ஓட்டியேயோர்சாமந்தானெரித்து
 வுருதியாயதையெடுத்துவூறவைத்து
தட்டியேவாய்திறந்துபார்க்கும்போது
 சார்வானபாஷாணமெழுகுமாமே. (சகக)

ஆமப்பாமெழுகதனைத்தாம்பரத்தி
 லழகாகப்பத்துக்கொன்றீந்தாயானால்
வேமப்பாவெள்ளியதெட்டையுமாகும்
 விதமாகவூதினற்சுத்தமாகும்
நாமப்பாவயற்றுவலிகுன்மத்துக்கெல்லாம்
 நலமாகமிளகளவுயீந்தால்வாங்கும்
தேமப்பாதிசைவாய்வுவடங்கிநிற்குந்
 திரோட்கியென்றகட்டியெல்லாந்தீருந்தானே. (சஉ0)

தானென்றலிங்கமதுபலந்தானப்பா
 சார்வானகெந்தியொடுபலகைச்சூடன்
வேனென்றவிரண்டுமொன்றாயிடித்துக்கொண்டு
 விதமானபொடியதனைக்கீழேவைத்து
வானென்றலிங்கமதைமேலேவைத்து
 வளமானதிரிகொளுத்திவைத்துப்பாரு
நானென்றகட்டிதனைப்பிரட்டிவேனா
 நலமாகமறுபடியுங்கொளுத்திப்போடே. (சஉக)

போடுவாய்நாலுபக்கம்பிரட்டிசுட்டு
புகழாகவேழுதரமிப்படியேபோட்டு
வாடுவாய்கட்டியதுவலுவாய்க்காணும்
வளமானசெவ்வங்கைப்பாலைவாங்கி
சாடுவாய்சட்டிக்கிச்சுருக்குதாக்கு
சாமமொன்றுவானபின்புகட்டியாகும்
நாடுவாய்லிங்கமதுகட்டிப்போச்சு
நலமானதுய்யானில்பத்துக்கொன்றீயே. (௬௨௨)

ஈந்திடவேவயதுதானூற்தாகு
மேதமுறுஞ்சன்னிசுரமகன்றுப்போகும்
பாய்ந்திடவேநெஞ்சடைப்புக்கபமும்போகும்
பதமாகலிங்கமொருபலந்தான்வாங்கி
வாய்ந்திடவேபஸ்தாளிப்பழத்தைக்கொண்டு
வண்மையுள்ளமூங்கிலிலேபரணிவாங்கிச்
சாய்ந்திடவேபழத்திலிந்தபொடியைப்போட்டுக்
சார்வாகப்பிசைந்துபடிச்சாருவாங்கே. (௬௨௩)

வாங்கியேகல்வத்திற்சுருக்குதாக்க
வஞ்சாமநான்கதனிற்கல்லைப்போலாம்
ஓங்கியதுய்யானிற்பத்துக்கொன்றிய
வுறைத்ததடாவயசுமொருவேழதாகும்
தாங்கியேசன்னிசுரமோடிப்போகுஞ்
சார்வானவாய்வோடுபொருமல்தீரும்
நீங்கியேலிங்கமொருபலமேவாங்கி
நிலையானவாநீரிலட்டக்கஞ்செய்யே. (௬௨௪)

செய்திடவேகலசத்திற்பதனம்பண்ணிச்
செயமானவோடுகொண்டுவோடுமூடி
எய்திடவேசீலைமண்ணுமூன்றுசெய்து
யிதமானவராகபுடம்போட்டுக்கொள்ளு
மொய்திடவேபுடமூன்றிற்கட்டிப்போச்சு
வுற்றதுய்யானிற்பத்துக்கொன்றிய
மெய்திடவேவயதொருவேழனாதாகும்
மிக்கவொருவியாதியெல்லாந்தீருங்காணே. (௬௨௫)

காணப்பாமண்டலமேயுள்ளேகொண்டாற்
கருவானரோமம்போய்மொட்டையாகும்
தோணப்பாபாஷாணம்பலந்தான்வாங்கித்
தூடியானவீரம்பூரம்நவாசாரங்கூட்டி
பூணப்பாமனேசிலையும்வெடியுப்புந்தான்
புகழானமிதிப்பாகற்சாற்றாலாட்டி
நாணப்பாபாஷாணக்கட்டிவாங்கி
நலமாகப்பச்சரிசிப்பாலையூட்டே (௬௨௬)

ஊட்டுவாயேழுதாமூட்டிவாட்டி
யுருதியாய்முன்மருந்தைக்கவசங்கட்டி
நாட்டுவாய்கறியுப்பைப்பொடியேசெய்து
நலமானகல்வமொன்றிற்பாதியிட்டு
மூட்டுவாய்மருந்தைவைத்துவுப்பைமூடி
முழக்கமுள்ளசீலைமண்மூன்றுசெய்து
காட்டுவாய்குக்கிடத்திற்போட்டுவாங்கிக்
காருவாகவைந்தாறுதரமேபோடே. ௬௨௭

போடுவாய்பாஷாணங்கட்டிப்போகும்
புகழானசெம்பரக்குச்சாருமாகும்
நாடுவாய்சன்னிசுரதோஷம்போகும்
நலமானபாஷாணக்கட்டியொன்றுவாங்கி
சாடுவாய்சுண்ணாம்புக்கல்லைக்கொண்டே
சரியானகலயத்திற்பாதியிட்டு
மூடுவாய்மருந்திட்டுவதன்மேல்மூடி
முழக்கமுள்ளப்பனங்கள்ளுவார்த்துமூடே. (௬௨௮)

மூடப்பாமூன்றுதரஞ்சுத்திபண்ணு
முன்வுப்புபற்பங்களைத்துக்கவசங்கட்டி
நாடப்பாகேசரிமண்டைக்குண்வைத்து
நலமானசீலைமண்மூன்றுசெய்து
ஊடப்பாகெஜப்புடத்திற்போடுபோடு
வுறுதியாய்க்கட்டுமடாபாஷாணந்தான்
ஆடப்பாசெப்புக்குப்பத்தொன்றீந்தா
லழியாதவெள்ளியடாவெட்டாயுமாச்சே. (௬௨௯)

ஆச்சுதென்றபாஷாணஞ்சுரஜன்னிகேட்கு
மதுசுருக்குப்பிராயிலையிலனாத்துப்போடு
வாச்சுதென்றவைந்தாறுபுடத்திலப்பா
வனுவாகக்கட்டியதுகற்போலாகும்
சாச்சுதென்றசெம்பினுக்குவைந்தாருகுஞ்
சல்தியிலேஜன்னிசுரந்தானேபோகும்
வீச்சுதென்றவளையனுப்புபலந்தானேந்து
விதமானநவாச்சாரம்பலந்தானென்றே. (சௗ௰)

ஒன்றானகலயத்திலுப்பைமுக்காலிட்டு
வுறுதியாய்நவாசாரக்கட்டிவைத்து
நன்றானவுப்பிட்டுப்புளியஞ்சாம்பலிட்டு
நலமாகக்கூறுகொண்டுமண்மூன்றுசெய்து
வென்றானவடுப்பேற்றியிரண்டுசாமம்
வேகமதாயெரிக்கவுந்தான்கட்டியாகும்
அன்றானவெள்ளியிலேகொடுத்தாயானு
லந்தாறுவயசதற்குவாகும்பாரே. (சௗக)

ஆகுமென்றகருக்கரசஞ்சுத்தமாகும்
மாச்சரியத்தேங்காயின்சலத்தைப்போக்கி
வேகுமென்றபாஷாணம்பலந்தானுள்ளே
விறைவாகப்பொடித்துநீபோடும்பாடு
சாகுமென்றவெள்வங்கம்பலந்தானேந்து
சாதகமாயுருக்கியதையுள்ளேவிட்டு
வாகுமென்றதேங்காய்க்குமூளையைத்தாக்கி
வல்லதொருசீலையதுமூன்றுசெய்யே. (சௗ௨)

செய்திடுவாய்கெஜபுடத்திற்போட்டுவாங்கிச்
செயமாகவங்கமனைவாசிமட்டும்
உய்திடுவாய்கொடிவேலிசாத்திற்றானு
முருக்கியேமூன்றுதரஞ்சாய்ப்பாயப்பா
னய்திடுவாய்ப்பண்ணியின்பால்விட்டுருக்க
வினமானதங்கமதுகட்டிப்போகும்

நைதிடுவாய்த்தாளகமோர்பலந்தான்வாங்கிக்
கருவானபச்சிலையின்சாற்றாலாட்டே. (௪௩௩)

## வெள்வங்கக்கட்டு.

போட்டிடவேசாமமொருநான்குமானாற்
புகழானவெள்வங்கங்குழித்துக்கொண்டு
நாட்டிடுவாய்ககட்டியைநீயுள்ளேவைத்து
நலமாகமேன்மூடியதனான்மூடி
ஆட்டிடவேசலங்கைமணற்கொண்டுவந்து
வரைப்பானேமணலிட்டுமருந்தைவைத்து
மூட்டிடவேமண்மூடிமண்மூன்றுசெய்து
முழக்கமாய்யெரித்திடுவாய்நான்குசாமமாமே. (௪௩௪)

நாலானசாமமதிலாறவைத்து
நலமாகத்திறந்துபார்கட்டிப்போகும்
மேலானவங்கமதுவெட்டையாச்சு
வெகுசுருக்குச்செம்பினுக்கைந்தாறுமாகும்
ஏலானதாளகஞ்சன்னிசுரமுங்கேட்கும்
பீனிசமொடுவிருமல்சயரோகந்தீரும்
செயலானதாளகமண்டவோட்டில்வைத்துச்
சிறப்பானவண்டவோடுபொடித்திடாயே. (௪௩௫)

பொடித்துநீசெருப்படையின்சாற்றாலாட்டிப்
புகழானகட்டியதிற்பொடித்துவைத்து
தொடுத்துநீசுண்ணாம்புக்கல்லால்மூடித்
துடியாகச்சீலைமண்தான்மூன்றுசெய்து
அடுத்துநீகெஜப்புடத்திற்போட்டால்நீறு
மதிசுருக்குச்சயரோகமீளைகாசம்
அடுத்தங்குமில்லாதேசுரங்கள்தோஷ
மாறுதவிஷங்களெல்லாமாறுந்தானே. (௪௩௬)

தானென்றரசமதைமஞ்சட்கல்லிற்
றாக்கியேவரைத்தரைத்துக்கழுவிக்கொண்டு
வேனென்றமூன்றுவிசைசுத்திசெய்து
வெகுசுருக்காய்க்காண்டியிலேயதைவிடுத்து

நானென்றதிரிகொளுத்திக்கீழேவைத்து
　நலமானமூயிரண்டச்சாருவாங்கி
கானென்றசாமமட்டுஞ்சுருக்குத்தாக்க
　கனசுருக்குமணியதுவாய்க்கட்டிப்போமே. (சஙஎ)

போமென்றகருவூமத்தன்காய்க்குள்வைத்துப்
　புகழானபுடம்பத்துநிருநிரு
ஆமென்றவெலுமிச்சம்பழத்துண்வைத்து
　வதிசுருக்காய்புடம்பத்துதீர்த்துக்கொண்டு
வேமென்றமாம்பட்டைவேரரைத்து
　விதமானபுடம்பத்துபோட்டுக்கொள்ளு
நாமென்றவாழைவேரரைத்துக்கட்டி
　நலமானபுடம்பத்துதீர்த்துப்பாரே. (சஙஅ)

பாரப்பாவெள்வங்கமுருக்கிக்கொண்டு
　பதமாகமணிபோட்டால்நீராவாங்கும்
நேர்ப்பாசாராயப்பாலுமூண்ணும்
　நெடிதானமணிதனையுமரையிற்கட்டு
சீரப்பாவிந்துவதுவிழாதப்பா
　சிவயோகத்தவநிலைக்குஞ்செய்துக்கொள்ளு
கூரப்பாவீரமொருபலந்தான்வாங்கிக்
　கொடிதானவேலியிலைச்சாருவாங்கே. (சஙகூ)

வாங்கியேயொருசாமஞ்சுருக்குத்தாக்க
　வளவீரங்கட்டியதுமெழுகுபோலாம்
ஏங்கியேயலையாதேசெம்பிலீந்தால்
　யேழரையுமாகுமடாவயசுதானும்
நீங்கியேபோகுமடாகிரெந்திகுஷ்டம்
　நிலையானவாய்வோடுஞ்சூலைகுன்மம்
ஓங்கியேவியாதிகட்குவெந்தயம்போலீந்தால்
　வுத்தமனேயிம்மருந்தாலோடுங்காணே. (சசய)

காணப்பாநாகமதுகட்டிவாங்கிக்
　கருவானவரைப்பொடிதான்சமனுய்ச்சேர்த்து

பூணப்பாவிரண்டுமொன்றாய்க்குகைபில்வைத்துப்
புகழானதேன்வழங்கிக்கூடுசேர்த்து
தோணப்பாபொரிகாரங்கூடச்சேர்த்து
துலங்கவேமண்செய்துவுலையிலூதே
நாமப்பாசாமமதுவூதினக்கால்
நலமாகவிரண்டுமொன்றாய்க்கட்டிப்போமே. (௪௪௧)

போச்சுதென்றசெம்பதனிற்பத்தொன்றீயப்
புகழானவயசத்தான்பத்தரையுமாகும்
ஆச்சுதென்றசுறியுப்புகல்லினுப்பு
மழகானவிந்துப்புஞ்சமனாய்க்கூட்டி
வாச்சுதென்றவெருக்கன்பால்விட்டுவாட்டி
மைந்தனேவராகபுடம்போட்டாற்கட்டும்
சாச்சுதென்றகள்ளிப்பால்விட்டுவாட்டிச்
சரியாகமுன்போலேபுடத்தைப்போடே. (௪௪௨)

போடுவாய்திருகுகள்ளிப்பாலாலாட்டிப்
புகழாகமுன்போற்புடமொன்றுதீரு
சாடுவாயுப்பதுவுங்கற்போலாகுஞ்
சலியாதகற்பபத்தியத்திற்காகும்
நாடுவாய்வயற்றுவலிகுன்மமோடும்
நலியானபொருமலெல்லாம்வாங்கிப்போகும்
தேடுவாய்கல்லுப்பும்வெடியுப்பப்பா
திறமானயிந்துப்புவுருப்புத்தானே. (௪௪௩)

தானனகறியுப்போடைந்துஞ்சேர்த்து
சமனாகவிடைதிருத்துக்கல்வத்திட்டு
நானனகோட்டையான்சாற்றாலாட்டி
நலமானபுடமூன்றுதீர்த்துப்போடு
வேனனகரிப்பானையில்மூன்றுதீரு
விதமானசெருப்படையில்மூன்றுதீரு
வானனமேனியிலேமூன்றுபோடு
வள்ளியிலேச்சாற்றினிலேமூன்றுதீரே. (௪௪௪)

தீரப்பாபுண்ணுக்கினிலையில்மூன்று
தீர்த்துவிடுபதினெட்டுபுடமுமாச்சு
காரப்பாபனவெல்லமதிற்பணவிடைதானீயக்
கனவாய்வுகுன்மமொடுபொருமல்வாய்வும்
தீரப்பாநெஞ்சடைப்புவாய்வுமூர்ச்சைத்
தீராதவாம்வெல்லாந்தீர்ந்துபோகும்
மாரப்பாகல்லுப்புதுத்தியிலையிற்கட்டி
வண்ணியபுடனிரண்டுமொன்றாய்க்கல்வத்தாட்டே. ()

ஆட்டுவாய்மரக்கருக்குபெருக்கிக்கொண்டுமண்ணு
மழகானபீங்கானுங்கோணிதட்டு
மாட்டுவாய்கல்வத்திலாட்டிக்கொண்டு
வளமானகுகைபிடித்துவுலர்த்திக்கொள்ளே
மூட்டுவாய்முன்மருந்தையதற்குள்வைத்து
முறையாகச்சீலைமண்தான்மூன்றுசெய்து
ஓட்டுவாயொருசாமமுலையில்வைத்து
ஊதியேசிலத்தினிலேசாய்ப்பாய்காணே. (சசசு)

காணப்பாசரிகைவெள்ளிபோலேகாணுங்
கனமென்றவுப்பதனைப்பதனம்பண்ணு
தோணப்பாவிந்தையதுசெப்பவென்றால்
துலக்கமுள்ளகருவதுவுஞ்செப்பக்கேளு
பூணப்பாபல்விகொட்டையடுக்குக்கல்தான்
புகழாகநானுபடிவாங்கிவந்து
நீணப்பாகள்ளிகரிபோட்டுச்சுட்டு
நிலையானபாண்டமதில்நீத்திக்கொள்ளே (சசஎ)

கொள்ளுவாயுவருப்பைக்கரைத்துவைத்துக்
குரியானதெளுவெடுத்துநீத்திக்கொள்ளு
விள்ளுவாய்பாக்குநீர்தனிற்கரைத்து
விதமானரவிதனிலேசாமம்வைத்து
நள்ளுவாய்மறுநாளிலிருந்துக்காச்ச
நலமானவுப்பதுவுந்தவளம்போலாம்
தெள்ளுவாயுப்பதனைக்கல்வத்திட்டுத்
திறமானவீரமுடன்சீனமாமே. (சசஅ)

ஆமென்றபூரமுடன்புழுகுசேர்த்து
வாச்சரியச்சவ்வாதுங்கூடச்சேர்த்து
நாமென்றவுப்பிலுக்குநாலுக்கொன்று
நலமாகவொவ்வொன்றுங்கல்வத்திட்டு
வேமென்றவெள்ளெருக்கம்பாலாலாட்டி
விறைவாகபில்லைசெய்துவுலர்த்திக்கொண்டு
ஓமென்றவோட்டில்வைத்துமண்மூன்றுசெய்து
வுறவாக்கிக்குக்கிடத்திற்புடமேபோடே. (௪௪௯)

போடுவாய்கத்தாழைச்சாற்றிற்புடமொன்று
புகழான இருகுகள்ளியிற்றானென்று
நாடுவாய்புடமூன்றுபோட்டாயானால்
நல்லதொருகற்பமதுதவளம்போலாம்
ஆடுவாய்தொட்டிதைப்பற்பத்துக்கெல்லா
மழகானசாக்குநவலோகத்திற்கும்
கூடுவாய்க்குன்றமணிபோலத்தொட்டாற்
கூச்சலிட்டுநீறுமடாவெல்லாந்தானே. (௪௫௦)

தானென்றபற்பமதுவில்லாவிட்டால்
தானீறமாட்டாதுசாக்குயாவும்
வேனென்றசெந்தூரமதற்குக்கேளு
விதமானஜெயநீருமுப்பும்வேண்டும்
நானென்றவெடியுப்புவெட்டாங்காச்சல்
நல்வீரசவுக்காரம்நவாச்சாரம்சீனம
வானென்றவுப்புக்குநாலிலொன்று
வகைவகையாய்த்தூக்கியதையொன்றாய்ச்சேரே. (௪௫௧)

சேரொன்றேன்கல்வத்திலிட்டுவாட்டித்
திறமானபில்லைசெய்துபீங்கானிலப்பு
சாரொன்றேன்சாற்காலமிரவுதன்னிற்
சாதகமாயப்பனிதனிலேசாய்த்துவைநீ
கூரொன்றேன்ஜெயநீர்தான்குளிர்ந்தாற்றங்குங்
கொடிதானஜெயநீர்ச்சீசாவிலிட்டுப்
பாரொன்றசெந்தூரவகைகட்கெல்லாம்
பணவிடைதான்விட்டரைக்கச்சிவக்குமாமே, (௪௫௨)

ஆமென்றகட்டினத்தைச்சொல்லக்கேளு
வாச்சரியவேரண்டகேசரியின்மண்டை
நாமென்றநாய்நரியின்றலையைக்கொண்டு
நலமாகரவிதனிலேயுலர்த்திக்கொண்டு
வாமென்றவுரால்தனிலேயிடித்துத்தூளாய்
வல்லதொரு கல்வத்திலிட்டுக்கொண்டு
ஓமென்றவெள்ளருகன்சாற்றாலாட்டி
வுத்தமனேயில்லைசெய்துவோட்டில்மூடே. (சருரு)

ஓட்டில்வைத்துமூடியேபமண்மூன்றுசெய்து
வுத்தமனேகெஜபுடத்திற்போட்டால்நீரும்
நாட்டியேபுடமூன்றுந்தீர்த்துக்கொண்டு
நலமானபற்பதத்தைப்பதனம்பண்ணு
கூட்டியேசரக்கெல்லாம்வாய்நீராற்பிரட்டிக்
குறியானகெஜபுடத்திற்கட்டிப்போகும்
ஆட்டியேயிம்மூலமறியாவிட்டா
ல்திசுருக்கிற்கட்டினமும்வாயாதென்னே (சசுச)

என்னவேதாம்பரத்தைத்தகடாயத்தட்டி
வியலானநீலவளைச்சம்பழத்தாலாட்டி
உன்னவேயதுபொதிந்துவோட்டில்வைத்து
வுறவானசீலைசெய்துகெசப்புடமேபோடு
அன்னவேபுடமூன்றும்போட்டாயாகு
லழகானதாம்பரந்தான்சுத்தியாகும்
மின்னவேதாம்பரத்தையுருக்கிக்கொண்டு
விதமானவெள்ளெருக்கின்தயிலம்வாரே. (சருரு)

வாரப்பாவாறேழுதரமேவார்த்தால்
மகத்தானதாம்பரந்தான்சுத்தியாகும்
நீரப்பாமலைக்கோவையிலையின்சாற்றை
நிலையாகமுன்போலக்கொடுக்கச்சுத்தி
சேரப்பாவிருள்ளிவெள்ளைதன்னிற்
சிறப்பானசாரணைச்சார்வாங்கிக்கொண்டு
ஆரப்பாதாம்பரத்திற்சுருக்குதாக்க
வதிசுருக்காய்சாமமொன்றிற்சுத்தியாச்சே. (சருசு)

ஆச்சுதடாவெடியுப்பையெருமைக்கொம்பி
லப்பனையடைத்துநீவைத்துக்கொண்டு
வாச்சுதடாகுழம்பிலைச்சாரமூந்தவிட்டு
வாய்மூடிச்சீலைமண்ணுமூன்றுசெய்து
வீச்சுதடாவெய்யலிலேயுலரவைத்து
விதமாகவுலர்ந்தபின்புயெடுத்துக்கொண்டு
சாச்சுதடாகெஜப்புடந்தான்மூன்றுபோட்டுச்
சரியானவெள்வங்கமுருக்கிக்கொள்ளே (௪௫௭)

கொள்ளவேவங்கமதிற்களஞ்சுதாக்கக்
கொடிதானவங்கமதுபற்பமாகும்
நள்ளவேபாஷாணம்பலந்தான்வாங்கி
நலமானசுண்ணாம்புக்கல்லைக்கொண்டு
விள்ளவேயோட்டில்வைத்துக்கல்லால்மூடி
விதமானநீறாவிட்டுநீத்திக்கொள்ளு
உள்ளவேவிருபத்தோர்தரந்தானீத்த
வுயர்வானபாஷாணஞ்சுத்தியாச்சே (௪௫௮)

ஆச்சப்பாபுங்கன்பாற்படிதான்கொண்டு
வழகானசட்டியிலேமணலையிட்டு
பேச்சப்பாபோண்டத்தோடுவைத்துப்
பிசகாமற்பாஷாணச்சுருக்குத்தாக்கு
சாச்சப்பாசாமம்நான்காச்சுதானுற்
சலியாதேகட்டிக்குப்புங்கங்காயும்
நீச்சப்பாவெள்ளாட்டுமூளையொண்டும்
நிசமாகச்சேர்த்தரைத்துப்புடமைந்துதீரே (௪௫௯)

தீர்ந்தவுடன்பாஷாணங்கட்டியாச்சுத்
திறமானவங்கத்திலிடைக்கிடைதான்தாக்கக்
காய்ந்ததொருவங்கமதுதவளம்போலாம்
கருவானதாம்பாத்திற்பத்துக்கொன்றீ
தோய்ந்ததொருமாற்றதுதானெட்டுக்காணுந்
துப்பானவங்கமதற்கெட்டாதப்பா
வாய்ந்ததொருநாகமதிற்சிமிள்தான்செய்து
வல்லதொருசூதமதுசுத்திபண்ணே. (௪௬௰)

பண்ணியேசியின் தனிலேபதனம்பண்ணு
  பரிவானசெங்கொட்டைமரத்தாற்சொப்புச்செய்து
கண்ணியேயதற்குள்ளேவைத்துமூடி
  கலமானமலேவேம்பால்வாயைமூடி
மண்ணியோர்மண்டலந்தான்வைத்திருந்து
  வளமாகவதையெடுக்கக்கட்டிப்போகும்
எண்ணியேதாம்பரத்துக்கொன்றுவிந்தீர்
  லெட்டதான்வயசமதுசரியாங்கேளே. (சகக)

கெந்தகத்-தயிலம்.

கேளப்பாகெந்தியதுபலந்தான்பத்து
  கெடியானகல்வத்திலிட்டுக்கொண்டு
வாளப்பாபூண்டுயிலைச்சாருவாங்கி
  வல்லதொருகெந்திக்குவிட்டுவாட்டு
நாளப்பாதினமிரண்டுசாமமட்டும்
  நலமாகநாற்பத்தியைந்துநாளும்
நீளப்பாயில்லெசெய்துநீழலிற்றான்
  னேர்பாகப்பழகினதோர்கலயம்வாங்கே. (சகஉ)

வாங்கியேவதனடியில்துவாரமைந்து
  வளமாகச்செய்துநீயில்லைதன்னை
ஓங்கியேயுள்ளிட்டுவோடிமூடி
  வுறவாகச்சீலையதுவேழுஞ்செய்து
தாங்கியேகாயவைத்துக்குழியேசெய்து
  தப்பாமற்குழியீரஞ்செய்துக்கொண்டு
நீங்கியேபழகினதோர்கலசத்திட்டு
  நிலையானபாண்டமடியுடைத்துக்கொள்ளே. (சகங)

கொள்ளடாபானையின்வாயதன்னிற்சேரு
  குணமானகெந்தகத்தின்கலசம்வைத்தும்
அள்ளடாகீழ்க்கலசந்தானும்வைத்து
  வதன்மீதுசாணமனேத்தாற்றுமணற்போட்டு
விள்ளடாகலசமதுமறையத்தானும்
  விதமானகாட்டெருவைமேலேயிட்டு

கள்ளடா நெருப்பிட்டுவேகும்போது
நலமானதயிலங்கீழிறங்குமாமே. (௪௬௪)

ஆமென்றதயிலமதுதேன்போல்வீழும்
மதையெடுத்துச்சீசாவிலடைத்துக்கொள்ளு
வாமென்றதங்கமதையுருக்கிக்கொண்டு
வல்லதொருதயிலங்காசிடையேதாக்க
வேமென்றதங்கமதுசுத்தமாகும்
வெள்ளியிலேயடித்துக்கொன்றீந்தாயானால்
நாமென்றவயசுமொருயேழுமாகும்
நல்லதொருத்தயிலமதைக்காசிடைதான்கொள்ளே. ()

## இதுவுமது-வேறு.

கொள்ளப்பாகுட்டமொடுகிரந்திசூலைக்
குறியானவெள்ளைபடத்தும்விரிவுபத்தும்
அள்ளப்பாசிரங்கினொடுதடிப்புபத்து
மண்டாமலோடிவிடுஞ்சொன்னேன்கேளு
கள்ளப்பாரஸ்தாளிப்பழத்தோல்வாங்கி
நலமாகவதனீரமுலர்த்திக்கொண்டு
விள்ளப்பாகெந்தகந்தான்பலந்தான்பத்து
விதமாகரெண்டுமொன்றாயிடித்துவாங்கே (௪௬௬)

வாங்குவாய்முன்போலகல்சத்திட்டு
வளமாகத்தயிலமதுவிறக்கிக்கொள்ளு
நீங்குவாயிரதஞ்சட்டியினில்விட்டு
நிலையானதயிலங்காசிடைதான்தாக்கு
ஓங்குவாய்நாயுருவிவேராற்கிண்ட
வுடைந்துதான்ரசமதுவுஞ்சிவந்துபோகும்
தாங்குவாய்செப்பதனிற்பத்துக்கொன்று
தாக்கடாவயசொருவேழரையுமாமே. (௪௬௭)

## கெந்தகபற்பம்.

ஆமென்றவியாதிகட்குச்செந்தூரந்தன்னி
ல்ப்பனேபணவிடைதான்கொடுக்கத்திரு
ஓமென்றசரக்கெல்லாங்கட்டிப்போகும்
வுற்றசெந்தூரந்தொட்டதெல்லாமாகும்

வாமென்றசிறுசின்னிச்சமூலமரைத்து
வல்லதொருகுகைபிடித்துவுலர்த்திக்கொண்டு
வேமென்றகுகைக்குள்ளேகெந்தியிட்டு
விதமானகுடோரியிலைச்சாருவாரே. (௪௬௮)

வார்த்துநீமண்குகையில்வைத்துமூடி
வல்லதொருசில்லிட்டுமண்மூன்றுசெய்து
பார்த்துநீகதுவாலிபுடத்தைப்போடு
பரிவானபற்பமதுவாகுமாகும்
சேர்த்துநீவியாதிகட்குநெய்தேனிலீயத்
திறமானகுட்டமெல்லாந்தீருந்தீரும்
நீத்துநீகோவையிலைத்தொன்னைதைத்து
நிலையானகெந்திதனைச்சுத்திசெய்யே. (௪௬௯)

## இதுவுமது-வேறுபற்பம்.

செய்யப்பாகெந்திநெய்மூன்றொன்னைதைத்து
சீரடாசாரணைவேர்பானைக்குட்பாதிவைத்து
மெய்யப்பாஜலம்பதக்குவதிலேவிட்டு
விதமானகுச்சியினாற்பாலம்போட்டு
வையப்பாவதன்மேலேதொன்னைதைத்து
வளமானபானைவாய்ச்சட்டிகொண்டுமூடி
உய்யப்பாவொருசாமமெரித்தாயானால்
வுத்தமனேயெடுக்கிலதுபற்பமாச்சே. (௪௭௰)

ஆச்சப்பாபற்பமதுபணவிடைநெய்தேனி
லன்புடனேகொண்டுவிட்டால்தீரும்நோய்கேள்
நீச்சப்பாமுன்னுரைத்தவியாதியெல்லாம்
நிலைகெட்டுவோடிவிடுஞ்சொன்னேன்சொன்னேன்
வாச்சப்பாவடுக்குக்கற்சுண்ணமோடு
வளமானதுருசிரண்டுஞ்சரியாய்தூக்கி
பாச்சப்பாகல்வத்திலிட்டுநீயும்
பண்பானசித்தண்டத்தயிலத்தாட்டே. (௪௭௧)

ஆட்டுவாய்சாமமிரண்டாட்டிக்கொண்டு
வாராதரணங்களுக்குத்துணியிலூட்டி
ஊட்டுவாய்புரையோடும்புண்கட்கெல்லா
முத்தமனேவாய்மூடியுலர்ந்துப்போகும்

காட்டுவாய்பேதனத்தின்வியாதிக்கெல்லாம்
நல்குருவைப்பச்சரிசிகூழுகாச்சி
மாட்டுவாயரசிண துபழுப்பில்வைத்து
மைந்தனே துணியதனுற்கட்டிப்போடே. (௪௭௨)

கட்டியபின்நாள்மூன்றில்தீர்ந்துபோகும்
கருவான்சந்தனமூமிளாகுகூடம்
ஒட்டியேவரைத்துநீசிரங்கிற்பொட்
வுதிர்ந்துவிடுஞ்சொறிசிரங்குண்டானதெல்லாம்
கெட்டியேகுருவண்டிக்கூடுதன்னரில்
கெடியானகள்ளஞ்சிரசமதனுட்டாக்கி
தட்டியேமண்டலந்தான்சென்றபின்பு
தனுவானகழற்சிக்குளடைத்துக்கொள்ளே. (௪௭௩)

## விஷங்கள் தீரும்-பற்பம்.

கொள்ளுவாயதன்வாயைக்கொம்பால்மூடித்
தேள்கொட்டிவந்தபேரிடத்திலியத்திரும்
நள்ளுவாய்கரத்திருந்துகீழேபோட்டால்
நலமகன்றவிஷங்களெல்லாம்நாடாதோடும்
விள்ளுவாய்கருவங்கந்தகடாய்த்தட்டி
விதமானசெம்பையுமேதகடாய்த்தட்டி
தள்ளுவாயானதுதானிறந்துதானுல்
தாம்பரத்தின்றகடதனைவாயில்லுவயே. (௪௭௪)

வைத்திடுவாய்கருவங்கத்தகடுதன்னை
வலதுகாற்றனைக்குடைந்துவைத்துக்கொள்ளு
மொய்த்திடுவாய்மறுநாளிலெடுத்துக்கொண்டு
முறையாகவிரண்டையுமேதகடாய்த்தட்டி
மெய்த்திடுவாய்நாகதாளிப்பிரம்புகொண்டு
விதமானவிருதலைக்குமிருபூண்கட்டு
கைத்திடுவாய்பிரம்பதனைப்பெட்டிதன்னிற்
கருவானபசலியூர்மசிநசியென்றுகூட்டே. (௪௭௫)

கூட்டுவாய்ப்பெட்டிதனைத்திறந்துபார்க்கக்
கொடிதானநாகமதுகாணுதப்பா
தீட்டுவாய்ஓங்கிலிவசிவாவென்று
தட்டினுல்வங்கத்தால்வந்துசேரும்

நெட்டுவாயரணைபச்சைப்பாம்பினேடு
நிலையானபச்சோந்திமூன்றுவாலும்
வெட்டுவாய்செம்முள்ளிவேராலப்பா
விதமாகவிதூநாலுங்கொண்டுவாவே. (௪௭௬)

விஷமிறங்கமோதிரம்.

கொண்டுவந்துமுன்செம்பிலூட்டிவைத்துக்
கொடிதானபவுத்ரநடுவாலிற்போடு
கண்டுவாவிஷந்தொட்டுவந்தானாகிற்
கருவானமுன்மந்திரத்தைச்சொல்லி
உண்டுவாமூன்றுதரங்கொட்டிவிட்டு
வுத்தமனேநிறைதடத்திற்கயிட்டிப்போடு
விண்டுவாவிஷமிறங்கிக்கீழேநிற்கும்
வேகமதாய்க்குடநீரைக்கவிழ்த்துப்போடே. (௪௭௭)

விஷமிறங்க-நசியம்-

போட்டவேவிஷமிறங்கிவோடிப்போகும்
புகழானமோதிரத்தையெடுத்துக்கொள்ளு
தேடவேமலைப்புரசனுப்புசேர்த்து
திறமானநாகவல்லியிதழுஞ்சேர்த்து
ஓடவேசிவத்தருகுகூடச்சேர்த்து
வுமிநீரிற்கசக்கிநீநசியம்பண்ணு
வாடவேவாயினுள்ளேகொடுத்துப்போடு
மைந்தனேவிஷங்களெல்லாம்வாங்கும்பாரே. (௪௭௮)

விஷமிறங்கப்புகை.

பாரப்பாபுகையிலையுமயிலிறகினேடு
பண்பானவெள்ளெருக்கன்வேருங்கூடி
சீரப்பாசுருட்டிபுகைகுடித்தாயானுற்
சிறப்பானகொட்டுவிஷந்தீருந்தீரும்
சாரப்பாவுப்பதனைப்பொடித்துவைத்துச்
சார்வானபூரம்துகொளுத்திவைத்து
நேரப்பாகண்சிரட்டைக்கொண்டுமூடி
நிலையர்கக்கடித்தவிடங்காட்டப்போமே. (௪௭௯)

### விஷமிரங்க-வேருவகைகள்.

போமென்றகுருந்பியையுந்தடவிக்காட்டப்
பொல்லாதகொட்டுவிஷம்போகும்போகும்
நாமென்றசிரியாநங்கைவேரைதின்றால்
நல்லதொருவிஷமெல்லாநாடாதோடும்
வாமென்றசடச்சிவேரைத்துத்தின்ன
வல்லதொருவிஷங்களெல்லாம்வாங்கும்வாங்கும்
ஆமென்றசிறுதிற்றண்டின்பாலையுண்ண
வறியாதவிஷங்களெல்லாம்வாங்கும்பாரே. (௬அ௰)

### எலிகடிவிஷந்தீர.

பாரென்றவேலியதன்சாற்றையுண்ணப்
பதினெட்டுயெலிவிஷமும்பாக்கும்பாரு
நேரென்றநாகரசவிந்துதன்னை
நெறியாகவெடுத்தாவின்பாலிற்போடு
காரென்றகட்டியதாயிருகிப்போகுங்
கருவாகயிருபத்தேழுமணியுஞ்செய்வாய்
சீரென்றருத்ராக்ஷங்கூடச்சேர்த்து
செபமாலைமுடித்துநீசிரசிற்போடே (௬அக)

### மழை-இடி-விலக-மணி.

போட்டுநீமழைதனிலேபோனையானால்
புகழானமழைத்துளிதான்மேல்விழாது
ஆட்டுநீதந்தத்தாற்சிமிள்தான்பண்ணி
யப்பனேபரக்காக்காய்கண்ணைவாங்கி
முட்டுநீமூன்கருவின்மணியைச்சேர்த்து
முழக்கமுள்ளசிமிள்தனிலேமூடிப்போடு
ஓட்டுநீமழையிடிகளுன்னைக்கண்டால்
வோடியேவிலகும்டாவுண்மைதானே. (௬அஉ)

### மிருகங்கள்விலக-மூலிகை.

தாரென்றமூலிகரிவிரட்டிக்கப்பா
தப்பாமலாதித்தவாரந்தன்னில்
வேரென்றமூன்றுநூல்காப்புகட்டி
விதமாகவேகொளுத்திதீபதூபம்

வானென்றபழந்தேங்காய்நிவேதனமேசெய்து
வண்மையுடன்ஓம்சடாசடாவென்று
ஆனென்றவாயிரத்தெட்டுருசெபித்து
வவ்வேரைமறுவாரம்பிடுங்கிக்கொள்ளே. (சஅஙு)

கொள்ளுவாய்ச்சாலவதைபலிகொடுத்துக்
குறியானவேரையுநீபிடுங்கிக்கொண்டு
நள்ளுவாய்நிழலுலர்த்திச்சூரணித்து
நலமானசெப்பதனில்வைத்துக்கொண்டு
அள்ளுவாய்முன்னுபுவேதியானஞ்செய்து
ளச்சரியமந்திரத்தான்மிருகஞ்சேராது
விள்ளுவாய்வேம்பினுக்குக்காப்புகட்டி
வேர்பிடுங்கிக்குலிசத்திலடைத்துக்கொள்ளே (சஅச)

## பேய்களைவிரட்டமூலிகை.

கொள்ளவேமுன்னுபுநீதியானஞ்செய்துக்
குறியாகமுன்பாந்தான்பிடுங்கிக்கொள்ளு
விள்ளவேபிசாசமெல்லாம்வெருண்டோடிப்போம்
விழியடக்கிக்கட்டிவிடிற்பசாசுநீங்கும்
தெள்ளவேமுருங்கைப்பட்டைச்சாற்றிலப்பா
திறமானகாயமதையுரைத்துக்கொண்டு
நள்ளுவாய்வாய்வதுவேபுடைத்துதானல்
நடுங்கவேபூசிவிடுதீரும்பாரே (சஅரு)

## தலைமுழுகத்தயிலம்.

பாரப்பாவெட்டிவேர்விளாமிச்சிவேரும்
பண்பானகொடிவேலிதேவதாரம்
நேரப்பாவகிற்கட்டைமிலாக்கட்டை
நிரையாகவகைபத்துபலமேநூக்கி
தீரப்பாபாண்டத்தில்நொருக்கிப்போட்டுத்
திரமாகவதிற்றாணி ஜலம்விடுத்து
சாரப்பாபடியிரண்டாய்க்குறுக்கிக்கொண்டு
சாங்கமாய்வெளுச்சியெண்ணெய்சேரே. (சஅசு)

சேர்த்திடுவாயாவினதுசெய்யுங்கூடத்
திறமாகவகைக்குவொருபடிதான்சேர்த்து
வார்த்திடுவாய்சிம்பெண்ணைபடிகாலப்பா
வளமானவாவின்பாற்படிதான்மூன்று
காய்த்திடுவாய்காத்தொட்டிக்கரிசாலையோடு
கருவானவகைக்குச்சார்படிதானென்று
சேர்த்திடுவாயிருசீரகங்கோஷ்டமோடு
கிருத்திடுகஸ்தூரிமஞ்சளெல்லாமாமே. (சஅஎ)

ஆமென்றவால்மிளகுவகைக்குப்பலமைந்து
வாச்சரியங்கிராம்புபத்ரிஜாதிக்காயும்
வாமென்றநாகப்பூசதகுப்பைமதுரம்
வல்லதொருவெள்ளுள்ளிகோரோசனையுஞ்சேரு
வேமென்றமுன்சரக்கைப்பதக்குநீரில்
விறவாகப்படியொன்றாய்காச்சிக்கொண்டு
மேமென்றகோரையுடகிழங்கினோடு
விதமானசவரிகொத்துவகைக்குப்பலமொன்றே. (சஅஅ)

ஒன்றானவகைபத்துங்கொடுப்பைச்சாற்றி
லூறவைத்துப்பழச்சாருபடியிற்போட்டு
நன்றாகக்கரைத்துவெல்லாஞ்சேர்த்து
நலமானவெண்ணெய்தனையடுப்பிலேற்றிக்
குன்றுமற்றிரியெரித்துமெழுகுபோலக்
குரியானதயிலத்தைவடித்துக்கொண்டு
வென்றானகணபதியைப்பூசைசெய்து
விளங்கியேமுழுகிவரகுணத்தைக்கேளே. (சஅகூ)

கேளப்பாசிரத்திலுள்ளநோய்கள்போகுங்
கெடியானகண்ணெரிப்புப்புகைச்சல்தீரும்
வாளப்பாமேகச்சூடகன்றுபோகும்
வண்மைமுடியுதிர்ந்துமயிர்முளைத்தவோங்கும்
நாளப்பாபித்தமொடுசூலைபோகும்
நன்றாகக்குட்டமொடுசிரங்கதெல்லாம்

ஆளப்பாப்த்தியமாய்முழுகிவந்தா
லாச்சரியநோய்க்ளெல்லாமகன்றுபோமே, (௪௯௰)

## எருக்கன்-தயிலம்.

போமென்றவெருக்கிலைடுவேம்பின்சாரும்
புகழானபர்கற்சார்வீழிச்சாறும்
நாமென்றகுமட்டிச்சார்வகைக்குப்படியொன்று
நலமானவேப்பெண்ணெய்படிகாலப்பா
வாமென்றவிளக்கெண்ணெய்படியளையுஞ்சேர்த்து
வல்லதொருபாண்டத்திலெல்லாம்விட்டு
ஓமென்றஜாதிக்காய்கிராம்புபத்ரி
வொவ்வொன்றுக்கோர்பலந்தானிருத்துக்கொள்ளே ()

கொள்ளுமென்றசாக்கையெல்லாம்வெல்லுமூலி
குடோரியென்றவசுவத்திப்பஞ்சாங்கம்வாங்கி
நள்ளுமென்றபொடிபொடியாய்நருக்கிக்கொண்டு
நலமானநிழலுலர்த்திப்பாண்டத்திட்டு
விள்ளுமென்றகுழித்தயிலமிறக்கிக்கொண்டு
விதமானசாக்குவறுபத்துநாவில்
தெள்ளுமென்றசாக்கதனிற்சுருக்குதாக்கத்
திறமாகக்கட்டியதுநீறும்பாரோ. (௪௯௨)

பாரப்பாபற்பங்கள்ளிச்சாற்றலாட்டிப்
பதனமாய்ம்புடமிட்டவேவெந்துபோகும்
நேரப்பாகட்டியதுநீறிப்போகும்
நிலையானமூன்றையுமேசெந்தூரித்தால்
ஆரப்பாவித்தையதுவெல்லாமாடு
மாச்சரியமிக்கமுறைசெய்யாவிட்டால்
தீரப்பாமற்றதெல்லாந்தீர்க்கமில்லை
தேகசித்திவாதசித்தித்திறந்தானுமே, (௪௯௩)

ஆமென்றமுறையதுவேசெய்தாயானு
லார்தானும்நூல்பார்த்துச்செய்வாரப்பா

வேமென்றவந்தர்தகுருவைத்தானும்
 விரைவாகமனந்தனிலேநினைத்துச்செய்தால்
நாமென்றமூனாயெல்லாஞ்சித்தியாகும்
 நலமானகுருவேறுநூல்வேறானல்
ஓமென்றுசெய்ததெல்லாம்வெவ்வேறாகும்
 வுத்தமனேயோர்மனதாயுரைத்துப்பாரே. (௬௬௪)

பாரப்பாபூமியிலேபிறந்தாயானாற்
 பண்பானசிவயோகமார்க்கம்வேண்டும்
நேரப்பாவாசியொடுவசியம்வெண்டும்
 நிலையறியவஞ்சனமுமாற்றம்வேண்டும்
சீரப்பாகாயசித்திதேவிபூசை
 தீர்க்கமுடனிவைகளெல்லாமறியவேண்டும்
ஆரப்பாவிதுகளெல்லாமறியாவிட்டா
 லருண்ஞானிசித்தருக்குளடுக்கொணாதே. (௬௬௫)

## தேவதைகள்சித்திகூறல்.

அடுக்கொணாதென்பதென்னவப்பாகேளு
 வாச்சரியமுட்கருவிபுறக்கருவிபோலத்
துடுக்காந்தேவதைகள்சத்திச்சிவமுமாகத்
 தோணவேமனைந்துவெளியுள்ளத்துமாவார்
கடுக்கானதேவதையையறியவென்றாற்
 கருவானவைந்தெழுத்திற்சித்திவேணும்
முடுக்கானதேவதைதான்சித்தியானல்
 முடியாதகாரியங்கள்முடிக்கலாமே. (௬௬௬)

ஆமென்றவயிரவரேசித்தியானு
 லாச்சரியப்பற்பமொடுஞ்செந்தூரஞ்சித்தி
நாமென்றவாலையவள்சித்தியானல்
 நலமானகாயசித்திவாதசித்தியாகும்
வேமென்றசித்திதனக்கெல்லாமாகி
 வெகுசோதிபிரமமடாசிவமுமாகும்
ஓமென்றவொருவனைத்தானறிந்தாயானு
 லுன்னைவிடப்பெரியவர்களில்லைதானே. (௬௬௭)

தானென்றநூல்களிலேசொல்வதெல்லாந்
தப்பிதமேயில்லையடாநிஜந்தாமப்பா
வேனென்றகுருவாக்காற்கருவைக்கேட்டால்
விளங்கியதோர்வித்தையெல்லாமாடுமாடும்
நாமென்றகுருவாக்கில்லாவிட்டால்
நாடினதோர்கருக்கள்தனைக்காணமாட்டார்
தேனென்றகருவூரார்கொங்கணற்குந்
திறமானவாக்கியமவ்விடத்திறப்பாரே. (சகூஅ)

பாரப்பாவெந்தனைப்போலொருவர்சொல்லார்
பலவிதமுஞ்சொல்லிவிட்டேனிந்தநூலில்
நேரப்பாபலநூலைப்பார்த்தாயானால்
நிலைகண்டுகரையேறமாட்டாயப்பா
ஆரப்பாதிருமூலரனைகஞ்சொன்னா
ரதன்சுருக்கங்காலாங்கியையர்கண்டார்
சாரப்பாவேதாந்தசாரமாகச்
சட்டமுடன்யெந்தனுக்குச்செப்பினாரே. (சகூகூ)

வேதாந்தங்-கூறல்.

செப்பினார்சரிதையுந்தான்பெரிதாய்க்கொண்டு
சடம்நிலைத்தவாதிசிவன்வரையைக்கட்டி
ஒப்பினார்முடிந்ததொருமூலமென்று
வுமையவளைத்தான்வணங்கியுருதியாச்சு
தப்பில்லாநாடைந்தவழியேசொன்னேன்
தவஞ்செய்தபேர்களுக்குமெந்நூல்சித்தி
அப்பியேவாத்தாளைப்பூசைபண்ணி
யாரறியப்போராராத்தாளைத்தானே. (ருா)

ஆத்தாளும்வயசுபத்தாயிருந்தமார்க்க
மறிவுள்ளோரறிவார்களருபமப்பா
மாத்தானுமில்லையென்றுற்பிறவிநோயை
மாற்றுதார்பார்க்கவென்றுன்மயக்கம்பாரு

நீத்தாரும்நெருப்பாருங்கடந்துநின்றால்
நீயறிவாய்வயசுபத்தாயிருந்தாளாத்தாள்
வேற்றாளுமில்லைவேறொருவரில்லை
வேலனைப்போலெக்காலுமிருக்கலாமே. (ருாக)

ஆமென்றவகஸ்தியருமொன்றுசொன்ன
ரறிவில்லாமனிதர்களுமயங்கச்சொன்னார்
மேமென்றவாக்கையைவிட்டுயிர்போம்போது
விண்ணொடுவிண்மண்ணொடுமண்சேர்ந்ததென்றும்
ஓமென்றவப்புவினிலப்புவென்று
முயர்வாய்வுவாயுவினிலேயொடுக்கமென்றும்
தேமென்றதேய்வினிலேதேயுவென்றுந்
தேற்றினாந்தவுயிர்பிறவாதென்றே. (ருாஉ)

பிறவாமற்போவதற்குவழியேயில்லை
பிசகாதபூதமப்போபோகவில்லை
உறவாகபூதமைந்தும்நாள்கடோறும்
வொழிந்தொளித்துப்போகுமொருவுண்மைகேளே
குறைவானமலமதுதான்பிருதுவியாச்சுக்
குறியானஜலந்தனிலேஜலமுமாச்சு
இறவாதவிந்துவதுதேய்வுமாச்சு
யென்சொல்வேன்வாய்வுமடாகழியலாச்சே. (ருாங)

ஆச்சுதென்றமூச்சுமடாவாகாயமாச்சு
வஞ்சமடாதினதினமுங்கழிவதாலே
சாச்சுதென்றதேகமதுதளர்ந்துபோச்சு
சாற்றுவேன்ஜீவாத்மாபரமாத்மாவிரண்டும்
வாச்சுதென்றசத்திசிவமிருவராவார்
வல்லவரவ்விருவருக்கோசாவதில்லை
காச்சுதென்றபூதமைந்தைவீடாய்க்கட்டிக்
கைலையைப்போலிருந்தார்பிண்டத்துள்தானே. (ருாச)

தானென்றஜீவனுயிரிருவராச்சு
தானறிந்தால்பிரம்மலயிதப்பிப்போச்சு
நானென்றபூதமதுகழிந்துபோகும்
நலமானவாக்கைதுகட்டுவிட்டால்
மானென்றஜீவாத்மாதேகமாகும்
மகத்தானபரமாத்மாவதனுட்சேர்ந்து
தானென்றசூட்சுமதேகமாகி
ஜெனித்தகெர்ப்பபிண்டத்திலடையும்பாரே. (௫௯)

பாரப்பாவிவர்களைப்போயடைந்தபோது
பழுத்தகனிவீழ்ந்தாப்போற்பிறக்கும்பாரு
நேரப்பாவந்துமதுசேர்ந்துக்கூடும்
நிலையாகத்தரித்ததொன்றுகிரகவேளை
ஆரப்பாகிரகத்தின்சமர்த்தைப்போல
வாயுளுமுண்டாச்சவற்றின்பலன்றான்பாரே
வேரப்பாகூட்டிலிருவருமேசேர்ந்தால்
வெவ்வேறாயிருப்பர்புத்திவேறாங்கேளே. (௫௬)

கேளப்பாவிருவரையுமொன்றாய்ச்சேர்த்துக்
கெடியானவுயிரதைநீபிடித்துக்கொண்டால்
வாளப்பாகூட்டைவிட்டும்வரவுமாகும்
வல்லமறுகூட்டினிலும்புகுதலாகும்
ஆளப்பாதேவதையுநீயேயாவா
யாச்சரியங்கடிகையிலாயிரங்காதஞ்செல்வாய்
நீளப்பாவிவ்வுயிர்க்குப்பிரமனுக்கினையில்லை
நிகரில்லைகத்தடங்குமுயிரிப்படிதான்பாரே. (௫௭)

பாரப்பாஜேமனென்றுந்தூதனென்றும்
பகர்கின்றகாலனென்றும்பாசக்கயிற்றனென்றும்
ஆரப்பாவறியாமற்சொல்வதைத்தா
னறிவாகச்சொல்லுகிறேனென்றுகேளு

நேரப்பாநக்ஷத்திரக்காலனுச்சு
நிலையர்ணகிரகந்தானேமனுச்சு
சாரப்பாராசியதுக்குதனுச்சு
சாற்றியதோர்திதியதுவேகயறுமாச்சே. (௫௱௮)

ஆச்சுதென்றதேகம்வாகனமுமாச்சு
வைந்துபோரற்கூடதுவுண்டாக்கலாச்சு
நீச்சுதென்றசெனனத்திற்கிரகந்தானும்
நிலையாகத்தங்கவயதுமுடிந்ததானல்
காச்சுதென்றதேகமதுகனிந்துபோகும்
கருவானவிருவருமேகூட்டிற்சேர
மாச்சுதென்றவாயுதங்களொன்றுமில்லை
வனுவில்லைகதியில்லையென்றுசெல்லே. (௫௱௯)

செல்லுமென்றவெமனேதுபிடிப்பதேது
செனிப்பிக்கப்பிரமாவுமிங்கேயேது
வெல்லுமென்றவண்டத்தைதிருஷ்டிக்கத்தான்
விதமானபிண்டத்திற்கவர்கள்பாரு
நல்லுமென்றபிண்டத்திற்கிவர்களாகி
நலமானசத்திசிவமிவர்களாகும்
அலலுமென்றபிண்டத்திற்சத்திசிவன்தானு
மண்டத்திற்சத்திசிவமதைப்பூசித்தாரோ. (௫௱௰)

பூசித்தாரிவர்களுமேதவத்தோராச்சுப்
பூர்த்தியாய்நேசித்தாற்பிறப்பும்போச்சு
நேசித்தாலப்போதுபிரமத்தோடே
நெடுநாளும்வாழ்ந்தங்கேயிருக்கலாகும்
யாசிப்பாய்கைலாசஞ்சொற்கலோக
மடக்கமதுப்ரமத்திலடக்கமாகும்
வீசிப்பாய்கூடமதுசமையும்போது
விகற்பமாய்கிரகமிரண்டுசேர்ந்தார்கேளே. (௫௧௧)

## கிரகதிசை-கூறல்.

கேளப்பாவொருவன் திசையுள்ளமட்டுங்
கெடியாகவிருப்பான்வேறொருவர் திசையில்
மாளப்பாவவமிர்த்தாய்க்கொல்வானப்பா
வல்லதொருபருவமேபசாசமாவார்
வாளப்பாவவன்வயசுவுள்ளமட்டும்
வலுவானசூட்சமதேகமாவான்
நீளப்பாவிவர்களாக்கினையினாலே
நிலையாகக்கூட்டினிலேசெலவொட்டானே. (௫௧௨)

செல்லொட்டான்வுயிரொழுத்தையறிந்தோனாற்
செயமானமூசியாவன்தேவனாவன்
வல்லொட்டான்மோகத்தைநினைந்துசெய்தால்
வலுவானபெண்கள்தனைப்பிடித்துக்கொள்வான்
வெல்லொட்டாதுயிரொழுத்தையறிந்ததெய்வம்
விதமானமந்திரத்திலடங்காதப்பா
சொல்லொட்டாதேவர்களுமனிதராவார்
சுகமானமனிதர்களுந்தேவர்பாரே. (௫௧௩)

## பீஜவாரங்-கூறல்.

பாரப்பாகிரகமைந்தக்ஷரமேயாகும்
பருவமுள்ளஙகாரமதுவாதியாகும்
நேரப்பாவாதித்தவாரமாகும்
நிலையானவகாரமதுதிங்களாகும்
வேரப்பாசிகாரமதுசெவ்வாயாகும்
விதமானவகாரமதுவெள்ளியாகும்
சீரப்பாயகாரமதுவியாழமாகும்
சிறந்ததொருவிவர்களதுவைந்துபேரே. (௫௧௪)

பேரானவரிதானுஞ்சனியனாகும்
பெரிதானமூக்கோணச்சுழியுமாகும்
கூரானசுழிதானேபுதனுமாகுங்
குழியாமேற்புருவத்திற்சுழியேயப்பா

வாரானவாரமதுவேழுபேராம்
வகையானவக்ஷரமேயேழுருபம்
வீரானவோங்காரமிரண்டக்ஷரமேயாகும்
விதமுள்ளபாமாச்சேயிரண்டுந்தானே. (ருாரு)

தானென்றவோங்காரமருகேகேது
தனுவாச்சுவுயிராச்சுப்பேருமாச்சு
வேனென்றவக்ஷரந்தான்விளங்குமல்லால்
வெல்லுமென்றபேர்கள்வேறொருவரில்லை
ஊனென்றமனுதேகமிதனுலாச்சு
வுலகத்தில்யுகமுடிக்கவிவர்களாகும்
கானென்றவுலகத்திலீராகுகேது
கதிரவனுமதியுமடாவிரண்டுங்காணே. (ருகசு)

காணப்பாவெழுலோகமேழுவாரங்
கருவானபரம்பிரண்டுங்கீழ்மேலாடும்
தோணப்பாவெழுவாரமெழுசாண்திரேகம்
துடியானபாம்பிரண்டுங்கீழ்மேற்சுற்றும்
பூணப்பாபீஜனிலைகண்டோரில்லை
பீஜத்திற்சுழன்றெழுந்துவலமாய்சுற்றி
ஆணப்பாவண்டபிண்டகபால்முட்டி
யதிசுருக்காய்வெளியினிலேவந்துயோமே. (ருகஎ)

போமென்றவலதுபுரமண்டமுட்டிப்
பின்னுதயமிடதுபுரமார்பிற்குத்தும்
ஆனென்றபாம்பிரண்டுங்கலையிரண்டாகு
மதைபிடித்துவடக்குமதிரவியுமாகும்
வானென்றபாம்படக்கப்பெட்டியப்பா
வல்லதொருகபாலமடாவடங்குந்தானே
தேனென்றபாம்பதனையடக்காவிட்டால்
தேன்போலேதிரேகமதுமாறும்பாரே. (ருகஅ)

பார்க்குமென்றபாம்பதுவுமிடங்கீழாகும்
பரிவானதேய்வதனிற்சுழன்றுநின்று
ஏர்க்குமென்றபாதாளவாசலாலே
யெளிதாகக்குமைந்தோருங்கொஞ்சங்கொஞ்சம்
தீர்க்குமென்றதீபனத்தீயேழும்பற்றும்
திறமானபீஜத்திற்பின்னுஞ்சுற்றும்
கார்க்குமென்றபாம்பதுதான்கனலேசுற்றக்
கண்டுதடாநதியெனவேயுந்திக்கீழே. (ருகசு)

கேளப்பாசிவமானவக்னியேசங்கரிக்குங்
கெடிவாய்வென்சத்தியடாவேந்தித்தள்ளும்
வாளப்பாகதிர்மதியும்லோகந்தன்னில்
வளமானசுருட்டுப்போற்சுற்றுங்காணும்
ஆளப்பாகன்னிவலமார்பைச்சுற்றி
யண்டபிண்டகபாலத்தில்முட்டிவந்து
கேளப்பாவிடமார்பிற்சுழன்றுநின்று.
கதித்தெழுந்ததேயுவிலேசுழன்றுபோமே. (ருஉ௰)

போமடாமார்பிலேசுழன்றதாலே
புகழானபலிபீடமதுவுமாச்சு
வாமடாமநுக்களை திருஷ்டிக்கலாச்சு
வல்லகுட்டிகோலவடத்திருக்கலாச்சு
நாமடாவிந்துபோற்சுழன்றதாலே
நலமானசுரோணிதம்பீடத்துள்ளாச்சு
ஆமடாவதுதெளிந்தால்மூர்த்தமாச்சு
வாதியிருகூறதனையறிந்துக்காணே. (ருஉக)

காணப்பாசிவகூறிற்சுக்கிலமேசிறக்கும்
கருவானசுழுத்தியிற்சுரோணிதமேசிறக்கும்

தோணப்பாசுழன்றுவெழுங்காற்றினாலே
துடியானதிரேகத்திற்சுணைதான்பூட்டி
பூணப்பாசத்திகூறிடத்திற்சேர்த்துப்
பொழிந்திடுமேபூரணநாளப்பாபார்த்து
ஆணப்பாகபாலத்திற்சுக்கிலமேநின்று
வாண்புரத்திலிரங்கியேவடங்குந்தானே. (௫௨௨)

தானென்றவுளர்பிறையில்விந்துவூறித்
தளமானபூரணத்தினிறைத்துக்கொள்ளும்
வேனென்றதேய்பிறையில்வழிந்தேபோகும்
விதமறியாரிதைவிட்டாற்றவமேபோகும்
போமென்றசுக்கிலசுரோணிதமப்பா
பொருளானசத்திசிவமிவையிரண்டாம்
நாமென்றசிவன்றானும்வெளியிற்போனால்
நல்லவுயிரிருப்பதில்லைத்தவங்காசென்றே. (௫௨௩)

காசென்றவிந்துவுக்குச்சொல்பேர்மெத்தக்
கருவென்றுஞ்சிவனென்றும்நாதனென்றும்
பூணுமென்றபொருளென்றுஞ்சித்தனென்றும்
புகழாகப்பூண்டிருப்பாரிவர்களாகும்
தோணுமென்றவாதிவஸ்துதேகமாச்சு
துணையாகவனாதிவஸ்துவுயிருமாச்சு
நாணுமென்றவுயிர்க்குதவஞ்சிவமேயாகும்
நல்லவுயிரிருந்துதவம்புரியக்கேளே. (௫௨௪)

கேளப்பாபூரணநாளாதிவஸ்து
கதியாகவாத்தானைப்பூசைசெய்து
வாளப்பாசுக்கிலவர்ன்னபாத்திரத்தில்
வகையாகவாதிவஸ்துவாங்கிக்கொண்டால்
நீளப்பாதேகவுயிர்நிலைத்துப்போச்சு
நிலையானதவசிவனைக்காணலாகும்
கோளப்பாவில்லையடாவுனக்குத்தானுங்
கொள்கியேவொளியானவொளியிற்பாரே. (௫௨௫)

பாரப்பாவெளியானவொளியிற்சேரப்
பாடுகளோமெத்தவுண்டுபரிந்துபாரு
நேரப்பாசரிதையிலேநேர்ந்துநின்று
நெடிதானவாயிரத்தெண்பிறைபூசித்து
வீரப்பாதிரோகம்விட்டுப்போச்சுதானல்
வீறுணகிரிகைசெய்யப்பிறையாற்காணும்
ஆரப்பாகிரிகையிலேவதுபோற்செய்தா
லதுகலந்துதேகத்திற்பூசிப்பானே. (ருஉ௬)

பூசிப்பாறெட்டிரெட்டிமூலரெட்டிப்
புகழானமூலத்திற்பூசைசெய்து
ஆசிப்பானச்செனனஞானங்காணு
ஞகமெத்தான்மறுசெனனமாவன்காணும்
நேசிப்பானறிவோடேநாசிரெட்டி
நெறியாகப்பூசித்துஞானங்காண்பான்
வீசிப்பான்வெளியோடேவொளியுமாவான்
விண்ணவர்கோனிடத்தினிலுஞ்சேருவானே. (ருஉஎ)

சேருவான்சிலவுயிர்கள்பூனைத்துக்கொண்டு
சிவந்தேடிவைந்திரட்டிப்பூசித்தாக்கல்
யேருவான்வரையாறுந்தாண்டிநின்று
யெல்லையற்றவெளியோடேவொளியுமாவான்
ஆருவானதிலிருந்துவாசையுற்று
லண்டம்விட்டுப்பாதாளம்விழுகலாகும்
சாருவான்சிவத்தோடேசிலநாட்சார்ந்து
சரீரத்தைக்கொன்றுநின்றவுயிர்போலாமே. (ருஉஅ)

ஆமென்றவொளிசேர்ந்தவெளிதானப்பா
வருபமோசொரூபமோயாழுங்காணர்
நாமென்றநக்ஷத்திரலோகந்தன்னில்
நல்லமுநிதபோதனர்கள்வாழ்ந்துதானும்

போமென்றவெளியோடேவொளிபோசசென்பார்
போனவிடஞ்சுற்றியண்டமட்டுஞ்செல்லும்
வேமென்றபிரமசத்திக்கிருட்டோமெத்த
வெளியானசிவன்சேரவெள்ளிச்சமாச்சே. (௫௰௯)

ஆச்சுதென்றசிவனுக்குமுகமேவைந்து
வந்தமுகங்கண்மூன்றுசுழியுமூன்று
வாச்சுதென்றசந்திரனுமிரவியோடும்
வலுவானவக்கினியும்விழிமூன்றாகும்
காச்சுதென்றபச்சையொடுசிகப்புவெள்ளை
கருவானமஞ்சளொடுகருப்புமாகும்
மூச்சுதென்றதிரிமூர்த்திமஹேஸ்வரன்தான்
முடிவானசதாசிவத்தின்மூலம்பாரே. (௫௱)

பாரப்பாவிவர்களுமேயெங்குமாவார்
பரப்பானவண்டமெங்குநிறைந்தேசிற்பார்
ஆரப்பாமுகமைந்துங்கண்மூன்றெட்டு
மஷ்டாங்கநிறைந்ததொருதேகமாகும்
வீரப்பாவெல்லோருமொன்றேயாவார்
விரோதத்திற்கெட்டுப்பேர்பிரிவுமாவார்
சாரப்பாபிரம்மாவேபூமியாகுஞ்
சமஸ்தானவிஷ்ணுவுந்தான்மேகமாமே. (௫௱௧)

ஆமென்றருத்திரனுங்கதிரோனுகு
மாச்சரியச்சந்திரனுஞ்சதாசிவனுமாகும்
வாமென்றவதன்மேலேமஹேஸவரனுமாகும்
வல்லமைமஹேஸ்வரனுக்குநீலமாகும
போமென்றவெளியோடேவொளிபோச்சென்பார்
புகழானமஹேஸ்வரனேதேவாகும்
நாமென்றவொளியதுவெவ்வேறாய்நின்று
நல்லவிந்துபலவிதமாய்த்தோற்றுங்காணே. (௫௱௨)

காணப்பாவெழுமேகமேழுவானங்
கருவானமின்னொளிபோலெட்டுமோகும்
தோணப்பாதிக்கெட்டுப்பாலகருமாகுந்
துடியானமஹேஸ்வரனுக்கிணையேசொல்லும்
பூணப்பாமஹேஸ்வரனேவாய்வுமாகும்
பூமியண்டபிண்டமுமேநிறைந்துநிற்பார்
வீணப்பாமஹேஸ்வரனுமலர்வாக்குள்ளே
விலகாமனிறைந்திருக்கத்தேடுறானே. (ருகங)

தேடுறான்மஹேஸ்வரன்றானிலவிப்போனாற்
றிறஞ்செலுத்தயாராலேமுடிவதுண்டு
ஆடுறானம்பலத்தினின்றுவாட்ட
மடவானவண்டபிண்டமெல்லாமாடும்
கூடுறானவர்பாதம்பிடித்துக்கொண்டாற்
குழந்தைவயதாச்சுதடாசாவுமில்லை
சாடுறான்சதாசிவனுந்தேவரெல்லாஞ்
சாருநிலைபெற்றவழிசாற்றினேனே. (ருகச)

சாற்றினேன்பிரம்மமென்றவஸ்தைமுலம்
சண்டமென்னுமஹேஸ்வரனேயதற்குள்ளாகும்
போற்றினேன்குருவுடையமுலமெல்லாம்
புந்தியுற்றோரிதனைநிலைத்துநின்றார்
வாழ்த்தினேன்சாகாக்கால்தலையுமப்பா
வால்போலவாகுமடாவழியேசென்றால்
தேற்றினேனிம்யார்க்குமியாருங்கண்டு
திடசித்தனென்றுசொல்லப்பெயருமாச்சே. (ருகரு)

பேரான்பதினெட்டுப்பேர்களுந்தான்
பெரிதானமயக்கமிதைமறைத்துவைத்தார்
ஊரானவூர்தனிலேசொல்லப்போகா
வுறுதிபெற்றபிள்ளைகட்குச்சித்தியாகும்

பாரானபூமியிலேபடைத்தவெல்லாம்
  பரிந்துபாரிதனுலேயாச்சுவாச்சு
வேரானவேர்முதலாமவைகளோடும்
  வேதாந்தசாரமெல்லாம்விளங்கினேனே. (ருகசு)

விளங்கினேன்ரேசகபூரகும்பம்
  விதமானவீடுதானிலேத்தகம்பம்
துலங்கினேனிதையறிந்துகற்பங்கொண்டால்
  துலையாதவயசதுதானிருக்கலாகும்
விளங்கினேனதைவைத்துயானும்நின்றேன்
  விதமானரேசகத்தையண்டத்திற்பாரு
அருங்கினேனிம்மூலமாத்மாவிலுண்டு
  வதையறியவண்டத்திலொன்றுகேளே. (ருகஎ)

கேளப்பாவுயிர்கள்ரேசகமேயாகுங்
  கெடியானசிலவுயிர்கள்கும்பகமேயாகும்
வாளப்பாசிலவுயிர்பூரகமேயாகும்
  வலுமூன்றுவிதமுமிப்படியேயாகும்
மீளப்பாகாற்றடிக்கத்தீயுமூணும்
  மிதமானதோயமதையேற்றுக்கொள்ளு
ஆளப்பாவிம்மூன்றுலிறைச்சல்காணு
  மதிரிடியுமாமழையுமின்னலாச்சே. (ருகஅ)

ஆச்சுதடாகாலாலேசாகாக்காலு
  மாதிசதாசிவம்பிடித்தகாலுமாகும்
வாச்சுதடாகாலறிந்தகர்த்தாவாச்சு
  வாசியென்றஜீவனுந்தானவனுலாச்சு
ஏச்சுதடாசிவனெழுத்தேயதுதானம்பா
  வெல்லைபெற்றுவிருக்கவுந்தானதுவேயாகும்
மூச்சுதடாவிதுமூன்றுமூலகமாகும்
  மூவுலகயென்றதொரும்பருமாமே. (ருகசு)

ஆமென்றகெருடன்முட்டையினியிப்பா
வந்திசந்தியுச்சியின்மூன்றுபொட்டுபோடு
போமென்றநிறமுந்தான்பேதமாகும்
பொழுதடங்கவதனைப்போய்கொண்டுவந்து
காமென்றகாளொளுங்கருலுமத்துங்
கிராம்புடனேகரிசாலைகண்ணிரெண்டும்
வேமென்றவிவையாவுமுலர்த்திக்கொண்டு
வேகமதாய்க்கற்பமதாய்கீற்றிக்கொள்ளே. (ருசய)

கொள்ளுவாய்சிமிழதனிற்பதனஞ்செய்து
குமரியென்றவாலேதனைப்பூசைபண்ணி
அள்ளுவாய்சிரசினிலேபோட்டாயானு
லவளோடியுஞ்பரமேவருவாள்காணும்
முள்ளுவாய்சுழல்வண்டுகட்டுக்கொடியும்போடு
வுயர்ந்ததொருவள்ளியிலேபிடுங்கிவந்து
நள்ளுவாயிரண்டுஞ்சூரணமேசெய்து
நலமானசூதத்திலனுபானங்கொள்ளே. (ருசக)

## வெட்டிவேர்தயிலம்.

கொள்ளுவாய்தம்பனமேயிதுதானுகுங்
குணுங்காமனுன்னிடத்திலிருக்கலாகும்
நள்ளுவாய்வெட்டிவேர்விலாமிச்சோடு
நலமானவகில்தேவதாரங்கூட்டே
விள்ளுவாய்சந்தணமுங்கொழுந்துங்கூட்டி
விதமெல்லாம்வகைப்த்துபலமேதூக்கி
தெள்ளுவாய்பானையிலேநருக்கிப்போட்டு
செயமானதுணிநீர்சேர்த்துக்கொள்ளே. (ருசஉ)

சேர்த்திடுவாயோர்விறகாலெரித்துவாங்கிச்
செப்புநிறம்படியொன்றாய்சுண்டச்செய்து

வார்த்திடுவாய்ஜாதிக்காகிரும்புயத்ரி
வல்லதொருகஸ்தூரிமஞ்சட்போல
கோர்த்திடுவாய்கோஷ்டமும்பூலாங்கிழங்கு
கொடிதானவால்மிளகுமேளங்கிளங்கு
நீத்திடுவாய்செஞ்சந்தனத்தோடுமயிர்மாணிக்கம்
நிறையாகவிதுவெல்லாஞ்சேர்த்துத்தூக்கே. (ருசங)

தூக்கிடுவாய்வகைக்கைந்துபலமேதூக்கித்
துடியானமாணிக்கங்களஞ்சுவைத்து
சேர்த்திடுவாய்ச்செங்கொம்பைநீராலாட்டிச்
ஜெயமானமெழுகுபதமாக்கிக்கொண்டு
தாக்கிடுவாய்கழுப்பெள்ளின்தயிலம்நாழி
தளமானவாய்கண்டசட்டியினிலிட்டு
ஏர்த்திடுவாய்தயிலத்தைப்பாண்டத்திட்டு
யிதமானதயிலத்தில்மருந்துபோடே. (ருசச)

போட்டிடுவாயதிமதுரஞ்சீரகமுங்கூட்டிப்
புகழானமிளகுகருஞ்சீரகமுஞ்சேர்த்து
மாட்டிடுவாய்சரக்குகளோர்பலமாய்தூக்கி
வல்லதொருசெங்கொம்பைநீராலாட்டி
ஊட்டிடுவாயாவின்பாற்படியிலப்பா
வுற்றதொருதயிலத்திற்சேர்த்துக்கொண்டு
கூட்டிடுவாயெண்ணெயைப்பாண்டத்திலிட்டு
கோதகலாவாணையிலெரித்துவாங்கே. (ருசரு)

வாங்கிடுவாய்மெழுகுபதமெரித்துவாங்கி
வல்கருஞ்சீசாவிலடைத்துக்கொண்டு
ஓங்கிடுவாய்ந்திசந்திதுவாலைபோட்டு
வொருமூன்றுநாள்வரையிற்ஸ்நானஞ்செய்து
நீங்கிடுவாய்புழுவெட்டுவண்டுகடியோடு
நில்லாதமயிர்கழிச்சலெல்லாம்போகும்
காங்கையிடுகண்புகைச்சலெல்லாம்போகுங்
கருவாகவெளுத்தமயிர்கறுத்துப்போமே. (ருசசு)

போமடாசவரியிலேச்சிறகதோடு
புகழான தேங்காய்ப்பால்விட்டுவாட்டி
ஆமடாமண்டலமேழுழ்கிவந்தா
லழகானமயிர்வளருஞ்சூடும்போகும்
வாமடாவாவாரைமூலங்கொண்டு
வண்மையுடன்பொடிபொடியாய்நருக்கிப்போட்டு
நாமடாபாண்டத்திலேயடைத்து
நலமானதூணிநீர்விட்டுக்கொள்ளே. (ருசஎ)

கொள்ளுவாயவ்விரகாலெரித்துக்கொண்டு
குழம்பலேபடியொன்றாய்சுண்டவாங்கி
நள்ளுவாய்மாவெட்டைமுத்துவாங்கி
நலமானகுழித்தயிலம்நாழியாக்கி
கள்ளுவாயிவையிரண்டுங்கலக்கிக்கொண்டு
கருவானஜாதிக்காய்சாபத்ரியேலம்
உள்ளுவாய்இரும்புநற்சீரகமுங்கூட்டி
புளவாகவகைக்கிரண்டுபலந்தான்தூக்கே. (ருசஅ)

தூக்கிடுவாயிதைபிடித்துவடித்துக்கொண்டு
தூடியாகவிருகூறாயினங்கள்சேர்த்து
தாக்கிடுவாய்தயிலத்திற்கலக்கிக்கொண்டு
தலைதோறுந்தளமாகதட்டிடைதான்தாக்கு
நீக்கிடுவாய்மேகமொடுசூலைபோகும்
நிலையானகுட்டமொடுங்கரப்பான்போகும்
வாக்கிடுவாய்பத்தியமாய்க்கொண்டாற்போகும்
வழிதப்பிநடந்தாக்கால்ரோகமாமே. (ருசகூ)

ஆமென்றவாவிமாவொன்றுவாங்கி
யதனுடையபின்னமிலாவரியகொம்பில்
தேமென்றவிரண்டிழக்குசீவிக்கொண்டு
திறமானதுளம்பினில்நாலுழக்குச்சீவி
வாமென்றசாம்பிராணிபலம்பொடித்து
வல்லதொருகுழிக்காயிலயிரக்கிக்கொண்டு
ஓமென்றபுழுகுடனேசவ்வாதுபத்ரி
வுயர்ந்தொருகுங்குமப்பூகிறும்புசேரோ. (ருருய)

சேரப்பாசாதிக்காய்கோரோசனையுங்கூட
ஜெயமானகஸ்தூரிகற்பூரத்தோடே
வாரப்பாருத்திராட்சம்வகைக்குக்காலாய்
வராகனிடைதூக்கியதைகல்வத்திட்டு
கோரப்பாதயிலம்விட்டுமைபோலாட்டி
நிலையானகொம்பினுடசிமிளில்வைத்து
கூரப்பாவாலையைத்தான்பூசைபண்ணி
குறியானபுருவமையமைதான்போடே. (௫௫௧)

போடுவாய்-ஐயுங்கிலியுங்காளிமாதேவி
புகழானவாலைபரமேஸ்வரிவசிவாவென்று
நாடுவாயாயிரத்தெட்டுருசெபிக்க
நல்லதொருஜெகவசியமிருகவசியமாகும்
தேடுவாயரசர்களும்வசியமாவார்
திடமானவஞ்சனத்தைச்செப்பக்கேளு
கூடுவாய்கருங்காரிவலக்கண்வாங்கி
குருவானகாரட்டைப்பிடித்துக்கொள்ளே. (௫௫௨)

கொள்ளுவாய்காரெள்ளுங்கூடச்சேர்த்து
குருவானமுன்கருவையுலர்த்திக்கொண்டு
விள்ளுவாய்பொடித்துநீதிரிசுருட்டி
மென்காராம்பகநெய்யில்விளக்கையேற்றி
அள்ளுவாய்மூதண்டவோட்டால்மூடி
லரியதொருமைசேரும்வழித்துக்கொண்டு
நள்ளுவாயேறழிஞ்சித்தயிலம்வாங்கி
நலமாகமத்தித்துச்சிமிளில்வையே. (௫௫௩)

வையப்பாமைதனைநீபோட்டுப்பார்த்தால்
வளமானநிதிதோணுந்தெய்வந்தோணும்
மெய்யப்பாகுகைதோணுஞ்சித்திரந்தோணும்
மேன்மையுள்ளமூலியெல்லாங்கண்ணிற்றோன்றும்
செய்யப்பாவிம்மார்க்கஞ்செய்வாராகிற்
ஜெயமானபொருடனைப்பூசிக்கவேண்டும்
பொய்யப்பாபோகாதுபிழைக்கச்சொன்னேன்
பூதலத்திலெனைப்போலியாருஞ்சொல்லாரே. (௫௫௪)

சொல்லாதபொருளையெல்லாஞ்சொல்லிவைத்தேன்
சுருக்கமடாயெத்தவுமேயடக்கிச்சொன்னேன்
வெல்லாதபொருளையெல்லாம்வெல்லச்சொன்னேன்
விழிமறைப்புஞானமெல்லாம்வெளியாய்ச்சொன்னேன்
வெல்லாதமந்திரத்தைவெல்லச்சொன்னேன்
வேதாந்தசாரமெல்லாமறியச்சொன்னேன்
வல்லானசித்தர்களுமிந்நூற்கண்டால்
வணங்கியேசிரத்தின்மேற்கொள்வர்தானே. (ருருச)

தானென்றமூலவர்க்கப்பிள்ளைகண்டால்
தாள்வணங்கிக்கொளவார்களென்றுசொன்னேன்
வேறென்றகைலாசப்பிள்ளைகண்டால்
வெகுசுருக்காய்க்கொணடோடிப்போவாரப்பா
வாவென்றஞானநூற்கிடையாதப்பா
வல்லமையாய்ப்பூசைகளிவ்வழியேசெய்வார்
காவென்றதெரிசனமேவேண்டுமென்றால்
கல்லிலும்நாராயணனுஷண்முகவாவென்னே. (ருருசு)

என்றுமேதண்டபாணிவசிவாவென்று
வெழுமனதில்நினைந்துதினஞ்செபித்தயானால்
அன்றுமேதெரிசனந்தானுனக்குமாகு
மவருடையபாதமதைவிடாதே
நின்றுமேயறிவாகப்பன்னிரண்டு
நிலையறிந்துவிந்நூலைப்பதனஞ்செய்வாய்
நன்றுமேயாகுமடாவுனக்கிந்நூல்தான்
நல்லநூற்றைம்பததியேமுழுமுற்றே. (ருருஎ)

## வாழி-விருத்தம்.

அண்டமெலாம்படைத்தளித்தேயழிக்கவல்ல
வாதிசத்திசிவம்வாழியமரர்வாழி
தெண்டிறல்சேர்போகாதுவருளாலுற்ற
ஜெனனசாகரமிதனையுலகிலுள்ளோர்
கண்டுணரப்பூமாதுவிளக்கமென்னுங்
கருதரியவெந்திரத்திலச்சிட்டோங்கக்
கொண்டுவந்தமருத்துவெனும்புனிதன்வாழி
குவலையத்திற்கண்ணுற்றோர்வாழிமாதோ. (ருருஅ)

## போகர்-ஜெனனசாகரம்-ருருஎ

முற்றும்-முற்றுப் பெற்றது.

உ

கடவுள்துணை.

# விளம்பரம்.

இதனால் சகலமான பேர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் மதுரை புதுமண்டபத்தில் புத்தகஷாப்புவியாபாரஞ்செய்யும்-வ- மகுதூராவுத்தர் கடையில் நானாவித தமிழ் தெலுக்கு கிரந்தம் பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய சில்லரைக்கோர்வைகளும் சோசியங்களும் வேதாந்தங்களும் தாலுக்குகளும் பழனியாண்டவர் ஜாவளி மேற்படி இரண்டாம்பாகம் கணேசர்ஜாவளி சாஸ்வதிஜாவளி பிரம்மானந்தஜாவளி கீதாமிர்தசாரங்களும் கலேஜிபுத்தகங்களும் புஷ்பாத செட்டியார் அவர்கள்பதிப்பித்தபுத்தகங்களும் ஆறுமுகநாவலர் அச்சிட்டபுத்தகங்களும் பாரதவண்ணம் இராமாயணவண்ணம் இராமர் அஸ்வமேதயாகவண்ணம் இன்னம் பலவிதமான புத்தகங்களும் மேற்படியாரிடத்திலும் சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை முல்லாசாயபுதெருவு(௫௭) வது நெம்பர் வீட்டிலிருக்கும் பூமாதுவிளக்க அச்சுக்கூடத்தலைவர் வே - பொன்னுசாமி முதலியாரிடத்திலும் விலைசரசமாய் விற்கிறபடியால் தேவையுள்ளவர்கள் மேற்படியாரிடத்தில் விலைசரசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

## இந்நூலையச்சிடமுயலுவோர்க்கு

## அறிக்கை.

கதிர்மதியோடுடுக்கணங்களுள்ளமட்டுங்
காசினிமேலிந்நூலையச்சியற்றத்
துதிமிகுவோருன்னார்கள்வினையாலோர்காற்
றுச்சமதாயெண்ணியபகரிப்பாராயின்
நதியதனிற்கலையைகற்றிநீந்திநோனும்
நற்றவர்கண்மனநோகசிந்தித்தோனும்
பதியதனிற்பரதாரம்விரும்பினோனும்
படுநரகிலாழ்ந்துபரகதிகாணாரே.